Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 34 | சுடர்: 28 | கதிர்: 205 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 5, புதன் 19.06.2013

**இந்தியா**



பக். 06

பீகார் அரசு விரைவில் கவிழும்: எதிர்வு கூறுகின்றார் லல்லு பிரசாத்

**உலகம்**



பக். 07

'ஜி-20' தலைவர்களை கண்காணித்தது பிரிட்டன்

**விளையாட்டு**



பக். 23

களத்தடுப்பில் அணி சிறப்பு: இங்கிலாந்து அணித் தலைவர் கருத்து

## லண்டனில் சிங்கக் கொடி ஏந்திய குண்டர்கள் ஈழத் தமிழர்கள் மீது மோசமான தாக்குதல்

லண்டன், ஜூன் 19

லண்டன், ஓவல் மைதானத்துக்கு வெளியில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட ஈழத் தமிழ் ஆதரவாளர்களுக்கும் அங்கு கூடிய சிங்கக் கொடி ஏந்தியவர்களுக்கும் இடையே மோதல் இடம்பெற்றுள்ளது.

இதில் பல ஈழத் தமிழ் ஆதரவாளர்கள் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.சி.சி. மினி உலகக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் தொடர் லண்டனில் இடம்பெற்று வருகின்றது. இதில் இலங்கை ஆஸ்திரேலிய அணிகள் மோதிய ஒரு நாள் ஆட்டம் நேற்று முன்தினம்

தொடர்ச்சி: பக்கம் 21



# '13' ஐ ஒழிப்பதற்கு இந்தியா விடாது

## கூட்டமைப்பிடம் மன்மோகன் நேரில் உறுதி

புதுடில்லி, ஜூன் 19

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிப்பதற்கு இந்தியா ஒருபோதும் ஆதரவு வழங்காது. அதை அப்படியே நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எம்மாலான உதவிகளை வழங்குவோம்.

இவ்வாறு நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்தார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதனைப் புதுடில்லியில் இருந்து 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

புதுடில்லியின் அழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று மாலை 5 மணிக்குத் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.



இதில் இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனும் உடனிருந்தார்.

இதன்போது, 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கு இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகள், வடக்கு - கிழக்கில் இராணுவப் பிரசன்னம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், நில அபகரிப்பு நடவடிக்கைகள், வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மன்மோகன் சிங் கூட்டமைப்பினரிடம் விரிவாகக் கேட்டறிந்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பிரதமர் மன்மோகன் சிங், இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் குறித்து இந்தியா கவனம் செலுத்தி வருகிறது.

13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கு இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சியில் மாற்றத்தை ஏற்படுத்தவும் முயன்று வருகின்றோம் என்று கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பொன் செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-5)

## மாணவனை காணோம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

பாடசாலை மாணவன் ஒருவன் காணாமல் போய் 7 நாள்கள் கடந்த போதும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸிலும், மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதே பாடசாலையைச் சேர்ந்த சக மாணவர்கள் இருவரிடம் பொலிஸாரால் விசாரணை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் ஜீ. சீ. ஈ. சாதாரண தரத்தில் பயிலும் பாடசாலை வீதி, உக்கிளாங்குளம், வவுனியாவைச் சேர்ந்த சிவசூரியகுமார் தனராஜ் (வயது-15) என்ற மாணவனே காணாமல் போயுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை பாடசாலைக்குச் சென்ற இந்த மாணவன் இன்று வரை வீடு திரும்பவில்லை. சம்பவம் தொடர்பில் அதே பாடசாலையில் கற்கும் சக மாணவர்கள் நான்கு பேர் பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டனர். அவர்களில் இரண்டு பேர் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## காணியை மீட்டுத் தாருங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

இராணுவத்தினர் சுவீகரித்துள்ள கெற்பேலிக் காணியில் தாம் முன்னர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்றும், அந்தக் காணியைத் தமக்கு வழங்குமாறும் பொதுமக்கள் சிலர் சாவகச்சேரி பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் காணிக் கச்சேரி நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. இதில் பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் பங்கெடுத்தனர்.

இதில் பங்கெடுத்த பொது மக்கள் சிலர், இராணுவத்தினர் கைப்பற்றியுள்ள கெற்பேலிக் காணியை மீட்டுத் தருமாறு கோரியுள்ளனர்.

காணிச் சீர்திருத்த ஆணைக்

தொடர்ச்சி: பக்கம் 21

## கிழக்கு மாகாண சபையில் கறுப்புப் பட்டியுடன் கூட்டமைப்பு

மட்டக்களப்பு, ஜூன் 19

இலங்கை அரசால் '13' ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 11பேரும் கறுப்புப் பட்டியுடன் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டனர்.

மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க எடுக்கும் முயற்சிகளை கண்டித்தே கறுப்புப்பட்டிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக கிழக்கு மாகாண சபையின் எதிரணித் தலைவர் க.தண்டாயுதபாணி 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் 11 பேரும் இடது கையில் கறுப்புப் பட்டி அணிந்து ஆட்சேபத்தை - எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (த-5)

## இடம்பெயர்ந்தோர் வாக்களிக்கும் சட்ட வரைவு நேற்று நிறைவேறியது

கொழும்பு, ஜூன் 19

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் விசேட சட்ட வரைவு சில திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட இடம்பெயர்ந்தவர்களையும் வாக்களிப்பதற்கான சட்ட வரைவு நீதிய மைச்சர் ரவூப் ஹக்கீமினால் கொண்டுவரப்பட்டது.

இந்தச் சட்டவரைவு நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டது என்று உயர்நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

கடந்த 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்துரையாட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன. இதற்கு அமைவாக சட்டவரைவு தொடர்பிலான விவாதம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று அது மீண்டும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேறியது. (த-5)

## வடமாகாணத் தேர்தல் அறிவிப்பு திங்களன்று

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் திங்கட்கிழமை விடுக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்ட பின்னர் வடமாகாணத்துக்குத் தேர்தல் இதுவரை நடத்தப்படவில்லை. எந்தவொரு மாகாணசபைக்கும் புதிதாகத் தேர்தல் நடத்தப்படுவதானால் ஜனாதிபதி

தொடர்ச்சி: பக்கம் 21

## '13' ஒழிப்புக்கான பிரேரணையை வழிமொழிந்தது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஜூன் 19

இலங்கை அரசமைப்பை திருத்துவதற்கான பிரேரணையை (13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கான) ஜாதிக ஹெல உறுமயவின் தவிசாளர் வண. நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

குறித்த பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் உரிமைக்காக இந்தியா தொடர்ந்தும் பாடுபடும்


## கருணாநிதிக்கு மன்மோகன்சிங் கடிதம்

புதுடில்லி,ஜூன் 19

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா தொடர்ந்து பாடுபடும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-





இலங்கை அரசு 13 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை ஒழிப்பதற்கு மேற்கொண்டு வரும் முயற்சிகள் தொடர்பாக தாங்கள் (கருணாநிதி) எழுதிய கடிதம் கிடைத்தது.

இது இலங்கையின் அரசியல் கட்சிகள் மேற்கொள்ள விரும்பும் நடவடிக்கைகள் ஆகும்.

எனினும், இந்த சட்டத் திருத்தம் ஒழிக்கப்படுவதால் தமிழர்களுக்கு ஏற்படக் கூடிய விளைவுகளைப் பரிசீலித்து, இந்தியாவின் கருத்து இலங்கை அரசுக்குத் தெரிவிக்கப்படும்.

இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த நாட்டில் எல்லா உரிமைகளுடனும், நல்லிணக்கத்துடனும் வாழ நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் தேசிய அளவில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்தி, தமிழர்கள் அனைத்து உரிமைகளுடன் வாழ இந்தியா தொடர்ந்து பாடுபடும் என்றுள்ளது. (த)

# ஏ-9 வீதியா? முள்ளிவாய்க்காலா? எதை விரும்புகிறார் சம்பந்தன்?

## அமைச்சர் சம்பிக்க கேள்வி

கொழும்பு,ஜூன் 19



சம்பந்தனுக்கு இரண்டு வழிகளைக் காட்டுகிறேன். ஒன்று 2009 மே 19 ஆம் திகதியுடன் முடிவடைந்த முள்ளிவாய்க்கால் வழி, மற்றையது ஏ-9 பாதை ஊடான சமாதான வழி. இந்த இரண்டு வழிகளில் எதில் செல்வதென்பதைச் சம்பந்தன் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்னமும் தமிழீழக் கனவில்தான் இருக்கின்றனர் என்றும் வடக்கைத் துண்டாடும் தேர்தலுக்கு தாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் கூறிப்பிட்டார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இந்திய ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. அது பற்றிய பேச்சுக்கு இனி இடமேயில்லை. எடுத்ததற்கெல்லாம் இந்தியாவிடம் சென்று பேசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசுடன் பேசித் தீர்க்க முன்வரவில்லை. சம்பந்தன் ஐக்கிய இலங்கைக்குள்ளான தீர்வுக்குத் தயாரில்லை.

சம்பந்தன் மட்டக்களப்பில் நடந்த கூட்டம் ஒன்றில் தமிழீழம் மலரும் என்று பேசினார். அப்படிக் கூறிவிட்டு இவர்கள் கொழும்பில் வசிக்கவேண்டும் என்பதை மறக்க வேண்டாம்.

சம்பந்தன் தலைமையிலான 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் குழுவினருக்கு மட்டுமன்றி ஹக்கீம் குழுவினருக்கும் இந்த வழிகளை நாம் வழங்குகிறோம்-என்றார். (த)

## 13 மாணவர்கள் விபத்தில் காயம்

கொழும்பு,ஜூன் 19

கேகாலை நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 13 பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளனர். பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றும் லொறி ஒன்றும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த மாணவர்கள் கேகாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பில் கேகாலை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# '13' வலுவிழந்து போக அனுமதிக்க முடியாது

## ஜயம்பதி விக்ரமரட்ன கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 19

13ஆவது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்ய அனுமதிக்க முடியாது என சிரேஷ்ட அரசியல் சாசன சட்டத்தரணியும், இடதுசாரிக் கட்சி ஆதரவாளருமான ஜயம்பதி விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். அரசியல் சாசன உரிமைகள் முடக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அரசியல், ஜனநாயக அல்லது பூகோள ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படக் கூடிய செயற்பாடுகளை நாம் அங்கீகரிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். எனினும், 13ஆவது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் அரசின் முனைப்பு ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகப் பிரச்சினைக்குத் தீர்வு காண மேற்கொள்ளும் முயற்சி வரவேற்கப்படவேண்டியது எனக் குறிப்பிட்ட அவர் தெரிவுக்குழுப் பொறிமுறைமையானது காத்திரமானதும் யதார்த்தமானதுமாக அமைய வேண்டியது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார்.(த)

# சங்கிலித் திருடன் சிக்கினான்

தென்மராட்சி,ஜூன் 19

பெண் ஒருவரின் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற நபர் ஒரு மணி நேரத்தில் பொது மக்களிடம் மாட்டிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அருகே நடைபெற்றது. குறித்த பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளரான இந்தப் பெண் கல்லூரிக்கு. வந்து விட்டு வெளியேறினார். அப்போது அங்கு வந்த நபர் ஒருவர் அந்தப் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடினார்.

அந்த இடத்தின் அருகில் பிரதான படைமுகாம் இருந்ததால் படையினரும் பொதுமக்களும் அவரைத் துரத்திச் சென்றனர். இதன் போது குறித்த நபர், மேலாடையின்றி செருக்கல் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நின்ற போது, மாட்டிக் கொண்டார்.

அவரை பொது மக்கள், 'நன்கு கவனித்து' விசாரித்தபோது பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரீ சேர்ட் கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ங-9)

# 12 மில்லியன் ரூபா ஹெரோயினுடன் இலங்கையர் கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு,ஜூன் 19

சட்டவிரோதமான முறையில் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் இருந்து வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் வந்த, நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து ஒரு கோடி 20 இலட்சம் பெறுமதியுடைய ஒரு கிலோ 510 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விமான நிலையச் செய்திகள் தெரிவித்துள்ளன.



இது குறித்த மேலதிக விசாரணைகளில் விமான நிலைய சுங்க அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## அதிபர் மீது மாணவன் தாக்குதல்

கொழும்பு,ஜூன் 19

அநுராதபுரம் நிவந்தக செட்டிய கல்லூரியின் அதிபரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினரான அனில் புஷ்பனாந்தவின் மகன் நேற்றுத் தாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

விடுமுறையின்போது மேலதிக வகுப்புகளுக்கு வருமாறு மாணவர்களிடம் அதிபர் கூறிய போது, குறித்த பாடசாலையின் உயர்தர வகுப்பைச் சேர்ந்த இந்த மாணவன் அதிபரை தாக்கியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (த)

# பெண்ணுடன் சல்லாபம்: பொலிஸாருக்கு தண்டம்

கொழும்பு,ஜூன் 19

மதுபோதையில் பெண்ணொருவருடன் தகாத முறையில் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சு பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு 5000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அரச செலவாகவே 5000 ரூபாவை கொடுக்குமாறு கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கட்டளையிட்டார்.

அதேவேளை இந்தப் பொலிஸ் கான்ஸ்டபிளுடன் தகாத முறையில் நடந்ததாகக் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு 1500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிவான் திலின கமகே மேற்கண்டவாறு தண்டனை விதித்து உத்தர விட்டார்.

கங்காரம விகாரைக்கு அண்மையில் மதுபோதையிலேயே அவர் மேற்கண்ட குற்றத்தைப் புரிந்துள்ளார். அத்துடன் அவர்களைக் கைது செய்வதற்குச் சென்ற பொலிஸாரையும் இவ்விருவரும் கெட்ட வார்த்தைகளினால் ஏசியதாகவும் கொம்பனி வீதிப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.(த)

## கோழி திருடியோர் பிணையில் செல்ல அனுமதி

தென்மராட்சி, ஜூன் 19

கோழி திருடிய இருவர் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 50 ஆயிரம் பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். குறித்த இருவரும் வரணிப் பகுதியில் இரவு வேளையில் வளவு ஒன்றில் நுழைந்து அங்கிருந்த கோழிக் கூட்டினுள் நின்ற 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கோழிகளை திருடிக் கொண்டு செல்லும் போது பொதுமக்களிடம்சிக்கியிருந்தனர். கொடிகாமம் பொலிஸார் இவர்கள் இருவரையும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். இதன் போது பதில் நீதிவான் சு.கந்தசாமி இருவரையும் ஆள் பிணையில் செல்ல உத்தர விட்டார். (9)

# விபத்தில் இருவர் சாவு

கொழும்பு,ஜூன் 19

தம்புள்ளை - குருணாகல் வீதியில் மல்சிரிபுர, மெதமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 9 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் பொல்கொல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வான், லொறி மற்றும் ஓட்டோ மூன்றும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்தார்.

வானில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளனர். எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த 39 வயதான ஒருவரும் அவிசாவளையைச் சேர்ந்த 24 வயதான ஒ்ருவருமே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர். வான் அதி வேகமாகப் பயணித்தமையின் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கொகருல்ல பொலிஸார் தெரிவித்தனர். (த)

# சுன்னாகத்தில் ஓட்டோவை கடத்த முயன்ற புத்தளம் வாசி

## பொது மக்களால் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்த முற்பட்ட புத்தளத்தைச் சேர்ந்தவரை சம்பவ இடத்தில் நின்றிருந்தவர்கள் மடக்கிப்பிடித்தனர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சுன்னாகம் சந்தியை அண்மித்து கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது.

புத்தளத்தைச் சேர்ந்தவரான இஸான் மஜீத் என்பவரே ஓட்டோவை கடத்த முயன்றவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டோவை நிறுத்திவிட்டு அதன் சாரதி அருகிலுள்ள உணவகத்தினுள் சென்றிருந்தார்.

அந்த வேளையில் ஓட்டோவில் ஏறிய சந்தேகநபர் அதன் பூட்டப்பட்டிருந்த பெட்டியை (டாஸ் பொக்ஸை) உடைத்து வாகன ஆவணங்களை எடுத்துக்கொண்டு ஓட்டோவையும் கடத்திச் செல்ல முற்பட்டார். நிலைமையைக் கண்ணுற்ற சிலர் ஆவணங்களுடன் தப்பியோடிய நபரைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்; அவர்கள் வன்னிக்கு வர தயக்கம்

### கல்வியியலாளர்கள் விசனம்

மாங்குளம்,ஜூன் 19

ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகள் சிலர் இன்னமும் கடமையைப் பொறுப்பேற்காததால் வன்னிப் பகுதியில் தற்போதும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக கல்வியியலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 7 ஆம் திகதி 200 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவர்களில் 10 பேர் யாழ்.மாவட்டத்துக்கும் ஏனைய 190 பேரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டனர்.

அவர்களில் குறிப்பிட்ட சில ஆசிரியர்களைத் தவிர ஏனையோர் இன்னமும் கடமையைப் பொறுப்பேற்காததால் வெளிமாவட்டங்களில் இன்னமும் ஆசிரியர் பற்றாக்குறையைச் சீர்செய்ய முடியாதுள்ளதாகவும் கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கே ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் புதிதாக விஞ்ஞான பாட நெறியும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் இன்றி விஞ்ஞான பாடநெறியைக் கற்க இயலாது மாணவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர்.



“ கடந்த 7 ஆம் திகதி 200 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

எனவே அரசியல் இலாபம் கருதி இடமாற்றங்களை மேற்கொள்ளாமல் உரியவர்களை கடமையை பொறுப்பேற்க வழி வகுக்குமாறும் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-422)

## வருகிறது மாகாண சபைக்குத் தேர்தல் கூடவே அதிர்ஷ்டமும் தொண்டர் ஆசிரியருக்கு

### நாளை மறுதினம் கிளிநொச்சியில் நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் வைத்து நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு மிக நீண்ட காலமாக நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. தேர்தல் கால வாக்குறுதிகளாக, தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று பல்வேறு தடவைகள் உறுதி மொழி வழங் கப்பட்டும் நியமனம் வழங்கப்படாமல் இழுத் தடிக்கப்பட்டு வந்தது.

பல தடவைகள் வடமாகாண கல்வி அமைச்சின் முன்பாக உண்ணாவிரதப் போராட்டங்கள், மறியல் போராட்டங்கள் என்பன நடத்தியபோதும், தொண்டர் ஆசிரியர்களுக்கு சாதகமாக எதுவும் நடக்க வில்லை. இனிமேல் வழங்கப்படாது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது 'அதிர்ஷ்ட' அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் விரைவில் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், கடந்த சனிக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இதற்கமைவாக தொண்டர் ஆசிரியர்களுக்கு வெள்ளிக்கிழமை, கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-5)

## அம்பனில் குரங்குத் தொல்லை

வடமராட்சி, ஜூன் 19

வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமத்தில் குரங்குகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இந்தப் பகுதியில் பயிர்களைச் சேதப்படுத்துவதுடன் குடிமனைகளுக்குள்ளும் குரங்குகள் புகுந்து குடியிருப்பாளர்களுக்கு தொந்தரவுகளை விளைவிக்கின்றன.

பருத்தித்துறை-மருதங்கேணி வீதியில் வேலையிலீடுபடும் போக்குவரத்து வாகனங்களுக்கு குறுக்கே பாய்ந்து சிரமங்களையும் விளைவிக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர் ஓட்டோ ஒன்றின் குறுக்கே குரங்கு ஒன்று பாய்ந்த வேளை திடீரென 'பிரேக்' போடப்பட்டபோது ஓட்டோ குடை சாய்ந்தது.(வ-8)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஜூன் 19

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபரொருவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் மூன்று போத்தல் கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த 16 ஆம் திகதி நபரொருவரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த நபர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

## தற்காலிகமாக மூடப்பட்டது கோந்தைப்பிட்டி கொல்களம்

மன்னார், ஜூன் 19

மன்னார் கோந்தைப்பிட்டியில் மாடு வெட்டும் கொல்களம் சுத்தம் இல்லாததன் காரணத்தால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஞானசீலன் குணசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் நகரில் உள்ள மாட்டு இறைச்சி விற்பனை செய்யப்படுகின்ற சகல கடை உரிமையாளர்களும் கோந் தைப்பிட்டியில் அமைந்துள்ள மாடு வெட்டும் கொல்களத்தில் வைத்தே நீண்ட காலமாக மாடுகளை வெட்டுவதில் ஈடுபட்டு வந்தனர்.

குறித்தகொல்களத்தில் வெட்டப்படுகின்ற மாடுகளின் இரத்தம் அந்தப்பகுதியில் தேங்கி நிற்பதால் அந்தப் பகுதியில் பெரிய துர்நாற்றம் வீசுவதோடு கோந்தைப்பிட்டி கடற்கரையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினர் எழுத்து மூலம் மன்னார் மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்ததோடு மன்னார் நகர சபைக்கும் குறித்த பிரச்சினை தொடர்பில் எழுத்து மூலம் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை கோந்தைப்பிட்டியில் அமைந்துள்ள மாடு வெட்டும் கொல்களத்தைச் சென்று பார்வையிட்டேன்.

இதன் போது வெட்டப்படும் மாடுகளின் இரத்தம் தேங்கி நிற்காத வகையில் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

மாட்டு இரத்தம் அருகில் உள்ள கடலுக்குச் செல்லும் வகையில் வடிகான்களை அமைக்கவில்லை. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் குறித்த கொல்களத்தில் மாடு வெட்டுவதற்கான அனுமதியை நாம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம்.

குறித்த தொழுவம் மீள் திருத்தம் செய்யப்பட்டு மாட்டு இரத்தம் கடலுக்குச் செல்லும் வகையில் உடனடியாக வடிகானை அமைக்குமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

இந்த விடயங்களை மேற்கொண்டதன் பின் மீண்டும் மாடு வெட்ட அனுமதி வழங்கப்படும்.- என்றார். (வ-12)




யாழ்.வை.எம்.சீ.ஏ.நிறுவனத்தினர் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு மாணவர்களுக்கான மெய்வன்மை பயிற்சி வகுப்பை கடந்த சனிக்கிழமை வை.எம். சீ.ஏ.மண்டபத்தில் நடத்தினர். ஆறு பாடசாலைகளின் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (வ-9)

## தகாத வார்த்தைகளை பிரயோகிக்கும் மாநகர பணியாளர்கள் மீது நடவடிக்கை

### மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 19

யாழ்.நகரில் வைத்தியசாலை வீதியின் மத்தியில் வாகனங்களை நிறுத்துமிடத்தில் பொறுப்பாக இருக்கும் மாநகர பணியாளர்கள் சிலர், வாகனம், மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் நிறுத்த முற்படுவோருடன் தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்பதாகப் பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவித்ததையடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வீதியின் மத்தியில் ஓட்டோ, மோட்டார் சைக்கிள், வாடகைக் கார்கள், சைக்கிள் என்பவற்றை நிறுத்துவதற்கென தனியாக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட இடங்களில் உரிய வாகனங்களை சைக்கிள்களை நிறுத்துவதை அறிந்திராதவர்களுக்கு அதனைத் தெரியப்படுத்தி உரிய இடத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க அந்தந்த இடங்களில் மாநகர பணியாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அவ்வாறானவர்களில் சிலரே இவ்வாறு நடந்துகொள்வதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்தகைய மாநகர பணியாளர்களுக்கு உளவளச் சிகிச்சை வழங்கப்படல் வேண்டும் என்றும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (வ-4)

## இடர் முகாமைத்துவ அமைச்சின் இணைய வழி நிவாரண சேவை

யாழ்ப்பாணம்,ஜூன் 19

இடர்முகாமைத்துவ அமைச்சின் இணைய வழி நிவாரண சேவைக்கான இணையத் தளம் யாழ். மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பிலான பயிற்சிப் பட்டறையும் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இதில் இடர் வேளைகளின் போது நிவாரணம் மற்றும் அதற்கான கொடுப்பனவை துரிதப்படுத்தும் நோக்குடன் இணைய வழிச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

“ ‘சஹான’ என்ற பெயரிலேயே குறித்த இணை யத்தளச் சேவை ஆரம்பித்து வைக் கப்பட்டுள்ளது.

'சஹான' என்ற பெயரிலேயே குறித்த இணையத்தளச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பிலும் பிரதேச செயலாளர்களுக்கான செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது. (த-5)

## உப பொலிஸ் பரிசோதகர்களாக 60 தமிழர்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 19

உப பொலிஸ் பரிசோதகர்களாகப் பயிற்சிபெற்று வந்த சுமார் 60 தமிழ்ப் பொலிஸார் நேற்றுமுன்தினம் தமது பயிற்சிநெறியை நிறைவு செய்தனர்.

அவர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்பட்டுப் பணியில் அமர்த்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தைச் சேர்ந்த குறித்த 60 பேரும் களுத்துறையில் உள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று நேற்று அதனை நிறைவு செய்து வெளியேறினர். சில நாள்களில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வு 13 ஆவது திருத்தம் அல்ல

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 19
தென்னிலங்கை இனவாதக் கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கின்றன. இதன்மூலம் 13 ஆவது திருத்தத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் நிரத்தரத்தீர்வு உள்ளது என்று அர்த்தம் ஆகாது. இவற்றையும் தாண்டி பூகோள அரசியல் மாற்றத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இது தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இன்று கடும் சர்ச்சைகள் தோன்றியிருக்கின்றன. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு தற்போதைய அரசியல் நிலைமைகளைத் தெளிவுபடுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

குறிப்பாக தமிழ் மக்களின் நலனில் அக்கறை உள்ள அரசியல் தலைவர்கள் முன்னரைப் போன்று வரலாற்றுத் தவறுகளை இனியும் இழைக்கக் கூடாது என்பது எமது கட்சியின் நோக்கமாகும். இது குறித்து காலத்துக்கு காலம் தாம் வலியுறுத்தி வருகின்றோம்.

தற்போது பல வருடங்களாகக் கிடப்பில் போடப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன.

எமது கட்சியைப் பொறுத்தவரை 13 ஆவது அரசியல் திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு எத்தகைய நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்பதில் உறுதியாக உள்ளோம். 13 ஆவது அரசியல் திருத்தம் முழுமையாக செயற்படுத்தப்பட்டால் அதுவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாகி விடும் என்று கருதிவிட முடியாது.

நாம் பல தடவை 13 ஆவது திருத்தத்தில் எந்த பயனும் இல்லை என்று வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால் இந்தியாவின் அரசியல் பிரமுகர்கள் உட்பட பலர் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான சந்தர்ப்பமாக 13 ஆவது திருத்தத்தைக் காட்டுகின்றனர்.

இன்று அந்தச் சட்டம் கேள்விக் குறி ஆகியுள்ளது.

ஆனால் மாகாணசபைகளை ஆரம்ப புள்ளியாகக் கருதலாம் என்றும், கடவுள் கொடுத்த அரிய சந்தர்ப்பம் என்றும் கூறுமளவுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், அதிலுள்ளவர்களும் மாறியுள்ளனர். எங்களைப் பொறுத்தவரையில் இந்த 13 ஆவது திருத்தம் தமிழர் இனப்பிரச்சினை தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகவோ, இடைக்காலத் தீர்வாகவோ, இறுதித் தீர்வாகவோ இருக்க முடியாது என்பதில் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கின்றோம். இதற்கு பல காரணங்கள் உள்ளன.

சிங்கள தேசத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் உச்சக்கட்டத்தில் உள்ளது. அந்த இனவாதம் தமிழ் மக்களுக்கென பெயரளவில் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தம் நீக்கப்படவேண்டும், பொலிஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என கூறிவருகின்றது. இதனால் தமிழ் மக்களும் இந்த 13 ஆவது திருத்தத்தில் ஏதோ இருக்கின்றது என நினைப்பது ஆபத்தானது. எதிர்த்தரப்புக்கள் கூறும் கருத்துக்களுக்கு எதிர்வினையாக எங்கள் இருப்புக்கான முடிவுகளை எடுக்க முடியாது.

இவ்விடயத்தில் தமிழ் புத்திஜீவிகளுக்கும், ஊடகங்களுக்கும் பெரும் கடமையுள்ளது. 13 ஆவது திருத்தத்தின் ஆபத்துக்களை மக்களுக்கு தெளிவுபடுத்தி, இன்றுள்ள பூகோள அரசியல் நிலைமைகளையும் அதில் தமிழ் மக்களுக்குள்ள வாய்ப்புக்களையும், தமிழ் மக்களது அரசியல் பலங்களையும் மக்களுக்கு தெளிவுபடுத்துவதனூடாக மக்களை அரசியல் மயப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் தலைமை தவறாக முடிவுகளை எடுப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இதன் மூலம் இன்று பூகோள அரசியல் மாற்றத்தினூடாக எமக்கு ஏற்பட்டுள்ள வாய்ப்பான சூழ்நிலையை தவறவிடாது பயன்படுத்திக்கொள்ள வேண்டும். -என்றுள்ளது.

(ஒ-ஐ)

# தவறிய பட்டி மாடுகளைத் தேடி வயல் வெளிக்குச் சென்றவருக்கு சூடு

## புதுக்குடியிருப்பு – தேவிபுரத்தில் சம்பவம்

புதுக்குடியிருப்பு, ஜூன் 19
தவறிய மாடுகளைத் தேடிச் சென்றவர் துப்பாக்கியால் சுடப்பட்டு வலது கால் பின் தொடையில் குண்டு பாய்ந்து காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் கடந்த சனிக்கிழமை, காலை 6.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேஇடத்தைச் சேர்ந்த கேசவ ராஜா சுபாஸ்கரன் (வயது-38) என்பவரே படுகாயமடைந்துள் ளார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையும் ஆவார்.

நடந்த சம்பவம் குறித்து அவர் கூறியதாவது:-

புதுக்குடியிருப்பில் மரக் காலை ஒன்றை நடத்திவரும் நான் மாட்டுப் பட்டியும் வைத்திருக்கிறேன். வயல் வெளியில் மேயும் மாடுகளை பிற்பகலில் வீட்டுக்கு கொண்டு செல்வது வழக்கமாகும். கடந்த வெள்ளிக்கிழமையும்வழமைபோன்று மாடுகளைப் பார்த்த போது சில மாடுகள் தவறிவிட்டமை தெரிய வந்தது.

இதனால் மறுநாள் சனிக்கிழமை தவறிய மாடுகளைப் பிடித்து வருவதற்காக வயல் வெளியூடாகச் சென்று கொண்டிருந்தேன். அப்போது துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. எனக்கு தொடையில் அடித்தது போன்று உணர்ந்தேன். கையால் தடவிப் பார்த்தபோது வலது பின்தொடையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

உடனே எனது கைத் தொலைபேசி மூலமாக வீட்டுக்குத் தகவலைத் தெரிவித்தேன். எனது வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வைத்துத் தான் நான் சுடப்பட்டேன். எவர் இதனை செய்தார்கள் என்பது எனக்குத் தெரியாது சுட்டவுடன் கீழே விழுந்து விட்டேன். உடனடியாக மோட்டார் சைக்கிளில் வந்த எனது உறவினர் என்னைப் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டேன். அங்கிருந்து அன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டேன். - என்றார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற பகுதியை அண்மித்துள்ள காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகவும் பின்னர் அவற்றை குடிமனையை அண்மித்துள்ள பகுதியில் வைத்து விற்பனை செய்வதாகவும் பிரதேச பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

(க-4)

# விதை வெங்காயம் பரீட்சார்த்த செய்கை ஆரம்பம்

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்புக்குட்பட்ட பகுதியில் விதை மூலம் வெங்காயம் பயிரிடும் பரீட்சார்த்த பயிர்ச் செய்கை முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்வனவு செய்யப்பட்ட "உண்மை' வெங்காய விதை நாற்று மேடைகளில் போடப்பட்டு உரிய இடங்களில் நடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

(வ-9)

# மதுரத்தின் கண்ணீர் அஞ்சலி

## திருமதி பரமேஸ்வரி சபாரத்தினம்



எமது நிறுவன சிரேஸ்ட ஆசிரியர் ச.அருந்தவரத்தினம் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி பரமேஸ்வரி சபாரத்தினம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மதுரம் இன்ஸ்ரிரியூட்,
டச்சுவீதி, கோப்பாய் தெற்கு.

நிர்வாக இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(38464) (10,7,16)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா தங்கரத்தினம்



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தங்கரத்தினம் நேற்று (18.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் (சிவபூரணம்) அன்பு மனைவியும் சறோயினி அம்மா, பிரபாகரன், சிறீரஞ்சினி, நித்தியானந்தம், தருமவதி, ஞானப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு தாயும் சறோஜாதேவி, இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், ப.நோ.கூ.ச.), நிலாவதனி, லோகநாதன், உதயகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(38461)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

## செபஸ்ரியன் வின்ஸ்சென்ற் பேரின்பநாயகம்



யாழ். சுன்னாகம், ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், இங்கிலாந்து Gravesend ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் வின்ஸ்சென்ற் பேரின்பநாயகம் 08.06. 2013 சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் - Wombwell Hall School in Gravesend, Kent UK 1964-1988 ஐ யாழ். புனித ஹென்றி அரசர் பாடசாலை, நுவரெலியா / புனித சேவி யார் வித்தியாலயம், இரத்தி னபுரி/ சிவாலி மத்திய மகா வித்தியாலயம், யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரி பழை மாணவனும், கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.M. செபஸ்ரியன்- திருமதி றோஸலின் தங்கம்மா செபஸ்ரியன் தம்பதியரின் அன்பு மகனும், திருமதி பத்மா பேரின்பநாயகம் அவர்களின் அன்புக் கணவரும் றாதிகா, தேனுகா, வேணுகா, றூபிகா, றூபகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜன், பிரின்ஸ், அலெக்ஸ், ஜுட், மன்ஜிற் ஆகியோரின் அன்பு மாமனும், கிருபன், ராதுஜா, ஜனந்தன், ஜனனி, கேஷினி, மது, செபஸ்ரியன், பவி ஆகியோரின் அன்புப் பேரனும், கருணநாயகம், விஜயநாயகம், காலஞ்சென்ற சபாநாயகம் மற்றும் மல்லிகா, ஜெயசீலநாயகம், செல்வநாயகம், தயாழநாயகம், விமலநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், டெபிசி, ராணி, ஆனந்தி, காலஞ்சென்ற அந்தோனி பிள்ளை மற்றும் ஜெசிந்தா, வசந்தி, சுவேந்தினி, அஞ்சலா, நவபாலச்சந்திரன், தவபாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனோமகள், றோகினி ஆகியோரின் அன்பு சகலனும், அனிற்றி, றெனி, ரஞ்சன், மைக்கல், ஜெனி, றூடி, றொமேஷ், மீரா, ஷாரா, மேனா, மோறின் ஆகியோரின் பெரிய தந்தையும், றதினிகா, ரவீண்ட்றா, விஜேண்ட்றா, அகல்யா, அருண், சுஹன்யா,சுஜீவ் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.06.2013) செவ்வாய்க்கிழமை இங்கிலாந்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்..

(சி/9900) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சித்திராதேவி நவரத்தினம்



திருநெல்வேலி கிழக்கு, பதிவு காரர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சித்திராதேவி நவரத்தினம் நேற்று (18.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் ராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் (முன்னாள் தொலைத் தொடர்பு நிறுவன பணியாளர்) அன்பு மனைவியும் சுகிர்தாவின் அன்புத் தாயும் ராமகிருஸ்ணனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பதிவுகாரர் லேன், திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(38458)

தகவல்:
குடும்பத்தினர்.

## கார்த்திகேசு கனகம்மா



பெரிவிளானைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட காரத்திகேசு கனகம்மா நேற்று (18.06.2013) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி சின்னாச்சிப் பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா சின்னத்தங்கம் மற்றும் நல்லம்மா நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், செல்வநிதி, கயிலாயநாதன், தில்லைநாதன் (நூலக உதவியாளர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை) ஆகியோரின் அன்புத் தாயும், கேதீஸ்வரி, கமலாதேவி (ஆசிரியை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை) ஆகியோரின் அன்பு மாமியும், ரகுபரன், ஜசிகரன், துஷாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2013) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் கிராயிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொந்தி வீதி, பண்டத்தரிப்பு.
T.P- 0774361735

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் இந்த வருடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்கள், மாணவ உதவியாளர்கள், சிரேஷ்ட மாணவ உதவியாளர்கள் பதவியேற்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வ.முகுந்தனும் சிறப்பு விருந்தினராக நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் கு.இரவீந்திராவும் கலந்து கொண்டனர். நிகழ்வில் 10 மாணவத் தலைவர்களும் 9 மாணவ உதவியாளர்களும் 2 சிரேஷ்ட மாணவ உதவியாளர்களுமாக 21 பேர் பதவியேற்றனர். நிகழ்வின் விருந்தினர்கள், கல்லூரி அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் சின்னங்களைச் சூட்டினர். (9)

# 1000 குடும்பங்களுக்கு மின்சார விநியோகம்


## வடமராட்சி கிழக்கில்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்குப் பகுதியில் 1000 குடும்பங்களுக்கு 5 கோடி ரூபா நிதியில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் வடமாகாண திட்ட முகாமையாளர் ரி.குணசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமராட்சி கிழக்கில் 3 கிராமங்களை உள்ளடக்கி பரந்துபட்ட பிரதேசத்துக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. சுமார் ஆயிரம் குடும்பங்கள் பயனடைவதற்காக 5 கோடி ரூபா நிதியில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உடுத்துறை, ஆழியவளை, வத்திராயன் ஆகிய 3 கிராமங்களுக்குமே இந்த மின்சார இணைப்பு வழங்கப்பட்டது.- என்றார்.



வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட மின் இணைப்புப் பணிகளுக்கு ஏற்ப முதற் கட்டமாக 90 வீடுகளுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய வீடுகளுக்கு படிப்படியாக மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் மின் இணைப்புக்கள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் மின்சாரக் கட்டணத்தை பாவனையாளர்கள் செலுத்தக் கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (வ-14)

## ஓய்வூதிய நம்பிக்கை நிதிய நிர்வாகிகள் கௌரவிப்பு

அச்சுவேலி, ஜூன் 19

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு கிளையின் நிர்வாகிகளுக்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாராட்டு நிகழ்வு.

வலி.கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் எஸ்.சக்திவேல், செயலாளர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலக பிரிவு நம்பிக்கை நிதியச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளில் மாவட்ட ரீதியில் வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவு நம்பிக்கை நிதியச் சங்கம் முதலாம் இடத்தை பெற்று தேசிய ரீதியிலான மதிப்பீடு களுக்கு தகுதிபெற்றுள்ளது. (வ-11)

## சிங்காவத்தை பகுதி மக்களின் பயணத்துக்கு பாதை அமைப்பு

வலி. வடக்கு, ஜூன் 19

கடந்த எண்பது வருடங்களுக்கு மேலாக போக்குவரத்துக்கு ஏற்ற பாதை இல்லாது திண்டாடிய தெல்லிப்பழை துர்க்காபுரம் சிங்காவத்தை பகுதி மக்களுக்கு உரிய பாதையை வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

குறித்த பகுதியில் உள்ள மக்கள் தமக்குரிய போக்குவரத்துப் பாதை இல்லாது ஏனைவர்களின் காணிகளின் ஊடாக பலத்த சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தை மேற்கொண்டு வந்தனர்.

காணிக்கான உரிய பாதை இன்மையால் மின்சாரம் கூட பெற முடியாத நிலையில் தற்போதைய சூழலிலும் கூட இந்தக் குடும்பங்களின் பிள்ளைகள் மண்ணெண்ணெய் விளக்கை நம்பியே தமது கல்வி நடவடிக்கையை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதியிலுள்ள யுவதி ஒருவர் இத்தகைய நிலமைக்கு விடிவு காணும் வகையில் வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவருக்குதமது மக்களின்குறையை எடுத்துக் கூறி முறையிட்டதன் பெயரில் குறித்த தலைவர் உரிய பாதையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். (வ-86)

# உண்ணிக்காய்ச்சல் தாக்கத்தால் கால்நடைகள் உயிரிழக்கும் அபாயம்

## உடன் சிகிச்சைக்குள்ளாக்க கோருகிறார் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர்

அச்சுவேலி, ஜூன் 19

'மானிப்பாய், சுதுமலை, தாவடிப் பகுதியில் உண்ணிக்காய்ச்சல் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் கால்நடைகள் உயிரிழக்கும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டி இருப்பதால் கால்நடை உரிமையாளர்கள், பயனாளிகள் ஆடு, மாடுகளை உரிய பரிசோதனைக்கு உள்ளாக்கி சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உண்ணிக்காய்ச்சல் நோய்த் தாக்கம் தொடர்பாக பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-



உண்ணிக்காய்ச்சல் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகிவரும் ஆடுகள், மாடுகளின் உடலில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுவதோடு சிறுநீரும் நிறம் மாறி சிவப்பு கலந்த கடும் மண்நிறமாக காணப்படும்.

இதனைக் கருத்தில் கொண்டு உண்ணிகள் உள்ள கால்நடைகள் மற்றும் நோய்த்தாக்கம் தொடர்பான குணம் குறிகள் தென்படும் கால்நடைகளை உரியமுறையில் கால்நடை வைத்தியர்களின் பரிசோதனைக்கு உள்ளாக்கி சிகிச்சை வழங்க வேண்டும்.

சிகிச்சை பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதும், நோய் அதிகரித்த நிலைக்கு செல்வதும் கால்நடைகளை உயிரிழப்புக்கு உள்ளாக்கும் அபாய நிலை இருப்பதால் கால்நடைகளை விழிப்புணர்வுடன் பாதுகாக்க வேண்டும்.

உண்ணிக்காய்ச்சல் நோய்த் தாக்கம் மானிப்பாய், சுதுமலை, தாவடி ஆகிய பகுதிகளில் உள்ள ஆடு மாடுகளில் குறிப்பிடத்தக்க அளவு காணப்படுவது அவதானிக்கப்பட்டிருப்பதால் அதனைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது-என்றார். (வ-11)

# பதிவு செய்யப்பட்டு சேவையிலுள்ள 80 ஓட்டோக்களுக்கு மீற்றர்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 80 ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளது. ஏனைய ஓட்டோக்களுக்கும் விரைவில் மீற்றர் பொருத்தப்படும் என்று யாழ். மாவட்ட ஓட்டோ சங்கத்தலைவர் எஸ்.ராஜ்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களுக்கு சங்கத்தின் புதிய நடைமுறைகளுக்கு அமைவாக மீற்றர் பொருத்தும் நடவடிக்கைகள் கடந்த மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கமைவாக 'பேல்ட் ரெக்னியல்' மீற்றர் பொருத்தும் நிறுவனத்தின் ஊடாக சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துதல் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.



இதனடிப்படையில் தற்போது 80 ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளன. ஓட்டோக்களில் பயணிக்கும் பயணிகளிடம் வேறுபட்ட கட்டணம் அறவிடுவதால் முரண்பாடுகள் நிலவுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு சங்கத்தால் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கான சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களில் இதுவரை காலமும் மீற்றர் பொருத்தப்பட்டு அதனடிப்படையில் கட்டணம் பெறப்படும் நிலை இருந்ததில்லை. எனினும் தற்போது புதிய நடைமுறையாக ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளதால் பொது மக்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு கூடுதலான கட்டணங்களை அறவிட வேண்டியதில்லை. மீற்றருக்கு ஏற்ப கட்டணத்தை மட்டுமே மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோச் சாரதிகள் அறவிட முடியும். இதன் காரணமாக பயணிகளுக்கும் ஓட்டோச் சாரதிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படப் போவதில்லை. மீற்றர் பொருத்தப்பட்டுள்ள முறைமை பொது மக்களுக்கு நன்மையளித்துள்ளது.

தற்போது மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு சங்கத்தால் ஏக மனதாகத் தீர்மானித்த கட்டண அறவீடுகளின் படி முதலாவது கீலோ மீற்றருக்கு 80 ரூபாவும் ஏனைய அடுத்த கீலோ மீற்றருக்கு 50 ரூபாவும் கட்டணங்களாக அறவிடுமாறு ஓட்டோச் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தற்போது மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களில் கட்டணம் அறவிடப்படுகின்றது.

தற்போது 80 ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளது. ஏனைய ஓட்டோக்களுக்கும் மிக விரைவில் மீற்றர் பொருத்தப்படும்.-என்றார். (வ-14)

## பிரதம தபாலக வெற்றிடங்கள் உரிய காலத்தில் நிரப்பப்படுகின்றன

### வடமாகாண பிரதம தபால் அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். பிரதம தபாலகத்தில் ஏற்படக்கூடிய பதவி வெற்றிடங்கள் உரிய காலத்தில் சீர் செய்யப்பட்டு வருகின்றன. அந்தந்தக் காலத்தில் நிரந்தர நியமனங்களும் வழங்கப்பட்டு வருவதாக வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

தபாலகத்தில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்கள் மற்றும் சேவைக்கால ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தபாலகத்தில் தற்போது சேவையில் உள்ள ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டிய சூழல் ஏற்படும் போது குறித்த ஊழியர்களது பதவி வெற்றிடங்கள் உரிய காலத்தில் நிரப்பப்பட வேண்டியுள்ளன. இந்த நிலையில் ஏற்கெனவே தற்காலிகமாக கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களே குறித்த பதவி, வெற்றிடமாகும் இடத்துக்கு நியமிக்கப்படுகின்றனர். அத்துடன் உரிய காலத்தில் நிரந்தர நியமனங்களும் வழங்கபட்டு வருகின்றன – என்றார்.

எனினும் யாழ். பிரதம தபாலகத்தில் கடந்த 7 வருடங் களாகக் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்கள் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் தொடர்ந்து அதே பதவியில் அமர்த்தப்பட்டுள்ளதுடன் தற்காலிக கொடுப்பனவுடன் பணிபுரிய வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் ஊழியர்கள் ஓய்வு பெற்ற பின்னர் குறித்த பதவிகள் வெற்றிடங்களாக உள்ளதாக வும் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் குற்றஞ் சாட்டியுள்ளார்கள். (வ-14, 135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகுல் காந்திக்கு வழி விடுவேன்

### பிரதமர் மன்மோகன்



புதுடெல்லி, ஜூன் 19
ராகுல் காந்திக்கு பிரதமர் பதவியை அளிக்கத் தயார் என்றும் காங்கிரஸ் கூட்டணி மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் என்றும் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தை அடுத்து பிரதமர் மன்மோகன் சிங் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறும்போது,

''அடுத்த ஆண்டு நடை பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும். மக்கள் எங்கள் மீது மீண்டும் நம்பிக்கை வைத்து தேர்ந்தெடுப்பார்கள். காங்கிரஸ் கூட்டணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்திக்கு எனது பிரதமர் பதவியை வழங்கி வழிவிட தயாராக இருக்கிறேன்.

இதை நான் ஏற்கனவே கூறி இருக்கிறேன். ராகுல் காந்தி பொருத்தமான தலைவர். அந்த இளம் தலைவர், எனது பதவியை அடைவது எனக்கு மகிழ்ச்சிதான். ராகுல் காந்தி, ஐக்கிய முற்போக்கு கூட்டணியை வழி நடத்திச் செல்வார் என்று நம்புகிறேன். அவருக்கு தலைவருக்கான நல்ல குணங்கள் உள்ளன. பா.ஜனதா கூட்டணியில் ஏற்பட்ட பிளவு, அந்த கூட்டணியின் உள் விவகாரம். அதுபற்றி நான் கருத்து கூற விரும்பவில்லை. ஆனால் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் மதச்சார்பற்ற தலைவர் ஆவார். அரசியலில் நிரந்தர நண்பரோ, நிரந்தர எதிரியோ கிடையாது. எனவே, ஒருமித்த கருத்துக் கொண்ட கட்சிகள், காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பதை வரவேற்கிறோம். - என்றார். (ற)

# பீகார் அரசு விரைவில் கவிழும்

## எதிர்வு கூறுகின்றார் லல்லு பிரசாத்

பட்னா, ஜூன் 19
பீகார் சட்ட சபையில் நிதீஷ் குமார் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிக்க உள்ளதாக லல்லு பிரசாத் யாதவின் ராஷ்ட்பீய ஜனதா தளம் அறிவித்துள்ளது.

பிகாரில் பா.ஜ.க.வுடனான கூட்டணியை ஆளும் ஐக்கிய ஜனதா தளம் கட்சி சில தினங்களுக்கு முன் முறித்துக் கொண்டது. அதையடுத்து, ஆளுநரைச் சந்தித்த முதல்வர் நிதீஷ்குமார் தனது அரசு மீது சட்டப்பேரவையில் 19ஆம் திகதி நம்பிக்கை வாக்களிப்புக் கோரப்போவதாகத் அறிவித்திருந்தார்.

இது குறித்து முக்கிய எதிர்க்கட்சியான ராஷ்ட்பீய ஜனதா தளத்தின் தலைவர் லாலுவிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோதே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''நம்பிக்கை வாக்கெடுப்பில் எங்கள் கட்சியின் 22 உறுப்பினர்களும் நிச்சயமாக நிதீஷ்



குமார் அரசை எதிர்த்தே வாக்களிப்பார்கள். அதனால் மதச்சார்பற்ற ஓர் அரசை எதிர்த்து வாக்களித்ததாக ஐக்கிய ஜனதா தளம் எங்களை விமர்சிக்குமே? என்று கேட்கிறீர்கள். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அரசுக்கு எதிராக வாக்களிப்பது என்ற எங்கள் கட்சியின் முடிவு கொள்கை அடிப்படையிலானது. அரசுக்கு எதிராக பா.ஜ.க.வும் வாக்களிக்கும் என்பது எனக்கு ஒரு பிரச்சினை இல்லை. எங்கள் முடிவு தனிப்பட்ட முறையில் நாங்கள் எடுத்ததாகும். அதற்கும் பா.ஜ.க.வின் நிலைப்பாட்டுக்கும் தொடர்பு இல்லை.

முதல்வர் நிதீஷ்குமாரின் அதிகார மமதை மற்றும் சில காரணங்களால் அவரது அரசின் நாள்கள் எண்ணப்படுகின்றன என்ற எனது கருத்து சரியானது என்பது நிரூபணமாகி வருகிறது. புதன்கிழமை நடைபெற உள்ள நம்பிக்கை வாக்கெடுப்பில் ஐக்கிய ஜனதா தளம் அரசு கவிழாது. ஏனெனில், நான்கு சுயேச்சைகள் மற்றும் காங்கிரஸ் கட்சியின் 4 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவை அக்கட்சி திரட்டி விட்டது. ஆனால், இந்த அரசின் முடிவுக்கான ஆரம்பம் ஏற்கெனவே தொடங்கி விட்டது.

நிதீஷ்குமார் ஒரு மதச்சார்பற்ற தலைவர் என்று பிரதமர் புகழ்ந்துள்ளது குறித்துக் கேட்டபோது,

''உயர்ந்த மனிதரான பிரதமர், யாரைப் பற்றியும் கனிவான வார்த்தைகளையே கூறுவார். இன்னும் 2-3 மாதங்களில் ஐக்கிய ஜனதா தளம் உடையும் வாய்ப்பை மறுப்பதற்கில்லை'' என்றார் அவர். (ற)

## தி.மு.க., தே.மு.தி.க. வேட்புமனுத் தாக்கல்

சென்னை, ஜூன் 19
மாநிலங்களவைத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து போட்டியிடும் 8 வேட்பாளர்கள் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மாநிலங்களவைத் தேர்தலில், போட்டியிட தமிழகத்தில் இருந்து தி.மு.க. சார்பில் கனிமொழி, அதிமுக சார்பில் மைத்ரேயன், லட்சுமணன், ரத்தினவேலு, அர்ஜுனன், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் டி.ராஜா ஆகியோரும் மனு தாக்கல் செய்துள்ளனர்.

தேர்தல் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெற்று, அன்றைய தினமே வாக்கு எண்ணிக்கையும் நடைபெறவுள்ளது. இந்நிலையில் மனுக்கள் நேற்று பரிசீலினை செய்யப்பட்டன.

அதில் தே.மு.தி.க., தி.மு.க., அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர்களது மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 5 சுயேச்சைகளின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. (ற)




புதுடில்லியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் வெள்ளக்காடாக மாறியது. பொருள்களை நகர்த்தும் தானியங்கி இயந்திரங்கள் நிறுத்தப்பட்ட நிலையில் பயணிகள் முழங்கால் அளவு நீரில் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது பொருள்களைக் கொண்டு சென்றனர். (ற)

## நிதிஷ்குமாருக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பீகாரில் கடையடைப்பு

பாட்னா, ஜூன் 19
முதலமைச்சர் நிதிஷ்குமாரையும், ஐக்கிய ஜனதா தளத்தையும் கண்டித்து பீகாரில் நேற்று நடத்தப்பட்ட கடையடைப்புப் போராட்டத்தில் வன்முறைகள் வெடித்துள்ளன.

பட்னாவில் பெரும்பாலான வணிக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அதேபோல் மாநிலம் முழுவதும் பாரதீய ஜனதா தொண்டர்கள் முழு கடைஅடைப்புபோராட்டம்நடத்தினார்கள். ஆங்காங்கே நிதிஷ் குமார் துரோகம் செய்து விட்டதாக கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். நரேந்திர மோடியை ஆதரித்தும் கோஷம் எழுப்பினார்கள்.

பாட்னாவில் பாரதீய ஜனதா கட்சியினர் நடத்திய கண்டனப் பேரணியில் வன்முறை வெடித்தது. பேரணியாகச் சென்ற தொண்டர்கள் மீது ஐக்கிய ஜனதா தளம் தொண்டர்கள் தாக்குதல் நடத்தினார்கள். இதேபோல் பாரதீய ஜனதா அலுவலகம் அருகே திரண்டு இருந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்தனர். தற்போது அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)



## அத்வானி - மோடி நேரில் சந்தித்தனர்



புதுடில்லி, ஜூன் 19
பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே.அத்வானியை அவரது இல்லத்தில் நேற்றுக் காலை சந்தித்துப் பேசினார் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி.

பா.ஜ.கவின் தேர்தல் பிரசாரக் குழுத் தலைவராக நரேந்திர மோடி கோவாவில் நடைபெற்ற தேசிய செயற்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டார். அதையடுத்து அதிருப்தி அடைந்த அத்வானி, பா.ஜ.கவில் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகுவதாக அறிவித்தார். எனினும் பா.ஜ.கவின் மூத்த தலைவர்களின் வற்புறுத்தல் காரணமாக, தனது பதவி விலகும் முடிவை அத்வானி கைவிட்டார்.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து, பா.ஜ.க. தேர்தல் பிரசாரக் குழுத் தலைவராக நரேந்திர மோடி நியமிக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக, எல்.கே.அத்வானியைச் சந்திக்கிறார் மோடி.

நேற்றுக் காலை அத்வானியின் இல்லத்துக்குச் சென்று நரேந்திர மோடி, அத்வானியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார் என்று கூறப்படுகிறது. (ற)

## 57,000 யாத்திரிகர்கள் நடுவழியில்

டேஹ்ராடுன், ஜூன் 19
எதிர்பாராத வகையில் ஜூன் மாதத்தில் பெய்த கன மழை காரணமாக உத்தர்காண்டில் பல்வேறு யாத்திரைகளுக்குச் சென்ற 57,000 பக்தர்கள் நடுவழியில் சிக்கியுள்ளனர்.

பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி உள்ளிட்ட ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்ற ஏராளமான பக்தர்கள், திடீரென, உத்தர்காண்டில் பெய்த கன மழையாலும், அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும், நிலச்சரிவினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீதிகள் முற்றிலுமாக தகர்ந்தும், பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், செல்லும் பாதை இல்லாமலும், ஆங்காங்கே தவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களை மீட்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## நிதீஷ்குமாரின் இரட்டை முகத்தை விரைவில் அம்பலப்படுத்துவோம்

### முன்னாள் துணை முதல்வர் சுஷில்குமார்

பாட்னா, ஜூன் 19
'முதலமைச்சர் நிதிஷ்குமாரின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவோம்' என்று பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த பீகார் முன்னாள் துணை முதல்வர் சுஷில் குமார் மோடி தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்திருந்த பாரதிய ஜனதா தளம், கூட்டணியில் இருந்து விலகியது. அதையடுத்து பீகாரில் முதலமைச்சர் நிதீஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் - பாரதிய ஜனதா கூட்டணி அரசிலிருந்து, பா.ஜ.கவை சேர்ந்த 11 அமைச்சர்கள் நீக்கப்பட்டனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே சுஷில் குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-


''இத்தனை ஆண்டுகளாக நிதிஷுடன் இணைந்திருந்த எங்களை நாகரிகமாக வெளியேற்றி இருக்கலாம். தகவலே தெரிவிக்காமல் எங்கள் தரப்பின் 11 அமைச்சர்களை பதவி நீக்கம் செய்துள்ளமை நிதிஷின் அராஜகம். குஜராத் முதல்வர் மோடியை, பல முறை பாராட்டி பேசியுள்ள நிதிஷ், இப்போது மாற்றிப் பேசுகிறார். அவரது இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவோம்'' என்று தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘ஜி-20’ தலைவர்களை கண்காணித்தது பிரிட்டன்

## ஸ்நோடென் வெளியிடும் அதிரடித் தகவல்கள்

லண்டன், ஜூன் 19
2009ஆம் ஆண்டு பிரிட்டனில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளின் தலைவர்கள் பிரிட்டன் உளவுத்துறையால் கண்காணிக்கப்பட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் இரகசிய கண்காணிப்புத் திட்டம் தொடர்பான தகவல்களை வெளியிட்டு அதிர்ச்சி ஏற்படுத்திய அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏயின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட்ஸ் ஸ்நோடென்.




''ஜி-20 மாநாட்டில் பங்கேற்ற பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரிட்டன் உளவுத்துறை கண்காணித்தது. அப்போதைய ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ், மொஸ்கோவில் உள்ள தலைவர்களுடன் செய்மதி கைக்கோள் தொலைபேசியில் பேசியதை இடைமறித்துக் கேட்பதற்கு அமெரிக்க உளவுத்துறையும் முயற்சிகளை மேற்கொண்டது'' என்று கூறியுள்ளார் ஸ்நோடென்.

''பிரிட்டன் உளவு அமைப்பான ஜி.சி.எச்.க்யூ, மாநாட்டில் பங்கேற்ற அனைத்து வெளிநாட்டுத் தலைவர்களினதும் தொலைபேசி உரையாடல்களை பிரிட்டன் உளவுத்துறை இரகசியமாகப் பதிவு செய்தது. அவர்கள் பரிமாறிக்கொண்ட மின்னஞ்சல்கள் பதிவு செய்யப்பட்டன. அவர்களின் மடிக் கணினிகளில் இருந்த தரவுகள் எடுக்கப்பட்டன. எனினும் சில நாடுகளின் பிரதிநிதிகள் தமது மின்னஞ்சல்களைத் தந்திரமாகவும் அனுப்பியிருந்தனர். கலந்துகொண்ட தலைவர்கள் யாருடன் பேசுகின்றனர் என்று கண்காணிக்க 45 பேர் கொண்ட குழுவை அமைத்திருந்தது ஜி.சி.எச்.க்யூ.'' என்றும் மேலும் கூறுகின்றார் அவர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ஜி-8 நாடுகளின் மாநாடு பிரிட்டனில் ஆரம்பமாகியுள்ளது. ஸ்நோடென் தற்போது போட்டிருக்கும் குண்டு 'ஜி-8' மாநாட்டில் வெடிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

### பலஸ்தீனம்தான் தீர்வு; மாற்று இல்லை – கிளிங்டன்

ஜெருசலேம், ஜூன் 19
பலஸ்தீனத்துக்கு மாற்று எதுவுமில்லை என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிங்டன் இஸ்ரேல் சென்றுள்ள பில் கிளிங்டன் அங்கு நடந்த ஜனாதிபதி ஷிமோன் பெரஸின் 90 ஆவது பிறந்த நாள் விழாவை பெருமைப்படுத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்தார். (ற)

### ஹஜ் பயணத்தை ஒத்திவைக்க கோரிக்கை

மக்கா, ஜூன் 19
ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள விரும்பும் யாத்திரிகர்கள் தங்களுடைய பயணத்தை இந்த ஆண்டு இறுதி வரை ஒத்தி வைக்க வேண்டும் என்று சவூதி அரேபிய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுகுறித்து சவூதி அரேபிய அரசு விடுத்துள்ள அறிக்கையில்,

''மக்காவுக்கு ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. இதனால் ஏற்படும் கூட்ட நெரிசல், அசம்பாவிதம் ஆகியவற்றைத் தடுக்க அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி வெளிநாட்டு யாத்திரிகர்களின் எண்ணிக்கையை 20 சதவீதமும் உள்நாட்டு யாத்திரிகர்களின் எண்ணிக்கையை 50 சதவீதமாகவும் குறைக்க அரசு முடிவெடுத்துள்ளது. மெக்காவில் உள்ள மிகப் பெரிய மசூதியை மேலும் விரிவு படுத்தும் பணிகள் நடை பெற்று வருகின்றன.

அதனால் ஹஜ் மற்றும் உம்ரா வழிபாடுகளுக்காக மக்கா வரும் யாத்திரிகர்கள் தங்களுடைய பயணத் திட்டத்தை இந்த ஆண்டு இறுதி வரை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### வார்த்தைகளை விட செயலே முக்கியம்

வடகொரியாவுக்கு கூறுகிறது அமெ.

வோஷிங்டன், ஜூன் 19
''வார்த்தைகளை வைத்து அல்லாமல் செயற்பாடுகளை வைத்தே வடகொரியா தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்'' என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

வடகொரிய விடுத்துள்ள உயர் மட்டப் பேச்சுக்கள் தொடர்பான அழைப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமெரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளது.

பிராந்தியத்தின் அமைதியைப் பேணுவதற்காக அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடத்தத் தாம் தயார் என்று வடகொரியா கடந்த வார இறுதியில் கூறியிருந்தது. பேச்சுக்கான இடம் மற்றும் காலத்தை அமெரிக்கா தீர்மானிக்க முடியும் என்றும் பேச்சுக்காக, எந்த முன்னிபந்தனைகளும் விதிக்கப்படக் கூடாது என்றும் வட கொரியா வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



துருக்கியின் இஸ்தான்புல் நகரில் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோரை அகற்றும் நடவடிக்கையில் துருக்கிப் பொலிஸார் இறங்கியுள்ளனர். இஸ்தான்புல்லில் உள்ள கெஸி பூங்காவை அகற்றி வணிக வளாகம் கட்டும் அரசின் தீர்மானத்துக்கு எதிராகவே ஆர்பாட்டங்கள் நடைபெறுகின்றன. கெஸி பூங்கா அமைந்துள்ள பகுதியிலும், தக்சிம் சதுக்கத்திலும் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களையே கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் தண்ணீர் பீரங்கிகள் கொண்டு அகற்றும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர். குறித்த பகுதிகளில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று அந்நாட்டின் பிரதமர் எர்டோகன் விடுத்த எச்சரிக்கையின் பின்னரே பொலிஸார் இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.(ற)




### சுமத்ரா காட்டுத் தீயால் சிங்கப்பூரில் புகைமூட்டம்

கோலாலம்பூர், ஜூன் 19
இந்தோனேசியாவின் சுமத்ரா காடுகளில் ஏற்பட்டுள்ள தீயால் மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் புகை மண்டலமாகக் காணப்படுகின்றன. அதையடுத்து அந்த நாடுகளில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

சுமத்ரா காடுகளில் ஏற்பட்டுள்ள தீ கட்டுப்படுத்த முடியாத நிலையில் வேகமாகப் பரவி வருகின்றது. அதையடுத்து சிங்கப்பூர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. காட்டுத் தீயால் பரவிய புகை மண்டலம் சிங்கப்பூரைச் சூழ்ந்துள்ளது. கடும் புகை மண்டலத்தால் மக்கள் கண் எரிச்சல் மற்றும் சுவாசம் தொடர்பான பிரச்சினைகளில் சிக்கியுள்ளனர். அதையடுத்து அங்கு பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இதேவேளை, புகை மண்டலம் மலேசியாவினுள்ளும் பரவி வருகிகின்றது என்று கூறப்படுகிறது. (ற)

### ஆயுதம் கொடுப்போருக்கு காத்திருக்கின்றது ஆபத்து

எச்சரிக்கின்றார் சிரிய ஜனாதிபதி



டமாஸ்கஸ், ஜூன் 19
கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கத் தீர்மானித்திருக்கும் நாடுகள் கடுமையான விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத்.

ஜேர்மனியில் வெளியாகும் நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''எனது ஆட்சிக்கு எதிராகப் போராடி வரும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி ஆதரவு கொடுத்தால் அந்த நாடுகளில் சிறிது காலத்திலேயே தீவிரவாதம் தலைதூக்கும். அந்த நாடுகளின் தற்போதைய செயல்பாடுகளுக்காக பின்னர் அந்த நாடுகள் அனைத்தும் பெரும் விலை கொடுக்க வேண் டிய நிலை ஏற்படும்'' என்று அந்த நேர்காணலில் அசாத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.(ற)

### புனிதப் போர் எது?

விளக்குகிறார் லஷ்கர் – ஈ– தொய்பா இயக்கத்தின் நிறுவுநர்

இஸ்லாமாபாத், ஜூன் 19
பாகிஸ்தானுக்குள் நடத்தப்படும் பயங்கரவாதத் தாக்குதல்கள் புனிதப் போர் ஆகாது என்று தெரிவித்துள்ளார் லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தை நிறுவிய ஹபீத் சயீத். அண்மையில் பாகிஸ்தானை உருவாக்கிய முகமது அலி ஜின்னாவின் இல்லம் தகர்க்கப்பட்டமை மற்றும் பாடசாலை மாணவிகள் பஸ் மீதான தாக்குதல்கள் ஆகியவற்றைக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் பாகிஸ்தானுக்கு எதிராகச் [illegible] றன. பாகிஸ்தானில் நடைபெறும் இதுபோன்ற தாக்குதல்கள் அவர்களுக்கு மேலும் சாதகமாகிவிடும்.

பாகிஸ்தானில் நடத்தப்படும் தாக்குதல்கள் புனிதப் போர் ஆகாது. இதுபோன்ற பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு எதிராக நான் பத்வா (தடை) விதிக்கிறேன். இனி எவரும் பாகிஸ்தானில் தாக்குதல் நடத்தக் கூடாது.

ஒற்றுமைதான் நமது வலிமையாக இருக்க வேண்டும். நமக்குள் சண்டை, சச்சரவுகள் கூடாது. தங்கள் சுதந்திரத்தை அடையமுஸ்லிம்கள்தொடர்ந்து புனிதப் போர் நடத்த வேண்டும்'' என்றுள்ளது.

ஹபீத் சயீத், 2008ஆம் ஆண்டு இந்தியாவில் மும்பை நகரில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

### 15 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து உயிர் தப்பிய அதிசய இளைஞர்

மெல்போர்ன், ஜூன் 19
15 ஆவது மாடியில் இருந்த தவறி விழுந்த இளைஞர் அதிசயமாக உயிர் தப்பியுள்ளார். பிரிட்டனைச் சேர்ந்த டாம் ஸ்டில்வெல் என்ற 20 வயது இளைஞர் விடுமுறையைக் கழிக்க நியூஸிலாந்து சென்றிருந்தார். ஒக்லாந்து நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு அவர் தங்கியிருந்த 14 ஆவது மாடி அறைக்கு வந்திருக்கின்றார். ஆனால் அவரது அறையின் கதவு திறக்க மாட்டேன் என்று அடம்பிடித்தது. அதையடுத்து 15 மாடியில் இருந்து தனது அறையின் பல்கணியில் குதிக்கலாம் என்று முடிவெடுத்த டாம், அதற்கான அனுமதியையும் 15 மாடியில் குடியிருந்த வர்களிடம் பெற்றுக்கொண்டார்.

அவரின் 'சுப்பர்மான்' திட்டம் சரியாக நிறைவேறவில்லை. பல்கணியில் குதிக்க முயன்ற அப்படியே தரையில் போய் விழுந்தார் டாம். உடனடியாக மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்ட டாமுக்கு, சின்ன எலும்பு முறிவு மட்டும் தான் ஏற்பட்டுள்ளது என்று ஆச்சரியம் தெரிவிக்கின்றனர் மருத்துவர்கள்.

''குடிபோதையில் குதித்தால் தரையில்தானே குதிக்க முடியும்'' என்று கூறுகின்றார் 15 ஆவது மாடியில் டாமுக்கு அனுமதி வழங்கிய பெண். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### நீக்கிலஸ் கத்தறீனா

யாழ். நாவாந்துறை, 37,3ம் குறுக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் கத்தறீனா 17.06.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (19.06.2013) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவாந்துறை. (38450)(3.5.6) தகவல்: பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### திருமதி பாலசுப்பிரமணியம் நாகேஷ்வரி

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் நாகேஷ்வரி கடந்த(15.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், துஷ்யந்தா(லண்டன்) ஜிந்துசன் (லண்டன்), சிந்தனி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சண்முகநாதன், சிவனேஸ்வரி, பரமேஸ்வரி,ஜெகநாதன், பூலோகநாதன் (சுவிஸ்), சிவலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதர்சன், பவதாரணி, ரஜினிகாந்த் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வக்குமார்,பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், லக்கீசா, கிரிசன், பபிசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(20.06.2013)வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

குறிப்பு: இன்று(19.06.2013) புதன்கிழமை, நாளை(20.06.2013) வியாழக்கிழமை உரும்பிராய் தெற்கு உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (பி/9888)(3.5.6) தகவல்: சகோதரர்கள்.

### சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி மாவட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கனகபுரத்தில் இடம்பெற்றது. மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் பேராசிரியர் ராஜித விஜேசிங்க கலந்து கொண்டு உரையாற்றினார். இந்தப் பயிற்சிப் பட்டறையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், மாவட்ட சமூகசேவைகள் சிறுவர் உளவள துணை உத்தியோகத்தர்கள், பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள், பொலிஸார், படையினர், இலங்கை மனித உரிமைகள் நிலையம், சிறுவர்பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்படபலர்கலந்து கொண்டனர். (ஒ-9)

### பூநகரியில் நால்வருக்கு தற்செயல் நிவாரணம்

பூநகரி, ஜூன் 19

பூநகரி பிரதேச செயலர் ஊடாக தற்செயல் நிவாரண உதவி கோரி விண்ணப்பித்தோரில் நால்வருக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் செ.சுரேந்திரா வுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் அறிவித் துள்ளார். எதிர்பாராத தீ விபத்து, கடும்மழை, கடும்காற்று ஆகியவற்றினால் குடியிருப்புகளை இழந்தவர்களான கிருஷ்ண பிள்ளை கமலேஸ்வரன்-(நேரடம்பன், பூநகரி), கந்தசாமி கங்காதரன் (கௌதாரிமுனை), செபமாலை ஜெனி (செட்டியாகுறிச்சி) ஆறுமுகம் பரமலிங்கம்-(கிருஷ்ணாநகர், முழுங்காவில்). (ஒ-9)

### முஸ்லிம் மீடியா போரம் மாநாடு சனியன்று

கொழும்பு, ஜூன் 19

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக அமைப்பின் பொதுச் செயலாளர் எம். ஏ.எம்.நிலாம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புப் அதிதியாக சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ கலந்து கொள்வார். சிறப்பு பேச்சாளராக ஜாமிஆ நளீமியாவின் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ.எம்.சுக்ரி கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் சமூகத்துக்கும் ஊடகத்துறைக்கும் பெரும் பங்களிப்புக்களை வழங்கிய பலர் கௌரவிக்கப் படவுள்ளனர். (ஒ-ரி)

## மரண அறிவித்தல்



### திருமதி சின்னையா பொன்னுலட்சுமி

புகையிரத நிலைய வீதி, தெல்லிபழையைப் பிறப்பிடமாகவும் தற்போது சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சி.பொன்னுலட்சுமி (17.06.2013) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசலட்சுமி-நவரட்ணம் மற்றும் அன்னலட்சுமி விஸ்வலிங்கம், சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மணிமேகலாதேவி, சத்தியவாகீஸ்வரன், சிதம்பரேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு தாயாரும், சுமுகநாதன், தனலட்சுமி,ஜெயராணி, சந்திரகலா ஆகியோரின் மாமியாரும், பிரகாசினி, செல்வானந்தன், அரவிந்தன், துஸ்யந்தன்,தர்மினி, ஜனனி மலரவன், சிவந்தன், சபேசன், ஜயந்தன்,ரவிகரன்,லட்சாயினி,ஜயந்தினி ஆகியோரின் பேர்த்தியும்,தர்னியா,கிஷான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2013) புதன்கிழமை வல்லை வீதி, சங்கானையில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.:021 300 6435. (38448)(3.5.6) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஒப்பிலாமணி வேலுப்பிள்ளை

காரைநகர், நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும், கனடா, கோவளம் காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட ஒப்பிலாமணி வேலுப்பிள்ளை (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஒப்பிலாமணி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (கனடா), சோதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி, கணபதிப்பிள்ளை, பாலசிங்கம் (ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர் - கா.ப.நோ.கூ. சங்கம்), காலஞ்சென்ற கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலட்சுமி, கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்பு மாமனும், சாத்வீகன், சானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.06.2013) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



கோவளம்,
காரைநகர். (38454) (45.6.3) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியாக நடைபெற்ற பிரதேச சபை விசேட கூட்டம்

வலி.தென்மேற்கு, ஜூன் 19
ஆறு உறுப்பினர்களுடன் ஆரம்பமான வலி.தென்மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் எந்தவித வாதப்பிரதிவாதமுமின்றி அமைதியான முறையில் குறுகிய நேரத்துக்குள் நடைபெற்று முடிந்து புதிய சாதனையைப் படைத்துள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் விசேட பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

16 உறுப்பினர்களைக் கொண்ட இந்தப்பிரதேச சபையின் விசேட கூட்டத்தில் எதிரணி உறுப்பினர் ஒருவர் உட்பட 6 உறுப்பினர்கள் மட்டும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உறுப்பினர்களால் ஆராயப்பட்டு எந்த வித வாதங்களும் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு குறுகிய நேரத்துக்குள் முடிவடைந்தது.

இந்த நிலைப்பாடு குறித்து கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மட்டுமல்ல , பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதேவேளை கடந்த காலங்களில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டங்கள், விசேட கூட்டங்கள், சிறப்புக் கூட்டங்கள் அமைதியாக ஆரம்பமாகி அமளிதுமளியுடனும், வீராவேச பேச்சுக்களுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-115)

## சிரமதானம் மூலம் வாய்க்கால் துப்புரவு

வடமராட்சி, ஜூன் 19
சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தினத்தையொட்டி மந்திகை தோட்டத்து வைரவர் கோயில் வெள்ள வாய்க்கால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஒன்றிணைந்து அந்தச் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

# தனியாரால் அமைக்கப்படும் மதுபான களியாட்ட விடுதி

### ஆட்சேபம் இருப்பின் தெரிவிக்கலாம்

வடமராட்சி, ஜூன் 19
புலோலி, ஆனைவிழுந்தான் மயானத்துக்குப் பின்புறம் மதுபான களியாட்ட விடுதி ஒன்று தனியார் ஒருவரால் அமைக்கப் படவுள்ளதால், அதற்கான ஆட்சேபனைகளைத் தெரிவிக்க விரும்புவோர் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து



மூலம் அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை பிரதேச சபை அறிவித்துள்ளது.

குறித்த இடத்தில் களியாட்ட விடுதி ஒன்றை அமைக்க அந்த இடத்து ஆதன உரிமையாளர் விண்ணப்பம் ஒன்றை பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு சமர்ப்பித்துள்ளார்.

இந்த விடுதி அமைப்பதற்கு யாராவது ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில் தமது ஆட்சேபனையை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் சபைக்கு சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பிரதேச சபை கேட்டுள்ளது.

இதேவேளை, இறுதியாக நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆனைவிழுந்தான் மயானத்துக்குப் பின்புறம் கட்டப்படும் கட்டடம் தொடர்பான விண்ணப்பம் மதுபான சாலைக் குரியதாக உள்ளதால் அந்த விண்ணப்பம் அனுமதிக்காக மதுவரித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)

## பிரச்சினை என்னவோ, ஏதோ...?



கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கட்டுமானப் பணிகள் இடை நிறுத்தப்பட்டு கவனிப்பின்றிக் கிடக்கும் வேலணை வங்களாவடியில் உள்ள பொது மண்டபம் இது. பிரச்சினை என்னவாக இருக்கும்...? (ஒ-7)

### 13 ஆவது திருத்தச் சட்டத்தை

# நடைமுறைப்படுத்துவதில் அரசு மெத்தனப் போக்கு

### சாவகச்சேரி நகரசபை கண்டனம்

தென்மராட்சி, ஜூன் 19
அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் அரசு காலத்தை இழுத்தடிப்பது குறித்து சாவகச்சேரி நகரசபையால் தெரிவிக்கப்பட்டது.

சபையின் மாதாந்தக் கூட்டம் வெள்ளியன்று நடைபெற்றது. இதன்போதே குறித்த விடயம் தொடர்பில் எதிர்ப்பு வெளியிடப் பட்டது. இது குறித்து நகரசபைத் தலைவர் தெரிவித்ததாவது:

ஏற்கனவே உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலாக 13+(பிளஸ்) வழங்கப்படுமென அறிவித்த அரசு, தற்போது அதனை 13-(மைனஸ்) நிலைக்குக் கொண்டு வந்துள்ளது வேதனைக்குரியது. தீவிரவாத போக்குள்ள அமைப்புக்களின் கோஷங்களைப் புறந்தள்ளி ஜனாதிபதி 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் ஏதும் செய்யாமல் மாகாணசபைக்கு 13+(பிளஸ்) என்ற விதத்தில் மேலும் அதிகாரங்களை வழங்கவேண்டும் என்பது பொதுமக்களின் கருத்தாகும். இந்தநிலையில் அரசைப்போன்று மாகாண சபைகளுக்கும் சகல அதிகாரங்களையும் உள்ளடக்கிய முழுமையான சபையாக இயங்கச் செய்வதற்கு ஜனாதிபதி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொதுமக்களால் விடுக்கப்படும் கருத்துக்களை நகரசபை வரவேற்பதுடன், அதனை நடைமுறைப்படுத்த பின்னடிப்பது குறித்து எதிர்ப்பைத் தெரிவிப்பதென சபையினரால் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படுவது குறித்து பிரதேச செயலகங்கள் சில ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. (வ-9)

## சங்கக் கிளையில் பால்மா திருட்டு



வடமராட்சி, ஜூன் 19
கரணவாய் மத்தி, நாவலர் மடத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளையில் திருடப்பட்ட பால்மாவின் பெறுமதி சுமார் 75 ஆயிரம் ரூபா எனப் மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு அருகில் உள்ள வீட்டு வழியாகச் சென்ற திருடர்கள் சங்கக் கிளை கதவை உடைத்து உட்சென்று பால் மாக்களைத் திருடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான குறித்த கிளையில் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-8)

# கிராம அபிவிருத்திச் சங்கங்களின் கூட்டங்களை நடத்த நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஜூன் 19
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் காலங்கடந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இது தொடர்பான அறிவுறுத்தலை சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட வலி. தென்மேற்கு பிரதேசத்தில் 20 கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 24 மாதர் முன்னேற்றச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. கிராம உத்தியோகத்தரின் ஒத்துழைப்பின்மை காரணமாக ஏனைய எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அபிவிருத்திச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படவில்லை.



கடந்த காலங்களில் நிதியுதவி வழங்கி வந்த பொது நிறுவனங்கள் தற்பொழுது நிதி உதவி வழங்கப் பின்னடிப்பதால் பல கிராம முன்னேற்றச் சங்கங்கள் பெயரளவில் மட்டும் கிராமத்தினதும் அங்கு வசிக்கும் மக்களினதும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக உருவாக்கப்பட்டு வருகின்றன.

இயங்கி வருகின்றன.

இயங்கிக் கொண்டிருக்கும் 20 கிராம அபிவிருத்திச் சங்கங்களில் இரு வருடங்களுக்கு ஒரு தடவை பொதுக் கூட்டம் நடத்தி புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்ய வேண்டிய நிலைப்பாடு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் காலங்கடந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இதற்கான அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட சங்கங்களின் செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். (வ-115)

# தெற்கு மீனவர்களுக்கு இரங்கல் தெரிவித்து ஒருநாள் தொழிலைத் தவிர்த்து 'கடல் சாந்தி'

### யாழ். கடற்றொழில் அமைப்புக்கள் ஒருமித்த தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
சீரற்ற காலநிலையால் உயிரிழந்த தென்பகுதி மீனவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக வடபகுதி கடற்றொழில் கிராமிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து தொழிலுக்குச் செல்லாது ஒருநாள் துக்கம் அனுஷ்டிக்க முடிவாகியுள்ளது.

யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் தலைவர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

> அனைத்து கடற்றொழில் கிராமிய அமைப்புக்களும் ஒரு நாள் தொழிலுக்குச் செல்லாமல் தங்களின் அனுதாபத்தைத் தெரிவிக்கவுள்ளன.

தென்பகுதியில் காலநிலை மாற்றத்தால் உயிரிழந்த மீனவர்களுக்கு மீனவ சமுதாயம் எனும் ரீதியில் வடபகுதி மீனவர்கள் ஏற்கனவே இரங்கல் தெரிவித்திருந்த நிலையில், பாதிப்புற்ற குடும்பங்களின் மன ஆறுதலுக்காக கடற்றொழில் சாந்தியாக ஒன்றிணைந்து அனைத்து கடற்றொழில் கிராமிய அமைப்புக்களும் ஒரு நாள் தொழிலுக்குச் செல்லாமல் தங்களின் அனுதாபத்தைத் தெரிவிக்கவுள்ளன.

இந்த நிலையில் கடற்றொழில் அமைச்சருக்கு இது குறித்து அறிவித்து அனைத்து கடற்றொழில் கிராமிய அமைப்புக்களுக்கும் தகவல் வழங்கப்படும். இந்த கடற்றொழில் சாந்திக்கு மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 இற்கும் மேற்பட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புக்கள் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலின்போது மீனவர்களது பிரச்சினைகளும் ஆராயப்பட்டன. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி உத்தியோகத்தருக்கு தாய், தந்தை போன்றது அரசு

## திருமலையில் சுசந்த புஞ்சிநிலமே

திருகோணமலை,ஜூன் 19
பொதுஜன ஐக்கிய முன்னணி அரசால் நியமனம் வழங்கப்பட்டு வாழ்வு பெற்றவர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.
இந்த அரசு சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தாய், தந்தை போன்றது என்று பொருளாதார பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்தார்.
அகில இலங்கை சமுர்த்தி ஊழியர் சங்கம் திருகோணமலை மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்த கூட்டம் திருமலை விபுலானந்தா கல்லூரியில் நடைபெற்றது.
இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
'வாழ்வின் எழுச்சி' திணைக்களத்தை உருவாக்கி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவரையும் அரச ஊழியர்களாக உயர்த்த அரசு மேற்கொண்டுள்ள முன்னெடுப்பு பாராட்டத்தக்கது.
உலகத்தில் அரச ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்ட சம்பவங்கள் அமெரிக்க போன்ற நாடுகளில் கூட நடைபெற்றுள்ளன.
ஆனால், இவ்வளவு தொகையினர் ஓய்வூதியத்துடன் அரச ஊழியர்களாக மாற்றப்படுவதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.
மகாவலி அதிகார சபை ஊழியர்கள் மற்றும் மின்சார சபை ஊழியர்கள் போன்றோர் ஓய்வூதியதிற்காக போராடினர். அவர்களின் போராட்டம் வெற்றி பெறவில்லை. ஆனால் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் -என்றார். (ச)



மட்டக்களப்பு தாதியர் கல்லூரியில் 2011-ஏ பிரிவில் கற்கும் தாதிய மாணவர்களுக்கு தொப்பி சூட்டும் நிகழ்வு திங்கட்கிழமை நடைபெற்றபோது,தொப்பி சூட்டப்பட்ட மாணவர்களை காணலாம்.

# காத்தான்குடி நகரசபை தலைவர், உறுப்பினரை கைதுசெய்ய உத்தரவு

காத்தான்குடி,ஜூன் 19
காத்தான்குடி நகரசபை தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்பர், மற்றும் காத்தான்குடி நகரசபை உறுப்பினர் எம்.எஸ். சியாத் ஆகிய இருவரையும் கைதுசெய்யுமாறு காத்தான்குடி பொலிஸாருக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லா செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.
காத்தான்குடி ஜாமியுழ்ழாபபீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு சொந்தமானதென கூறப்படும் மையவாடி காணியில் காத்தான்குடி நகரசபை கட்டடமொன்றை அமைக்க வேலியிட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.
இந்த வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு காத்தான்குடி நகரசபை தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தது.
இந்த அழைப்பாணையை ஏற்று நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கத் தவறிய காரணத்தாலே அவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

# வீட்டுத் திட்ட தெரிவில் பயனாளிகளுக்கு அநீதி

## தெரிவை மீள் பரிசீலனை செய்யக்கோரி ஏறாவூர் மக்கள் மனு

ஏறாவூர்,ஜூன் 19
மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் ஏறாவூர், சதாம் ஹஸைன் ரூபி கிராமத்தில் புனரமைக்கப்படும் 50 வீடுகளை பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் விடயத்தில், அநீதியும் முறையற்ற தெரிவும் இடம்பெற்றுள்ளன.
அதனை மீள்பரிசீலனை செய்யக்கோரி ஏறாவூர் பிரதேச செயலாளரிடம் மனு கையளிக்கப்பட்டுள்ளது.
இந்த மனுவை திங்கட்கிழமை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டதாக ஏறாவூர் பிரதேச செயலர் எஸ்.எல். எம் ஹனீபா தெரிவித்தார்.
இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
எவ்விதமான அடிப்படை வசதிகளும் வீட்டு வசதியும் இல்லாததால் திருமண வயதைக் கூட கடந்து இந்தக் கிராமத்திலுள்ள எங்களில் பலர் வாழ்க்கையிழந்து பரிதவிக்கின்றோம்.
ஏழைகளாகிய எங்களின் நிலைமை இவ்வாறிருக்கும் போது இந்த ஐம்பது வீட்டுத் திட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கும், அரசியலில் ஈடுபடுவோருக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு ஏழைகளின் பெயரால் வசதிபடைத்தோருக்கு வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன. இது முறைகேடும் அநீதியுமாகும்.
எனவே ஏழைகளின் பெயரில் நிர்மாணிக்கப்பட்டு செல்வாக்கின் அடிப்படையில் அரச உத்தியோகத்தர்களுக்கும் அரசியல் பின்புலமுள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள வீடுகளை உடனடியாக மீளப்பெற்று கிராமத்திலுள்ள ஏழைகளுக்கு மாத்திரம் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு வேலைத்திட்டம்



போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு,ஜூன் 19
மட்டக்களப்பு,வாழைச்சேனை பிரிவுக்குட்பட்ட பறைந்துரைச்சேனை கிராமத்தில் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.
இந்த வேலைத்திட்டம் 'போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்போம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இந்த வேலைத்திட்டத்தை பறைந்துரைச்சேனை நூரியா ஜும்ஆ பள்ளிவாசல், பறகத் பள்ளிவாசல், பதுரியா பள்ளிவாசல், ஹுதா பள்ளிவாசல் ஆகியவற்றின் நிர்வாகிகள், சிவில் பாதுகாப்புக்குழுப் பிரதிநிதிகள் உட்பட பலர் ஒன்றிணைந்து ஆரம்பித்தனர்.
பறைந்துரைச்சேனை பகுதிகளில் போதைப்பொருள் வியாபாரம் செய்பவர்கள், போதைப்பொருள் பாவனையாளர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள் தொடர்பில் பள்ளிவாசல் நிர்வாகிகள் விளக்கமளித்தனர். (ச)

# ஒலுவில் மீன்பிடி துறைமுகம் ஜூலையில் திறக்க வேண்டும்

## ஜனாதிபதி மஹிந்த உத்தரவு



அம்பாறை,ஜூன் 19
அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்களின் நலன் கருதி ஒலுவில் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்தை எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் திறக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.
திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் விடுத்த வேண்டுகோளை ஏற்றே ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்துள்ளார்.
அம்பாறை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.
ஒலுவில் பகுதி ஆழ்கடல் மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்த அவர், ஒலுவிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீனவர் துறைமுகம் இன்னும் திறக்கப்படாமல் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

# விசேட தேவையுடையோருக்கு கிடைத்தது சக்கர நாற்காலி

மட்டக்களப்பு,ஜூன் 19
மட்டக்களப்பு, கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தால் விசேட தேவையுடையோருக்கு சக்கர நாற்காலி,ஊன்றுகோல் உபகரணம் வழங்கப்பட்டன.
கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் இந்த உபகரணங்களை பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம் வழங்கி வைத்தார்.(ச)

# கல்முனை பிரதேசத்தில் அதிக குற்றச் செயல்கள்


## பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



அம்பாறை,ஜூன் 19
அம்பாறை,கல்முனை பிரதேசத்திலேயே கூடுதலான குற்றச் செயல்கள் இடம் பெறுகின்றன என்று அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கபில ஜெயசேகர தெரிவித்தார்.
கல்முனையில் நடை பெற்ற சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடுகள் மாவட்டத்தின் சகல பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.
குற்றச் செயல்கள் நடைபெறுகின்ற போது சிவில் பாதுகாப்பு குழுவினர் பொலிஸாரிடம் முறையிடுகின்றனர், அதே போன்று அவர்கள் பொலிஸாருடன் நட்பும் இரகசிய தொடர்பும் வைத்துள்ளனர்.
அதேபோன்று சிவில் பாதுகாப்பு குழுவினரின் நடவடிக்கைகள் குறித்து பொது மக்கள் பொலிஸாரிடம் முறையிடும் நிலை அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்றது.
அவ்வாறு பொது மக்களால் செய்யப்படுகின்ற முறைப்பாட்டை புலனாய்வு செய்கின்ற போது சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் குற்றங்கள் செய்வதும், குற்றங்களுக்கு துணைபோவதும் தெரிய வருகின்றது.
சிவில் பாதுகாப்புக் குழுக்களின் கடமை, பொறுப்பு என்னவென்று தெரியாமல் செயல்படுவதனால்தான் இவ்வாறான நிலை ஏற்படுகின்றது.
அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல சிவில் பாதுகாப்புக் குழுக்களின் அங்கத்தவர்களையும் பொலிஸார் கண்காணிக்க வேண்டும்.
கல்முனை பிரதேசத்திலேயே குற்றச் செயல்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன.
கடந்த ஐந்து மாதங்களில் 35 குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. -என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமத்தில் பிரதமர் வழிபாட்டில் ஈடுபட்டார்



கொழும்பு,ஜூன் 19
கதிர்காமத்துக்கு திங்கட்கிழமை சென்ற பிரதமர் தி.மு. ஜயரத்ன சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.
புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சால் மகா தேவாயலயத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட அமைப்புப் பணிகளையும் பிரதமர் பார்வையிட்டார்.
அதன் பின்னர் கிரிவிகாரைக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர் முக்கிய மத குருமாரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச)

'13' திருத்தச் சட்டம் குறித்து

# ஆளும்கட்சி எம்.பிக்களுக்கு கருத்து வெளியிட சந்தர்ப்பம்

கொழும்பு,ஜூன் 19
13 ஆவது திருத்தச் சட்ட வரைவு குறித்து கருத்து வெளியிட அனைத்து ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப் படவுள்ளது.
இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அலரி மாளிகையில் திங்கட்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
13 ஆம் திருத்தச் சட்ட வரைவு குறித்து தமது கருத்தை வெளியிடவும், அது குறித்து பேச்சு நடத்தவும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்கள் நியாயமான முறையில் நடத்தப்பட உள்ளன. எனவே, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுடன் முன்னரை விடவும் சுமுகமாக நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

> மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியை வெற்றியீட்டச் செய்வது அனைவரினதும் கடமை.



மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியை வெற்றியீட்டச் செய்வது அனைவரினதும் கடமையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஐ.தே.கட்சி முக்கியஸ்தர் சிலரின் உறுப்பு உரிமை ரத்து

கொழும்பு,ஜூன் 19
ஐக்கிய தேசியக் கட்சியின் சில முக்கியஸ்தர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.
தென் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன, மேல் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீலால் லக்திலக்க உள்ளிட்ட கட்சியின் 22 முக்கியஸ்தர்களின் உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டுள்ளது.
இந்தத் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற் குழு எடுத்துள்ளது. கட்சித் தலைமையகம் சிறிகொத்தா மீது தாக்குதல் நடத்தியதாக குறித்த உறுப்பினர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பில் விசா ரணை நடத்திய ஒழுக்காற்று குழு, குறித்த உறுப்பினர்களின் உறுப்புரிமையை ரத்து செய்து கட்சியை விட்டு நீக்கத் தீர்மானித்தது. (ச)



இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டு முப்படைகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டார். அவருக்கு திங்கட்கிழமை கொழும்பிலுள்ள இராணுவ தலைமையகத்தில் இராணுவத்தினர் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

## சீன மொழியிலும் 'மஹிந்த சிந்தனை'

கொழும்பு,ஜூன் 19
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 'மஹிந்த சிந்தனை ' சீன மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
நான்கு நாள்கள் பயணத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சீனா சென்ற போது சீன ஜனாதிபதி, இந்தப் புத்தகத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்தவிடம் கையளித்துள்ளார்.
மஹிந்த சிந்தனையை சீன மொழியில் வாசித்த சீனர்கள் அதில் அடங்கியுள்ள விடங்களை விதந்துரைத்தனர் என்று ஜனாதிபதியுடன் சீனச் சுற்றுலாவில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம்.அஸ்வர் தெரிவித்தார்.

> சீன பல்கலைக் கழகங்களிலும் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலும் 'மஹிந்த சிந்தனை' ஆய்வுகளுக்குட் படுத்தப்பட்டது.

சீன பல்கலைக்கழகங்களிலும் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலும் இந்த மஹிந்த சிந்தனை ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அஸ்வர் கூறுகிறார். (ச)

## '13' மாற்றம் குறித்து தூதர்களுக்கு விளக்கம்

கொழும்பு,ஜூன் 19
13 ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் குறித்து வெளிநாட்டு தூதர்களுக்கு விளக்கம் அளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
இந்த வேலைத்திட்டம் வெளிவிவகார அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.
13 ஆவது திருத்தச் சட்டம் தற்போது அதிகம் பேசப்படுகின்ற ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.
வடமாகாணத் தேர்தலை 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து, எதிர்க் கட்சிகளில் மாத்திரமன்றி, அரச பங்காளி கட்சிகளிடையேயும் தற்போது நெருக்கடிகள் உருவாகியுள்ளன.
வடக்குமாகாண தேர்தலை 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் நடத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
இந்தநிலையிலேயே 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் குறித்து வெளிநாட்டு தூதர்களுக்கு விளக்கமளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. (ச)

## ஆசிரியையை முழந்தாளிடவைத்த உறுப்பினரின் பதவி பறிபோனது

### தேர்தலில் போட்டியிடவும் தடைவிதிப்பு

கொழும்பு,ஜூன் 19
பாடசாலை ஆசிரியையை முழங்காலில் நிறுத்தி தண்டனை வழங்கிய வட மேல் மாகாணசபை உறுப்பினர் ஆனந்த சரத்குமார ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.
இவர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் கட்சியால் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையில் ஆனந்த சரத்குமார தனது வட மேல் மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
பாடசாலை மாணவிகள் சிலர் குட்டைச் சட்டை அணிந்திருந்தமை தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கிய ஆசிரியையை முழங்காலில் நிறுத்திய சம்பவம் தொடர்பில் ஆனந்த சரத்குமார கைது செய்யப்பட்டு எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில்



வைக்கப்பட்டுள்ளார்.
ஆசிரியையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட மாணவிகளில் அவரது மகளும் ஒருவராவார்.
ஆசிரியை ஒருவரை முழங்காலில் நிறுத்தி வைக்கப்பட்டமை கல்விச் சமூகத்தையே கலங்கடித்த சம்பவம் என்று கூறி கண்டனங்கள் வெளியிடப்பட்டன.
இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியையுடன் திங்கட்கிழமை தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, அந்த ஆசிரியைக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.
இதேவேளை, இந்த மாகாண சபை உறுப்பினரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நவகத்தேகம நவோதயா பாடசாலைக்கு முன்னால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பிறக்கும் குழந்தைகளில் 16.7 வீதம் நிறையில் குறைவு

### சுகாதார அமைச்சின் ஆய்வில் தகவல்



கொழும்பு,ஜூன் 19
நாட்டில் 16.7 வீதமான குழந்தைகள் நிறைகுறைந்தவையாகப் பிறக்கின்றன. 17.3 வீதமானவர்கள் வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி அற்றவர்களாக உள்ளனர். 14.7 வீதமானவர்கள் உடல் மெலிந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.
இந்தவிடயம் சுகாதார அமைச்சின் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இலங்கை சுகாதாரத்துறை பல அம்சங்களில் முன்னேற்றங்களை அடைந்துள்ள போதிலும் போஷாக்குடன் தொடர்பான பல சுட்டெண்களில் பின்னடைவையே அவதானிக்க முடிகின்றது.
வயதுக்கேற்ற வளர்ச்சி இன்மை, உடல் மெலிதல், நிறை குறைந்த குழந்தைகளின் பிறப்பு ஆகியன அதிகரித்துள்ளன என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் கூறினார். 16.2 வீதமான கர்ப்பிணிப் பெண்களும், 19.6 வீதமான பாலூட்டும் தாய்மாரும் இரத்தச் சோகை நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.
அதனால் விஷேட போஷாக்கு வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு மாகாண மற்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட் டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களுக்கு வாழ்வியல் நீதி; தொடர்ந்து படர்கிறது இருள்

உடல் வற்றும் வற்றும் என்று காத்திருந்த கொக்கு உடல் வற்றிச் செத்ததாம் என்று எம்மிடையே பேச்சு வழக்கில் ஒரு வாசகம் உண்டு. அத்தகைய நிலையில் நீண்ட காலமாக அரசியல் கைதிகள் என்ற பெயர் அட்டையுடன் சுமார் 810 பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் அரசியல் கைதிகள் அல்லர், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே என்று அரச தரப்பில், சபை முதல்வரும் அமைச்சருமான சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தார்.

சம்பந்தப்பட்டவர்கள் எந்த வகை சார்ந்தவர்கள் என்று விவாதிப்பதை விட, விசாரணை என்ற பெயரில் மிகமிக நீண்ட காலத்துக்குத் தடுத்து வைத்திருப்பது (ஒரு வகை) மனிதஉரிமை மீறலாகும்.

உள்ளார்ந்து பார்த்தால், இவர்கள் மீதான வழக்குகள் இழுத்தடிக்கப்படுகின்றன. வழமைக்கு மாறாக நீண்ட காலத் தவணை போடப்படுகின்றது. அதனால் தமக்கு விடுதலை கிடைக்கும் என்பதிலும், சிறை வாழ்க்கை முடிவுறும் வாய்ப்புண்டு என்பதிலும் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

மிகப் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் தமக்கு நீதி கிடைக்கும் என்பதிலோ, விடுதலையாகும் வாய்ப்பு உண்டு என்பதிலோ நம்பிக்கை இழந்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மொத்தத்தில் தமது எதிர்காலம் குறித்த நம்பிக்கை இழந்தவர்களாகவே பொழுதுகளை, நாள்களைக் கழிக்கிறார்கள்.

தமது பிள்ளைகள் மனிதப் பிறவிகளாக, இந்த நாட்டின் பிரசைகளாகக் கணிக்கப்படாமல், சட்டமும் அதனூடான நீதியும் அவர்களுக்குக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு வற்றி வரண்டுவிட்ட நிலையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, அதன் தலைவருக்கு அரசியல் கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் பகிரங்கக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை பற்றிய செய்திகள் கடந்த வாரம் வெளிவந்திருந்தன.

அரசியல் கைதிகளின் பெற்றோர் தமது அந்தப் பகிரங்கக் கடிதத்தில் சுட்டிக்காட்டிய தேவைகள், இல்லாமைகள் மற்றும் பிரச்சினைகளில் முக்கியமான சிலவற்றை இங்கே தொட்டுக்காட்டலாம்:

★ பொருளாதார ரீதியாக அடிமட்டப் பிரச்சினைகள்–

கைதிகளின் குடும்பங்கள் ஒருவேளை உணவுக்கே அல்லாடும் நிலைமை.

★ பிள்ளைகளின் கல்விக்குரிய செலவுகளை ஈடு செய்ய முடியாமை, மற்றும் வாழ்வாதாரச் செலவுகளுக்கு பணம் இல்லாமை–

★ கைதிகள் பலரின் பிள்ளைகள் கல்வியைத் தொடர முடியாத நிலை.

★ சட்டத்தரணிகள் தொடர்பான உதவிகளைப் பெறுவதில் உள்ள கஷ்டங்கள்.

தமது பிள்ளைகளுக்கு நீதி கிடைக்கும், விடுதலை கிட்டும் என்ற நம்பிக்கையை முற்றாக இழந்த நிலையில், அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு எழுதிய கடிதம் மிக உருக்கமானது.

கைதிகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்த விசேட நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்று அரசாங்கம் தனது சொந்தத்தில் 2010ஆம் ஆண்டில் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு–

நீண்ட காலக் கைதிகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்த நான்கு விசேட நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும், செயற்பட வேண்டும் என்று விசேடமாக அறிவுறுத்தி இருந்தது. வருடங்கள் மூன்று கழிந்தும் அதற்கான நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அரச தரப்புகள் ஏறெடுத்தும் பார்த்ததாக இல்லை!

சுமார் கால்நூற்றாண்டு காலமாக சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், போதைப் பொருள் கடத்தல் கைதிகளுடன் சிறையில் வைக்கப்பட்டிருப்பது அவர்களுக்கு மற்றொரு நரக வேதனை!

போர்க் காலத்தில், அதனை நிறுத்த உத்தேசித்து நடைபெற்ற (2002 ஆம் ஆண்டில்) சமாதானப் பேச்சுக் காலத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் கூட, விசாரணை இல்லாமலோ அல்லது அது பூர்த்தி செய்யப்படாமலோ இன்னமும் சிறைக் கூடங்களில் தமது காலத்தைக் கழிக்க நேர்ந்துள்ளது. ஏன்? போர் நிறுத்தமும், சமாதானப் பேச்சுக்களும் கூட அவர்களுக்கு விமோசனம் தரவில்லை.

ஒருபுறம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக அனைத்துலகத்தை 'ஏய்க்காட்டும்' அரசின்போக்கு தொடர்கிறது. அதேவேளை மறுபுறம் நீண்ட காலமாக, உரிய விசாரணை இன்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் துன்பியல் வாழ்க்கை முடிவின்றித் தொடர் கதையாகத் தொடர்கிறது.

நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்று பொது நிகழ்வுகளில், மேடைகளில் ஆட்சியாளர்கள், அரச தலைவர்கள் முழங்குகிறார்கள்.

உரிய வழி முறைகளில் நீதிமன்ற விசாரணைகளை நடத்தாமல் '' சந்தேகத்தின் பேரில்'' என்ற கறுப்பு முத்திரையைக் குத்தி தமிழ்ப் பிரசைகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த நாட்டில் எந்தத் துறையிலேனும் வாழ்வியல் நீதி தானும் கிடைக்கும் என்று தமிழ் மக்கள் கற்பனையும் செய்ய முடியாத இருளே தொடர்ந்து படர்கிறது.

# ஈழத் தமிழரின் நிர்க்கதிக்கு இந்தியாவே முழுக் காரணம்

## இனியும் சகிக்க மாட்டாது தமிழகம்

■ மன்னார் சிந்தா

இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு இந்தியாவால் தீர்வுகாண முடியாது என்றும், அவ்வாறு எதிர்பார்ப்பதில் எதுவிதமான அர்த்தமும் இல்லை எனவும், இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா தெரிவித்துள்ளது என பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர முடியுமே தவிர, அரசியல் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியாது. அரசியல் தீர்வுக்கான மந்திரக்கோல் இந்தியாவிடம் இல்லை எனவும், இந்திய எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழு தமிழ் மக்களுக்கு தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதான் இந்தியாவின் நிலைப்பாடு என்றால், இந்தியாவின் தலையீட்டால் மாபெரும் இழப்புகளையும், அழிவுகளையும் சந்தித்து மீண்டெழமுடியாது தவிக்கும் இலங்கைத் தமிழ்த் தரப்புகளுக்கு மாத்திரமல்ல, தம் தொப்புள்கொடி உறவுகளின் இழந்த உரிமைகளுக்காக ஒன்றுபட்டுக் குரலெழுப்பி பல தியாகங்களைச் செய்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழக மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக தமிழக மாணவர் போராட்ட உணர்வுகளுக்கும், இந்திய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கொடுத்துள்ள சாட்டையடி என இதனைக் கொள்ள முடியும். அதேவேளையில் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளில் இந்தியா உதவ முடியாது.

உள்ளூர் அரசியல் நிகழ்வுகளில் தங்களை இணைத்துக்கொண்டு பிரச்சினைகளுக்குத் தாங்களாகவே தீர்வுகாண வேண்டும். இலங்கையை நட்பு நாடாக இந்தியா பார்க்கிறது. எனவே, அந்த நாடு சீர்குலைய இந்தியா அனுமதிக்காது என்றும், மேலும் கூறியுள்ள பல தகவல்களும் அனைத்துத் தமிழர்தரப்புகளுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. உண்மையில், இந்தியாவின் எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவிடம் மட்டுமல்ல, காங்கிரஸ் உட்பட வேறு எந்தவொரு தரப்பிடமிருந்தும் இப்படியான ஒரு கருத்தை தமிழர் மாத்திரமல்ல, எந்தவொரு நியாய புத்திகொண்ட மனிதப்பிறவியாலும், எதிர்பார்க்கவோ சீரணித்துக்கொள்ளவோ முடியாது.

ஏனெனில், இலங்கைத் தமிழரின் இன்றைய அவலநிலையின் தாக்கத்திற்கும், கொடூரத்திற்கும் முழுமுதற் காரணமானது இந்தியாவே. இதன் உண்மைத் தன்மையை இலங்கை அரசின் அதிகாரத்தரப்பினது ஒப்புதல் வாக்கு மூலங்களிலிருந்தே உறுதிப் படுத்திக் கொள்ளலாம்.

ஒரு தடவை இந்தியாவின் போரைத்தான் இலங்கை நடத்தியது என்றும், இன்னொரு தடவை இந்தியாவின் அபரிமித உதவி கிடைத்திருக்காவிடில் புலிகளுக்கெதிரான போரில் அவர்களைத் தோற்கடித்து போரை முடிவுக்குக் கொண்டுவந்திருக்க முடியாது என்றும், மற்றொரு முறை இந்த போர்வெற்றி இந்தியாவின் வெற்றியே என்றும் பல தடவைகள் இலங்கையரசு கூறியிருந்தது. இதன் மூலம் இலங்கைத்தமிழரின் அழிவுக்கும், போர் தோல்வியுற்றதால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும், அவலங்களுக்கும், இந்தியாவே காரணம் என இலங்கை அரசுத்தரப்பு உறுதிசெய்துள்ளதன் மூலம் அனைவரும் இந்த உண்மையைப் புரிந்துகொள்ளலாம். போருக்கு முன்னர் வடக்கு கிழக்குத்தமிழ்ப் பிரதேசங்களில் நில உரிமை உட்பட, அனைத்து உரிமைகளும், சுதந்திரங்களும் தமிழர்களுக்கு இருந்தன. புலிகளின் அதிகாரத்தின்கீழ் போர்க் கால கட்டுப்பாடுகள் சில இருந்தாலும், தமிழரின் மொழியுரிமை, சுதந்திரமாக நடமாடும் உரிமை, நிலவுரிமை, தொழிலுரிமை, போன்ற அடிப்படை உரிமைகள் அனைத்தையும் அவர்கள் முழுமையாக அனுபவித்துக்கொண்டிருந்தனர். இவை அனைத்தையும் பலாத்காரமாகப் பறித்தெடுத்து, சிங்கள அரசிடம் கையளித்துத் தமிழர்களைச் சிங்கள அரசின் அடிமைகளாக்கியது இந்தியாவே. இதன் மூலம் இன்று தமிழர்கள் தமது சொத்துக்களுடன் ஏராளமான உயிர்களையும் பலி கொடுத்தது மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டும், இழக்கப்பட்டும் இருக்கிறார்கள். போரில் அடைந்த தோல்வி மூலம் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி அடிமைப்படுத்தப்பட்டு தமது உடைமைகள், உரிமைகள் அனைத்தையும் பறிகொடுத்து தமது இருப்பையே தக்கவைக்க முடியாத நிலையில் மாபெரும் இன ஒழிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் காரணம் இந்தியாவே. இலங்கை தனியான ஒரு வேறு நாடு. இந்தியாவுக்கு அண்டை நாடே தவிர, அதற்கு உட்பட்ட நாடோ அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் உரிமைகொண்ட நாடோ அல்ல. இங்கு நடைபெற்றது சிங்கள அரசிற்கும், இந்நாட்டின் தமிழ்ப் பிரஜைகளுக்கும் இடையில் ஏற்பட்ட ஓர் அரசியல் போராட்டம். இதில் அண்டை நாடோ, வேறு நாடோ நடுநிலை வகிக்கலாமே தவிர, தலையிடக்கூடாது. தலையிடுவதானாலும் நடுநிலையில் நின்று இரண்டு பகுதிக்கும் இடையில் ஒரு நியாயமான தீர்வைக் காண உதவவேண்டுமே தவிர, ஒரு தரப்பை அழித்து மற்றத்தரப்புக்கு அடிமைப் படுத்தக்கூடாது.

ஆனால், இந்தியா இங்கே நடத்திய போரானது, தமிழரை அடிமைப்படுத்தி சிங்களத்திடம் ஒப்படைத்ததுதான். இது தமிழரை ஆக்கிரமித்து, அழித்து, எஞ்சிய தமிழரை சிங்களவரிடம் அடிமைகளாக ஒப்படைக்கத் திட்டமிட்டு நடத்திய போராகும். இவ்வாறு ஒரு பிராந்திய அண்டை வல்லரசு, இலங்கையின் அனைத்துத் தமிழ் மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கி, அவர்களின் பாதுகாப்புக் கவசமாக விளங்கிய புலிகளை அழித்தொழிக்க கங்கணம்கட்டிச் செயற்பட்டது ஏன்? அதுவும், தனது நாட்டின் ஒரு பிரிக்க முடியாத பகுதியான தமிழகத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் மீறி இவ்வழித்தொழிப்பு போரில் ஈடுபட்டது ஏன்?

தனது தலைமகன் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியை ஈவிரக்கமின்றி படுகொலைசெய்த புலித்தரப்பினரை அழிக்க வேண்டும் என்ற இந்தியாவின் வன்மத்தில் ஒருவேளை நியாயமிருக்கலாம். ஆனால், அவர்களைத் தமது விரோதிகள் என்று கருதிய புலிகளை அழிக்கும் போரில் அப்பாவித் தமிழ் மக்களையும், சேர்த்து அழிப்பது நியாயமா என்பதைச் சிந்திக்க காந்தி தேசம் ஏன் மறந்தது? அப்படித்தான் போரின்போது தவிர்க்கமுடியாமல் அந்த அப்பாவி மக்களும் அவலத்திற்குட்பட நேர்ந்ததை தவிர்க்க முடியாவிட்டாலும், போரின் பின்னர் – தமது விரோதிகள் அழித்தொழிக்கப்பட்ட பின்னர், பாதிக்கப்பட்ட தமிழருக்கு நியாயம் வழங்க மாமனிதர் நேருவின் பஞ்சசீலக் கொள்கை வழிவந்த – அஹிம்சை வழிமூலம் விலங்கொடித்த மகாத்மாகாந்தியின் தார்மீக நாடு தவறியது ஏன்? அசோக சக்கரவர்த்தியின் தார்மீகம், மகாத்மா காந்தியின் அஹிம்சை, நேருவின் பஞ்ச சீலம் எல்லாம் எங்கே என்றும், இந்தியா தமக்கு உதவும் என்று ஆவலோடு ஏங்கிக் காத்திருந்த தமிழ் மக்கள் அங்கலாய்க்கிறார்கள். ஆனாலும், கலைஞர் கருணாநிதியின் கூட்டு அரசின் தலைமைக் கட்சியான காங்கிரஸ் ஆட்சியில்தான் இந்தக் கொடூரமான தமிழின அழித்தொழிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது.


இந்தப் போரின் இறுதி வேளையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா ஆட்சியைப் பிடிக்கும். தமிழருக்கு ஒரு விடிவைத் தரும் என்றும் முழுமையாக நம்பியிருந்தாலும், தமிழரின் துரதிர்ஷ்டம் பாரதிய ஜனதா ஆட்சிக்கு வரத் தவறிவிட்டது என இலங்கைத் தமிழர் அப்போது ஏங்கி அங்கலாய்த்தனர்.

அதற்கேற்ற வகையிலான – அண்மைக்காலம் வரையான பாரதிய ஜனதாவின் கருத்துகள் இலங்கைத் தமிழருக்குச் சாதகமானதாகவே காணப்பட்டன. ஆனால், அவர்களது தற்போதைய நிலைப்பாடு இலங்கைத் தமிழரை அதிர்ச்சிக்குள்ளாக்கி அங்கலாய்க்க வைத்துள்ளது.

இந்தியாவின் ஆளும் கட்சிக்கு மாற்றுக்கட்சியாக வருகின்ற வாய்ப்புக் கொண்ட எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாவும், குறைந்தபட்சம் தம் நாட்டில் பிரிக்கமுடியாத தெற்கெல்லை மாநிலமான தமிழகத்தின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் நடந்துகொள்ளவேண்டும். இலங்கைத் தமிழர்களின் துன்பங்களை தென் தமிழகத்துத் தொப்புள்கொடி உறவான தமிழ்த்தேசியம் சகித்துக்கொண்டிருக்காது. இதற்குச் சாட்சியாக அண்மைக்காலத்தில் பலர் தமது இன்னுயிர்களைத் தற்கொடையாக்கித் தியாகம் புரிந்துள்ளனர்.

மேலும் இலங்கைத் தமிழருக்காகக் கொதித்தெழுந்து போராட தமிழக மாணவ சமுதாயம் உருவாகி மிகப்பரந்தளவில் மாநிலம் தழுவிய போராட்டங்களை நடத்தியுள்ளது. இப்போராட்டம் ஓரளவு ஏனைய மாநிலங்களின் மாணவர் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அத்துடன், அந்நிய நாடுகளின் ஊடுருவலும் இப்பிராந்தியத்தில் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. இதற்கான காரணம், இலங்கைத் தமிழர் பிரச்சினைக் காரணமாக இப்பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலையேயாகும். இந்நிலை எதிர்காலத்தில் மேலும் பல பிரச்சினைகளை இப்பிராந்தியத்தில் ஏற்படுத்துவதைத் தடுக்க முடியாமல் போகலாம். அதனால் பிராந்திய வல்லரசான இந்தியாவுக்குத் தொடர்ச்சியாகப் பல சர்வதேச முரண்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை அழுதால்...

ராஜராஜன்

நாம் வாழுகின்ற இந்த பூமி இயற்கையின் அருட்கொடையால் உருவானது. பஞ்ச பூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்பனவும் இயற்கையின் படைப்புக்களே. இந்த உலகில் வாழுகின்ற உயிரினங்கள், மரங்கள், செடி கொடிகள், புல் வகைகள், மலைகள், சமுத்திரங்கள், ஆறுகள், நதிகள் எல்லாமே இயற்கை அன்னையின் பிள்ளைகள்தான்.

தன்னால் உருவாக்கப்பட்ட உயிரினங்கள் பசியால் வாடுவதற்கு இயற்கைத் தயானவள் ஒரு போதுமே இடம்கொடுத்ததில்லை.

தீயைக் கண்டு பிடிப்பதற்கு முன்னர் வாழ்ந்த ஆதி மனிதர்கள் காடுகளில் தமது வாழ்வைக் கழித்தனர். அவர்கள் அங்கு கிடைத்த கனி வகைகள், கிழங்குகள், தம்மால் வேட்டையாடப்பட்டு தேனில் ஊற வைத்துப் பதப்படுத்தப்பட்ட மிருகங்களின் இறைச்சி என்பனவற்றை உண்டு உயிர் வாழ்ந்தனர்.

வெய்யில் மற்றும் மழை காலங்களில் இயற்கையாகவே உருவாகிய குகைகளும், அடர்ந்த கிளைகளைப் பரப்பி நின்ற மரங்களும் இவர்களுக்குத் தஞ்சமளித்தன. ஆடைகளின் தேவைகளும் இவர்களுக்கு இருக்கவில்லை. மருத்துவமனைகள் அமைந்திராத அந்தக் காலப் பகுதியில் விஷஜந்துக்களால் கடியுண்டவர்களுக்கு விஷத்தை முறிக்கும் வல்லமை கொண்ட மூலிகைகள் கை கொடுத்தன.

இரசாயனங்கள் கலக்காத தூய நீரும், மாசு கலக்காத சுத்தமான காற்றும் அந்தக் கால மனிதர்களின் ஆயுள் நீடிப்புக்கு முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. சூரியனிலிருந்து வெளிவரும் தீய ஒளிக் கதிர்களை வடிகட்டுவதற்கென அமைக்கப்பட்ட ஓஸோன் படலமும் இயற்கையின் விந்தைகளில் ஒன்றுதான். இவ்வாறு ஒவ்வொரு விடயத்தையும் இயற்கைத்தாய் இழைத்து இழைத்து எமக்கு வழங்கியுள்ளாள். ஆனால் நன்றி கெட்ட மனிதர்களாக மாறிவிட்ட நாம் இயற்கையை சிறிது சிறிதாகச் சிதைத்து வருகின்றோம். இது எமக்கு நாமே தோண்டும் குழி என்பது ஏனோ எமக்குப் புரியவில்லை.

தற்போது வாழுகின்ற மனிதர்கள் துரித மாற்றங்கள் பலவற்றைக் கண்டு வருகின்றனர். மனிதனின் இனப்பெருக்கம் பல மடங்கு அதிகரித்துள்ளதால் அவனது தேவைகளும் பெருகி வருகின்றன.

இவற்றை ஈடு செய்வதற்கு விஞ்ஞான ரீதியான செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆனால் இவையெல்லாம் இயற்கைக்கு மாறான விளைவுகளையே தோற்றுவிக்கும்.

குறிப்பாக உலகம் வெப்ப மயமாக்கப்படுவதால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமெனவும், பல நாடுகளை கடல்நீர் காவு கொள்ளும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இதை எவருமே கவனத்தில்கொள்வதாகத் தெரியவில்லை.

பண்டைய நாள்களில் இயந்திர சாதனங்கள் பாவனையில் இருந்ததில்லை. மிருகங்களும், அவற்றினால் இழுக்கப்படும் வண்டிகளும் போக்குவரத்துச் சாதனங்களாகப் பயன்பட்டன. இதனால் இயற்கை எந்த விதத்திலும் பாதிப்புக்களை எதிர்கொள்ளவில்லை. மனிதர்களின் உடல்நலமும் பாதிக்கப்படவில்லை.

மேலும் இயற்கையாக வளர்ந்த பயிர்களிலிருந்து கிடைத்த உணவுப் பொருள்கள் ஆரோக்கியத்துக்கு உகந்தனவாகக் காணப்பட்டன. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிக் காணப்படுகின்றது.

மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் காற்று மாசு நிறைந்து காணப்படுகின்றது. இதனைச் சுவாசிப்பவர்கள் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் நீர் கூட அருந்துவதற்குத் தேவையான தகுதிகளை இழந்துள்ளது.

மேலும் மரங்கள் வகை தொகையின்றி அழிக்கப்பட்டுவருவதால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளை இன்றைய மனிதர்கள் உணர்ந்து கொள்வதில்லை. குறிப்பாக போருக்குப் பின்னர் எமது பகுதியில் காணப்படும் காட்டு வளங்கள் முற்றாக அழியும் அவல நிலையொன்று காணப்படுகின்றது. இதனால் வறண்ட நிலையில் உள்ள எமது பிரதேசம் காலப்போக்கில் மழையைக் காணாது பாலைவனமாக மாறிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ★

# அறிவுக் கண்ணைத் திறக்க வைத்த

## நாரந்தனை றோ.க. மகா வித்தியாலயம்

லக்ஸ்மன்




ஊர்காவற்றுறை நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் தேவாலயத்துக்குச் சமீபமாக அமைந்துள்ள இந்தப் பாடசாலை 1873 ஆம் ஆண்டு 60 பிள்ளைகளுடன் இயங்கியது என றோமன் கத்தோலிக்க யாழ். ஆயர் இல்லத்தில் உள்ள அறிக்கையில் காணப்படினும் உண்மையில் 1872 ஆம் ஆண்டிலேயே இது ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்ற தகவல்களும் இல்லாமல் இல்லை. முதலில் 60 பிள்ளைகளுடன் ஆரம்பமான இந்தப் பாடசாலை 1876 இல் பதினொரு சைவ சமயப் பிள்ளைகளுடன் 87 மாணவர்களைக் கொண்டதாக விளங்கியது.

1910 ஆம் ஆண்டில் இந்தப் பாடசாலை கலவன் வித்தியாலயமாக பிரிக்கப்பட்டு பெண்கள் வித்தியாலயம் திருக்குடும்ப கன்னியாஸ்திரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு ஆலயத்தின் அண்மையில் உள்ள ஒரு வீட்டில் இயங்கியது. தற்போது ஆலயத்தின் வலப்புறமாக அமைந்துள்ள பெண்கள் வித்தியாலயமும் கன்னியர் மடமும் 1914 இல் கட்டப்பட்டதாகும். திறப்பு விழாவின் போது பணச் சடங்கு இடம்பெற்றதாகவும் கதை உண்டு. பழைய வித்தியாலயமான ஆண்கள் வித்தியாலயம் இட நெருக்கடி காரணமாக ஆலயத்தின் இடதுபுறம் அமைந்துள்ள தற்போதைய இடத்தில் 1917 இல் கட்டப்பட்டது. பெண்கள் வித்தியாலய அதிபராக அருட்சகோதரி பியாற்றிஸ், ஆண்கள் வித்தியாலய அதிபராக யோட் பிள்ளை ஆகியோர் இருந்தனர்.

1945 இல் ஆண்கள் வித்தியாலயத்தின் சிரேஷ்ட நிலை தளர்வடையத் தொடங்கியது. பின்னர் அது தரம் ஐந்து வரையான ஆரம்பப் பாடசாலையாக மாறியது.

1968 ஆம் ஆண்டு வரை இருந்த இந்த நிலை 1969 இல் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் ஆறாம் தரம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்தின் பின் அதுவும் நின்றுவிட அதிபராக இருந்த சிங்கராயரின் முயற்சியினால் 1970 இல் ஆறாம் தரமும், 1971 இல் ஏழாந் [illegible] 1972 இல் எட்டாம் தரமும் தொடங்கப்பட்டு ஒரு கனிஷ்ட வித்தியாலயத்தின் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது.

பிள்ளைகளின் கல்வித் தரத்தைக் கருத்தில் கொண்ட பெற்றோர்கள் ஒருங்கிணைந்து 1971 இல் நாரந்தனை பெற்றோர் சங்கம் ஒன்றை ஆரம்பித்து தற்போதுள்ள ஆண்கள், பெண்கள் பாடசாலை இரண்டையும் ஒன்றிணைத்து ஒரு மகா வித்தியாலயமாக மாற்றியமைத்துத் தரும்படி வடமாகாணக் கல்வி அதிபர் ,கல்வி அமைச்சர் ஆகியோருக் [illegible] தலைவராக ஆயுள்வேத வைத்தியர் நிக்கிலஸ் ஜேம்ஸ் இருந்தார். 1972 இல் ஏற்பட்ட கல்வி முறை மாற்றத்தை அடுத்து ஆண்கள் வித்தியாலயம் என்ற பெயர் மாற்றப்பட்டு பெண்கள் வித்தியாலயத்தில் ஆண்டு ஆறுக்கு மேல் படித்துக்கொண்டிருந்த மாணவிகளை இங்கு சேர்த்து ஆண்டு ஒன்பது வரை கற்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்தி நாரந்தனை றோ.க.கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. இடப்பெயர்வுக்கு முன்னர் இந்தப் பாடசாலை அதிக மாணவர்களுடன் இயங்கி வந்தது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் மிகக் கூடுதலாக 800 மாணவர்களுடனும் அதிபர் உட்பட 26 ஆசிரியர்களுடன் இயங்கிய முதல் தரப் பாடசாலையாக இருந்தது நாரந்தனை றோ.க.வித்தியாலயம் என்ற பெரும் எண்ணமும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களிடம் உள்ளது. 1975 ஆம் ஆண்டிலேயே கல்வியுடன் உடற்பயிற்சிப் போட்டிகளிலும், வட்டார, மாவட்டக் கண்காட்சிகளிலும் பரிசில்களையும் , சான்றிதழ்களையும் தட்டிக்கொண்டு முன்னணியில் இருந்துள்ளதாக சொல்லப்படுகின்றது.

தற்போதைய அதிபர் செல்வி வாசுகி செல்வாபரணம் 2006 இல் நிறைவேற்று அதிபராக நியமனம் பெற்று பின்னர் நிரந்தர அதிபராக பொறுப்பேற்றுள்ளார்.

இடப்பெயர்வின் போது யாழ். மத்திய கல்லூரியிலும், சென்.ஜோன்ஸ் அக்கடமியிலும் இயங்கி சில காலம் மூடப்பட்டு பின் ஊர்காவற்றுறை கொத்தணியுடன் சேர்க்கப்பட்டு இயங்கியதாகவும் தெரிகின்றது. சென்.ஜோன்ஸ் அக்கடமியில் ஒரு முழு நேரப் பாடசாலையாக இயங்கியது. அப்போது அருட் சகோதரர் அருளப்பா பொறுப்பில் இருந்துள்ளார். ஒரு கட்டமைப்பாக மாணவர்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஆண்கள் புனித அந்தோனியார் கல்லூரியுடனும்,பெண்கள்கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் கல்லூரியுடனும் இணைக்கப்பட்டனர்.

மீண்டும் மக்கள் தமது சொந்தக் கிராமத்தில் மீள் குடியமர்ந்தபோது நாரந்தனை கணேச வித்தியாலயம் இயங்கிய காரணத்தால் இந்தப் பாடசாலை மாணவர்கள் அங்கு சென்று தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். 1945 இல் தீவகப் பாடசாலைகள் திறக்கப்பட்டபோதும் 1997 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் அப்போதைய கல்விப் பணிப்பாளராக இருந்த சு.இரத்தினராசாவின் பணிப்புரைக்கமைய 110 மாணவர்களுடனும், 3 ஆசிரியர்களுடனும் இந்தப் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டபோதும் ஆரம்பத்தில் அடிப்படை வசதிகள் குறைவாக இருந்தன. ஆனாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை இருந்துள்ளது. தற்போது தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. அதிபருடன் 16 ஆசிரியர்களும் 24 மாணவர்களும் உள்ளனர். மாணவர்களின் கல்விக்காகவும் , உடற் பயிற்சிகளுக்காகவும் அதிபரும் ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றனர். ஆசிரியர்கள் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தபோது மாலை நேரங்களில் மேலதிக வகுப்புகளை நடத்திய பின்னரே தமது இடங்களுக்குத் திரும்புகிறார்கள். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## முகாமைத்துவ உதவியாளராக சிற்றூழியர் 823 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஜூன் 19
இலங்கை மத்திய அரசில் கடமை புரியும் நிரந்தர சிற்றூழியர்களை முகாமைத் துவ உதவியாளர் தரம் III இற்கு தரம் உயர்த்துவதற்காக கடந்த டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் நாடு முழுவதும் 823 பேர் சித்தி யடைந்துள்ளனர் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.
சித்தியடைந்தவர்களின் பெயர் விவரங்களைப் பார்வையிட விரும்புவோர் உதயன் பணிமனையில் பார்வையிடலாம். (ந-288)



யாழ். நயினாதீவில் நிறுவப்பட்டுள்ள ஆயுள்வேத வைத்திய நிலையம் மற்றும் போஷாக்கு மையத்தை தேசிய வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க கடந்த 11 ஆம் திகதி மக்கள் பாவனைக்குத் திறந்து வைத்தார். நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்படைத்தளபதி மற்றும் நயினாதீவு ரஜமஹா விகாராதிபதி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## சமய சந்நிதிகளில்

தென்புலோலி, குரும்பைகட்டி சாமுண்டிகா தேவி சமேத ஞான வைரவர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளன.
அலங்கார உற்சவ தினங்களில் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு வளந்து கட்டல் பூசை இடம்பெற்று மறுநாள் 22 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பொங்கல் உற்சவம் இடம் பெறும். (ந-8)

★ ★ ★

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய கைலாய வாகனத் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.
திருவிழாவின் விசேட நிகழ்வாக ஈழத்தில் தலை சிறந்த தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் நாத இசைச் சங்கமம் இடம்பெறும். (ந)

★ ★ ★

புத்தூர் ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.48 மணிக்கு ஆரம்பமாகும்.
நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 3 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ந)

★ ★ ★

அல்வாய் கிழக்கு வெள்ளுருவை ஞான வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட பூஜை நடைபெற்று நிறைவுறும். (ந-8)

★ ★ ★

தென்மராட்சி, ஜூன் 19
நாவற்குழி வேலம்பிராய், கண்ணகி அம்மன் ஆலயம், சிவகாமி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.48 மணிக்கு இடம்பெறும். நாளை அடியார்களின் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (ந-9)

# சமூக விழிப்புணர்வு சார்ந்த படைப்புக்களை உருவாக்க வேண்டியது படைப்பாளரின் கடமை

## குறும்பட விழா நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 19
சமூத்தில் காணப்படுகின்ற விடயங்களை வெளிக்கொண்டு வந்து மக்களுக்கு விழிப் பூட்டுகின்ற செயற்பாடுகளை கலைஞர்கள் மேற்கொள்ள வேண்டும். சமூகம் சார் செயற்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற ஊடகமாக குறும்படங்கள் விளங்குகின்றன. எனவே எம்முடைய சமூகம் சார்ந்த சமூக விழிப்புணர்வு சார்ந்த, படைப்புக்களை உருவாக்க வேண்டியது கலைப்படைப்பாளர்களின் கடமையாக விளங்குகின்றது என வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.
வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முதலாவது குறும்படவிழா நல்லூர் பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்றபோது அந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:-
ஒருகாலப்பகுதியில் மக்கள் சினிமாப்படங்களை பின்பற்றி சமூகத்துக்கு தேவையான அம்சங்களைப் பெற்றுக்கொண்டார்கள். சமூக விழிப் பூட்டல் சாதனமாக சினிமாக்கள் காணப்பட்டன. தற்போது சமூகத்தைச் சரியாக வழிப்படுத்தி நல்ல செய்தியை வழங்கு கின்ற தரமான சினிமாப் படைப்புக்களின் வருகை மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் தரமான குறும்படத் தயாரிப்பின் மூலம் சமூகத்தை நல்ல வழியில் வழிப்படுத்துகின்ற படைப்புக்களை உருவாக்க வேண்டும். இதனூடாகவே சமூகவிழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.
கலாசாரப் பண்பாட்டு விடயங்களை ஆவணப்படுத்தும் வகையில் குறும்படத் துறையை ஊக்குவித்து தயாரிப்பாளர்கள் நடிகர்களை ஊக்குவிப்பதன் ஊடாக தரமான குறும் திரைப் படங்களை உருவாக்க முடியும். எதிர்காலத்தில் வடமாகாணத்தில் இதுபோன்ற சிறப்பான நிகழ்ச்சிகளை தரமான முறையில் செய்யவுள்ளோம். இதற்காக கலாசார உத்தியோகத்தர்கள் உழைக்க வேண்டும்- என்றார். (ஓ)

## புத்தாக்கப் போட்டி

வடமராட்சி, ஜூன் 19
வடமராட்சி வலயமட்ட புத்தாக்கப்போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு புலோலி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் குறைந்தது 10 புத்தாக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
வலயமட்டத் தெரிவில் இடம் பெறும் முதல் 20 புத்தாக்கங்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-ரி)

## புதிய நியமனம்

வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு-II 'அ' இல் கடமைபுரிந்து வந்த பாலிப்போடி கிருபநாயகம் வகுப்பு-I இற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ந)

## 'உயிர்த்தெழும் வலிகள்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை இறுதியாண்டு மாணவன் ஜே.எஸ்.ராஜ் எழுதிய ''உயிர்தெழும் வலிகள்'' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பல்கலைக்கழக பொருளியற்துறை மண்டபத்தில் என்.கஜிதரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும் கலந்துகொள்வர். (ஓ-ரி)

## நீராவியடி விநாயகர் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ். நீராவியடி, ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சுபவேளையான பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.
வெள்ளோட்ட விழாவைத் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.
இதேவேளை, இரதோற்சவம் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். (ஓ)

## பரிசில் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ். உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலய பரிசில்தினம் நாளை வியாழக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
வித்தியாலய முதல்வர் கு.திலீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் சி.உதயகுமாரும், யாழ்.கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதனும் கலந்து கொள்வர். (ந-4)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டி முடிவுகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவை யொட்டி யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய பேச்சு, கட்டுரை, கவிதைப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. புதன்கிழமை புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற நூற்றாண்டு விழாச் சபைக் கூட்டத்தில் போட்டி முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளியிப்பட்டன. இந்தப் போட்டி களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள், பரிசில்கள், சான்றுப் பத்திரங்கள் என்பன எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆய்வரங்கத் தொடக்க நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.
இந்தப் போட்டியில் மாவட்ட ரீதியாக வெற்றி பெற்ற மாணவர் விவரம் வருமாறு:-

**முல்லைத்தீவு மாவட்டம்**

**பேச்சு-கீழ்ப் பிரிவு**
1 ஆம் இடம்- நெ.நிசானாமேரி (புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை), 2 ஆம் இடம்-அ.ஆஷா (அளம்பில் றோ. க.வித்தியாலயம்), 3 ஆம் இடம்- எ.தேனுஜா-(முல்லைத்தீவு றோ. க.தமிழ்க் கலவன் பாடசாலை)

**மத்திய பிரிவு**
1ஆம் இடம்- பா.சஞ்சிகா (செம்மலை ம.வி.), 2ஆம் இடம்- தே. ஜோனி (அளம்பில் றோ.க. வித்தியாலயம்), 3ஆம் இடம்- மோ.கம்சிகா-(வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை)

**மேற்பிரிவு**
1ஆம் இடம்- ர.அர்ச்சகா (வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை), 2ஆம் இடம்- வி.டினுசாந் (கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை), 3ஆம் இடம்- அ.திலக் சனா- (செம்மலை ம.வி.)

**அதிமேற் பிரிவு**
1ஆம் இடம்- ச.வர்ணி (வித்தியானந்தக் கல் லூரி, முள்ளியவளை), 2ஆம் இடம்-ப. துவாரகா (செம்மலை ம.வி.), 3ஆம் இடம்- அ.குமுதினி-(அளம்பில் றோ.க.வித்தியாலயம்)

**கட்டுரை- மத்திய பிரிவு**
1ஆம் இடம்- யு.தர்சிகா (வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை), 2ஆம் இடம்- க.லோஜினா (முல்லைத்தீவு றோ.க. த.க.பாட சாலை), 3ஆம் இடம்- ர.கவிப்பிரியா - (கலை மகள் வித்தியாலயம், முள்ளியவளை)

**மேற்பிரிவு**
1 ஆம் இடம்-கே.இலக்கியா (முல்லைத்தீவு ம.வி.), 2ஆம் இடம்- [illegible] (அளம்பில் றோ.க.வித்தியாலயம்), 3ஆம் இடம்- சி.தனுஜா- (உடையார் கட்டு ம.வி.)

**அதிமேற் பிரிவு**
1ஆம் இடம்-ம.கீர்த்தனா (வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை), 2ஆம் இடம்- அ. கஜன் (மல்லாவி மத்திய கல்லூரி), 3ஆம் இடம்- ச.மேரி ஜனுசியா- (முல்லைத் தீவு ம.வி)

**கவிதை- மேற்பிரிவு**
1ஆம் இடம்-ச.கனிஸ்ரனா (முல்லைத்தீவு ம.வி.), 2ஆம் இடம்-வ.ஸ்ரீன்பானு (வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை), 3ஆம் இடம்- இ.லினிஷா- (கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை)

**அதிமேற்பிரிவு**
1ஆம் இடம்-ஸ்ரீ.விதுர்சனா (வித்தியானந்தக் கல் லூரி, முள்ளியவளை), 2ஆம் இடம் -ச.லிங்கேஸ்கரன் (செம்மலை ம.வி.), 3ஆம் இடம்- செ.தர்சினி- (முல்லைத்தீவு ம.வி.) (ந)

*(தொடரும்)*



வலி.கிழக்கு பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்- சாந்தினி தம்பதியர் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஓ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியாவில் இருந்து தூர இடங்களுக்கு

# போக்குவரத்து நெருக்கடி தீரவில்லை எனக் கவலை

வவுனியா, ஜூன் 19

வவுனியா நகரில் இருந்து தூர இடங்களுக்கான பஸ் சேவை சீராக இல்லை. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



குறிப்பாக பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், அரச ஊழியர்கள் மற்றும் நகருக்கு தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வருவோர் தாம் வீடு திரும்புவதற்காக மணிக் கணக்கில் காவல் நிற்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தனியார் மற்றும் இ.போ.ச. பஸ்கள் சீரான நேர இடைவெளியில் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மன்னார், செட்டிகுளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ்கள் நேர ஒழுங்கின்றி சேவையில் ஈடுபடுவதால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது தேவைகளை முடித்துவிட்டு பஸ் நிலையத்துக்கு வந்து மணிக்கணக்காகக் காத்திருக்க வேண்டும் என்றும் 'பஸ் எத்தனை மணிக்கு' என்று நேரக்கணிப்பாளரைக் கேட்டால் இப்போது வந்துவிடும் என்று கூறுவதாகவும், ஆனால் பஸ் தாமதமாகவே வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து நெருக்கடி நீண்ட காலமாக உள்ளபோதும் இது விடயத்தில் எவரும் அக்கறை கொள்ளவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குறிப்பாக வவுனியாவில் இருந்து வெளி இடங்களுக்கு பஸ்கள் புறப்படும் நேர ஒழுங்கு குறித்த நேர இடைவெளியில் அறிவிக்கப்பட்டபடி பஸ் சேவைகள் இடம் பெற வேண்டும் எனவும் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

## சுகாதாரக் குறைபாடுகளுடன் தண்ணீரூற்று பொதுச் சந்தை



முல்லைத்தீவு, ஜூன் 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தண்ணீரூற்று பொதுச் சந்தை சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்படுகின்றது.

மேலும் இந்தச் சந்தைப் பகுதியில் மீன், இறைச்சி, ஆகியவற்றின் கழிவுகளை வீசிவிடுவதால் அந்தப் பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. ஒரு சில இடங்களில் புழுக்களும் காணப்படுவதால் வியாபாரத்தில் ஈடுபடும் ஏனைய வியாபாரிகள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சபையிடம் முறையிட்ட போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வியாபாரிகள் கவலை தெரிவித்ததோடு இதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு சந்தையின் சுகாதாரத்தைப் பேண வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-435)

## விவசாய பாடத்துக்கு ஆசிரியர் இல்லை

அக்கராயன், ஜூன் 19

கிளிநொச்சி, உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் விவசாயப் பாடத்துக்கு ஆசிரியர் இல்லாத காரணத்தால் மாணவர்கள் அந்தப் பாடத்தைக் கற்பதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தப் பாடசாலை விவசாயப் பிரதேசத்தில் உள்ள நிலையில் தரம் 10, 11 வகுப்பு மாணவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயப் பாடத்தையே தெரிவு செய்கின்றனர்.

அது மட்டுமல்லாமல் பாடசாலைக்குச் சொந்தமான வயல் காணியில் பயிர்ச் செய்கையிலும் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் விவசாயப் பாடத்துக்கு ஆசிரியர் இல்லாததால் மாணவர்கள் செயல்முறை விளக்கங்களைப் பெறமுடியாது உள்ளனர்.

எனவே, மாணவர்களது நிலையைக் கருத்தில் கொண்டு விவசாய பாடத்துக்கு ஆசிரியரை நியமித்துத் தருமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)

## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு




வவுனியா, ஜூன் 19

வவுனியா டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

டெங்கு காய்ச்சலால் வவுனியா பகுதிகளில் அதிக எண்ணிக்கையானோர் அண்மைக் காலங்களில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடையிடையே பெய்த மழையும் நீர்த்தேக்கங்களும் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான காரணங்களாக உள்ளன.

இது இவ்வாறிருக்க டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கான விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் முக்கிய சந்திகளில் நிரந்தரமாக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் வாரம் ஒருநாள் டெங்கு ஒழிப்பு சிரமதான பணிகள் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு இடையூறாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் எச்சரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-402)

## காற்றில் மறைந்து போனது சிறுபோக செய்கை வாக்குறுதி

அக்கராயன், ஜூன் 19

துணுக்காய் கல்விளான் கிராமத்தில் வயல் நிலமற்ற குடும்பங்களுக்கு சிறுபோக நெற்செய்கைக்கான வசதிகள் வழங்கப்படும் என்ற வாக்குறுதி மீறப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுபோக நெற்செய்கையாளர் கூட்டம் முல்லைத்தீவு அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற போது, காணியற்ற 70 குடும்பங்களுக்கு புதியதொரு இடத்தில் சிறுபோக நெற்செய்கைக்கு மட்டும் வயல் நிலம் வழங்குவதெனவும், இதற்கான நீர்ப்பாசன வசதியை வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம் ஏற்படுத்திக் கொடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் காணியற்ற குடும்பங்கள் தமக்கு வழங்கப்பட்ட வயல் நிலங்களைத் தயார்ப்படுத்திய போதிலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் நீர் வழங்கலுக்கான வசதிகளை செய்து கொடுக்கவில்லை.

இதன் காரணமாக சிறுபோக நெற் செய்கைக்கு எனத் தயார்ப்படுத்தப்பட்ட காணிகள் கைவிடப்பட்டுள்ளன என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-18)

## ஓமந்தை விபத்தில் மாணவி காயம்

ஓமந்தை மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியில் மஞ்சள் கோட்டைக் கடக்க முற்பட்ட மாணவி ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தார். நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஓமந்தை மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் மாணவியான எஸ். சாதுசாளினி (வயது-10) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த வரை ஓமந்தைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (த-400-402)

# சிகிச்சைக்குச் சென்ற மனைவியை திட்டியபடி தாக்கினார் வைத்தியர்

### கிளிநொச்சி பொலிஸில் கணவன் முறைப்பாடு

கிளிநொச்சி, ஜூன் 19

சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு சென்றபோது தனது மனைவியை கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் கண்டபடி திட்டித் தாக்கினார் என பாதிக் கப்பட்ட பெண்ணின் கணவர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

முல்லைத்தீவு மூங்கிலாறுப் பகுதியைச் சேர்ந்த கோபால கிருஷ்ணன் புஸ்பராணி (வயது-31) என்பவர் காதில் ஏற்பட்ட நோயைக் குணப்படுத்த வைத்தியசாலைக்கு தனது குழந்தை மற்றும் கணவருடன் சென்றுள்ளார்.

இதன்போது கடமையில் இருந்த வைத்தியர் குறித்த பெண்ணை அவரது கணவர் மற்றும் 8 மாதக் குழந்தையின் முன்னிலையில் தகாதவார்த்தைகளால் திட்டித் தாக்கியுள்ளார்.

இந்த நிலையில் அவர் தொடர்ந்தும் கிளிநொச்சி வைத்தியசாலை விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது; சம்பவம் குறித்து முறைப்பாடு எனக்குக் கிடைத்துள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ஐ-6)

## விடுதி வசதிப் பற்றாக்குறை; அவலப்படும் ஆசிரியர்கள்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் விடுதி வசதிகள் பற்றாக்குறையாக உள்ளதால் பிற இடங்களிலிருந்து வருகை தரும் ஆசிரியர்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் பத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பிற இடங்களில் வருகை தந்து கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகள் பற்றாக்குறையாக உள்ளதால் இவர்கள் தங்கி நிற்பதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கான விடுதி வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பாடசாலை நிர்வாகத்தினர் கல்வி அதிகாரிகளிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இதேவேளை, இந்தப் பாடசாலையின் புலம்பெயர் பழைய மாணவர்கள் சிலரின் நிதி உதவியுடன் பாடசாலைக்கான முகப்புடன் கூடிய மதில்களை அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# உலக சுற்றாடல் வாரத்தையொட்டி முருங்கன் வைத்தியசாலையில் நிகழ்வுகள்

மன்னார், ஜூன் 19

உலக சுற்றாடல் வாரத்தையொட்டி சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நாடு பூராகவும் கடந்த 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை சுற்றாடல் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைய முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ. ஒஸ்மன் சாள்ஸ் மற்றும் வைத்திய அதிகாரிகளின் வழிகாட்டுதலின் கீழ் முருங்கன் வைத்தியசாலையில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களினால் உலக சுற்றாடல் வார நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முதல் நாள் நிகழ்வாக முருங்கன் வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் மருத்துவர்களால் உலக சுற்றாடல் தினம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் நாள் நிகழ்வாக முருங்கன் வைத்தியசாலையின் சுற்றுப்புறச்சூழலில் நீர் தேங்கிக் கிடக்கும், டெங்கு நுளம்பு பரவும் இடங்களை நிரப்புதல், தற்காலிக வடிகால் அமைத்தல் ஆகிய பணிகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும், அயல் கிராமங்களில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் இணைந்து மேற்கொண்டனர்.

மூன்றாம் நாள் நிகழ்வாக வைத்தியசாலை வளாகத்தினுள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட சிறுவர் பூங்கா வைத்தியசாலை அபிவிருத்திச் சபை மற்றும் பொது மக்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டது.

நான்காம் நாள் நிகழ்வாக உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாவட்ட வைத்திய அதிகாரியினால் சூழல், சுகாதாரம் தொடர்பான கருத்துக்கள் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த மக்களுக்கு வழங்கப்பட்டன.

ஐந்தாம் நாள் நிகழ்வாக முருங்கன் வைத்தியசாலையின் வளாகத்தினுள் பயன் தரும் மற்றும் அழகுதரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

ஆறாம் நாள் நிகழ்வாக வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு தயாரித்தல், உணவு வீண்விரயம் தொடர்பான கருத்துக்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

இறுதி நாள் நிகழ்வாக முருங்கன் வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் வைத்தியசாலை வளாகம், துப்புரவு செய்யப்பட்டதாக முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரியான மருத்துவர் ஏ. ஒஸ்மன் சாள்ஸ் மேலும் தெரிவித்தார். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19/06/2013

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபர்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனர்:** கடன்பிரச்சினைகளுக் குத் தீர்வு காண்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கடகர்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**சிங்கர்:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**கன்னி:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் பொறாமை அதிகரிக்கும்.

**நாளை**

*ஆனி-06 வியாழக்கிழமை 20.06.2013*
*திதி: துவாதசி பி.இ. 12.37 வரை*
*நட்சத்திரம்: சுவாதி காலை. 08.34 வரை*
*சுபநேரம்: 07.24 - 08.54 வரை*
*இராகுகாலம்: 01.24 - 02.54 வரை*

**துலாமர்:** தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**விருச்சிகர்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**தனுசு:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**மகரர்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**கும்பர்:** பொறுமையை இழப்பீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**மீனர்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | 5 | | | 3 | 6 |
| | | 1 | | | | | 8 | 7 |
| | 6 | | | 4 | 9 | 5 | | |
| 7 | | | 5 | | 2 | 8 | 6 | 9 |
| 6 | | | | | | | | 5 |
| 2 | 3 | 5 | 6 | | 8 | | | 4 |
| | | 6 | 4 | 7 | | | 5 | |
| 5 | 4 | | | | | 7 | | |
| 1 | 7 | | | | | | | 8 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 7 | 6 | 2 | 9 | 1 | 8 | 3 |
| 2 | 3 | 9 | 4 | 1 | 8 | 6 | 7 | 5 |
| 8 | 6 | 1 | 5 | 3 | 7 | 7 | 2 | 9 |
| 4 | 9 | 6 | 2 | 8 | 3 | 5 | 1 | 7 |
| 1 | 8 | 2 | 9 | 7 | 5 | 3 | 6 | 4 |
| 6 | 5 | 5 | 1 | 6 | 4 | 9 | 2 | 8 |
| 6 | 5 | 3 | 7 | 4 | 2 | 8 | 9 | 1 |
| 7 | 1 | 8 | 3 | 9 | 6 | 4 | 5 | 2 |
| 9 | 2 | 4 | 8 | 5 | 1 | 7 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

23ஆவது தியாகிகள் தினம்
19 ஜூன் 2013

அரசியல் உரிமைகள்
ஐக்கியம், ஜனநாயகம்
சமூக சமத்துவத்திற்கு உயிரூட்ட
உயிர் கொடுத்தவர்களுக்கு
எம் இதய அஞ்சலிகள்



தியாகிகள் தின அஞ்சலி நிகழ்வுகள்
இன்று (19.06.2013) புதன்கிழமை
இல.294, கண்டி வீதி, புங்கங்குளம் சந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்சி அலுவலகத்தில் இடம்பெறும்.
உயிர் நீத்த தோழர்களின் பெற்றோர்கள், குடும்பத்தவர்கள், தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். (38453)(3.5.6.7)

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ திருத்தத்தை மாற்ற வேண்டாம்

## வலியுறுத்துகிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.

மக்கள் இன்று கல்வியில் முன்னேற்றமடைந்து வருகின்றார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணமாக இருப்பது 13ஆவது திருத்தச் சட்ட வரைவின் ஊடாக வழங்கப்பட்டுள்ள மாகாணக் கல்வி அமைச்சு முறைமையே. எனவே, இந்த சட்ட வரைவை இல்லாமல் செய்தால் எமது கல்வி வளர்ச்சி கேள்விக்குறியாக மாறிவிடும். இதனை மாற்றியமைப்பதற்கு எந்தக் காரணம் கொண்டும் முயற்சிகளை மேற் கொள்ளக்கூடாது.

- இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக சமூகம் 30 வருடங்கள் கல்வியில் பின் தங்கியே உள்ளது. அதற்குக் காரணம், 1978 ஆம் ஆண்டின் பின்னரே எமக்கு முறை யாகக் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன் பின்னர் இலவசக் கல்வியின் நன்மைகளை நாம் பெற்றுக்கொண்டோம்.

எமது பிள்ளைகளுக்குச் சரியான கல்வி வசதி இல்லாததன் காரணமாகவே அவர்கள் வேலைக்குச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. ஆனால், இன்று படிப்படியாக அந்த நிலை மாறியுள்ளது. அதற்குக் காரணம் கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே.

இன்று மலையகத்தில் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் மாணவர்களின் விகிதாசாரம் குறைவாகவே காணப்படுகின்றது. அதனை அதிகரிக்க வேண்டும். எமது சமூகத்தின் முன்னேற்றம் கல்வியில்தான் தங்கியுள்ளது.-என்றார். (ச)




### தவறிவிட்டது

தர்மகுலசிங்கம் - பிரசன்னா என்பவரது தொழில் உறுதிப்படுத்தல் அட்டை 820502248V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்களுடன் பேர்ஸ் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். 0727521022

### வீடு விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையில் அமைந்துள்ள 2½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0750488726

(38460)

### பஸ் விற்பனைக்கு

GA xxxx தொடர் இலக்கத்தை கொண்ட கொழும்பு றைடர் பஸ் (40 தனித்தனி இருக்கை) உடன் விற்பனைக்கு உண்டு.
0777726874, 0777209686

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று சமையல் வேலை செய்யக் கூடிய30-40 வயதுக்குட்பட்ட பெண் தேவை.
சம்பளம்12,000-15,000 ரூபா
தொடர்பு: 077 906 3025

(38457)(3.6.7.11)

### கார் விற்பனைக்கு

மெல்லிய பச்சை Toyota Carina 18-xxxx கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 271 9997

(38452)(3.6.7.11)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2012**

1. வணிக முதற் தேர்வு - 2011 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக முதற் தேர்வு - 2011 (பழைய பாடத்திட்டம்)
3. வணிக இரண்டாம் தேர்வு - 2011 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக மாணி - பகுதி -I- 2011 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக மூன்றாம் தேர்வு - 2011 (புதிய பாடத்திட்டம்)
6. வணிக மாணி - பகுதி - II - 2011 (பழைய பாடத்திட்டம்)
7. வணிக மாணி - பகுதி - III - 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 17.07.2013 (புதன்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. வணிக முதற் தேர்வு - 2011 (புதிய பாடத்திட்டம்) | 17.07.2013 - 27.07.2013 | 1.00 - 4.00 |
| 2. வணிக முதற் தேர்வு - 2011 (பழைய பாடத்திட்டம்) | 17.07.2013 - 27.07.2013 | 1.00 - 4.00 |
| 3. வணிக இரண்டாம் தேர்வு - 2011 (புதிய பாடத்திட்டம்) | 29.07.2013 - 05.08.2013 | 9.00 - 12.00 |
| 4. வணிக மாணி - பகுதி -I- 2011 (பழைய பாடத்திட்டம்) | 29.07.2013 - 05.08.2013 | 9.00 - 12.00 |
| 5. வணிக மூன்றாம் தேர்வு - 2011 (புதிய பாடத்திட்டம்) | 06.08.2013 - 14.08.2013 | 9.00 - 12.00 |
| 6. வணிக மாணி - பகுதி - II - 2011 (பழைய பாடத்திட்டம்) | 06.08.2013 - 14.08.2013 | 9.00 - 12.00 |
| 7. வணிக மாணி - பகுதி - III - 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்) | 15.08.2013 - 23.08.2013 | 9.00 - 12.00 |

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.07.2013 (புதன்கிழமை) தொடக்கமும், பழைய பாடத் திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 12.07.2013 (வெள்ளிக்கிழமை) தொடக்கமும், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.**

(C9906)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YAL'S TOWN INN

## நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

E.S.P. **நாகரத்தினம்** அவர்களுக்கு

எமது நிறுவனமான YAL'S TOWN INN விடுதியின் (12.06.2013 புதன்கிழமை நடைபெற்ற) திறப்பு விழாவிற்கு வருகை தந்து தொடர்ந்து எமது தொழில் ஸ்தாபனத்தை வாழ்த்தி ஆரம்பித்து வைத்ததற்கும் மற்றும் பல வழிகளில் செய்த, செய்துகொண்டிருக்கும் உதவிகளுக்கும் எமது நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**YAL'S TOWN INN**
**நிர்வாகத்தினர்**
**57/48, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
yalstowninn@gmail.com
021 221 7000

(38398)(3.5.6.7)


# ஈழத்தமிழ்ப் பற்றாளன் என்பதை சாவுக்குப் பின்னும் நிலைநிறுத்தியவர்

**மணிவண்ணனின் இரங்கல் செய்தியில் பாஸ்கரா**

ஈழத்தமிழ் பற்றாளனாக வாழ்ந்த நடிகரும் இயக்குநருமான மணிவண்ணன் தனது சாவுக்குப் பின் தனது உடலை ஈழத் தமிழ் பற்றாளன் சீமானிடம் கொடுக்கும்படி கூறி சாவுக்குப் பின்னும் ஈழத்தமிழ் பற்றாளன் எனக் காட்டிய மாமனிதர் எனத் தனது இரங்கல் செய்தியில் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்தார்.

அவர் தனது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழ் பற்றாளன் மணிவண்ணனின் இழப்பு ஈழத் தமிழருக்கு இன்றைய கால கட்டத்தில் பேரிழப்பாகும்.

அவர் நடிகராகவும் இயக்குநராகவும் இருந்ததுடன் நடிப்பில் நகைச்சுவையான பாத்திரங்களை எடுத்து நடித்தாலும் தனது கொள்கையில் இதய சுத்தியுடனான தமிழ்ப்பற்று உள்ளது என்பதையும் தாம் ஈழத்தமிழ் ஆதரவாளன் என்பதையும் நிரூபித்துக் காட்டியவர்.

ஈழத்தமிழரின் விடிவுக்காக போராடியவர் . பல ஈழத்தமிழர் போராட்டங்களில் பங்குபற்றி காத்திரமான கருத்துரைத்தவர். உதவி செய்வதில் முன்னின்று செயற்பட்டவர் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## நிர்வாகிகள் பதவியேற்பு

வடமராட்சி, ஜூன் 19

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 19 ஆவது புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு நிகழ்வு சனிக்கிழமை கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் லயன் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் புதிய நிர்வாகிகள் முன்னாள் பிராந்திய ஆளுநர் லயன் எஸ். இராகுலன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

கழகத்தின் புதிய தலைவராக லயன் வி.எஸ். தங்கராசாவும், உபதலைவர்களாக லயன் எஸ்.சிவயோகன், லயன் கே. சேதுராஜா, லயன் ஏ.செந்தில்லிங்கம் ஆகியோரும், செயலாளராக லயன் எஸ். முரளிதரனும், பொருளாளராக லயன் கே.மகிந்தனும் பதவி ஏற்றனர்.

நடப்பு ஆண்டில் வல்லை வெளி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் பனை மரங்கள், சவுக்கு மரங்கள் நடுகைகளை மேற்கொள்வதுடன், விழி வெண்படல (கற்றாக்) சிகிச்சை தேவையானோருக்கு சிகிச்சை அளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.(ந-8)


## கடை இட மாற்றம்
### நிருத் பட மாடம்

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு அருகில் இயங்கி வந்த நிருத் படமாடம் இன்று (19.06.2013) தொடக்கம் சாவகச்சேரி டச் வீதி, இல.33A இல் இயங்குமென வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

உரிமையாளர்.

(C/2702)(3.6.11)

## பதவிவெற்றிடம்

ஏழாலையில் உள்ள கணினிக் கல்வி நிலையத்திற்கு **அலுவலக உதவியாளர்கள்** தேவை. 5km பிரதேசத்திற்கு உட்பட்ட பெண்கள் மட்டும். தகைமை A/L, Ms Office.

ஏழாலையிலுள்ள நிறுவனத்திற்கு **விற்பனை பிரதிநிதி** தேவை. ஆண்கள் மட்டும். கணினி தொடர்பான சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. மோட்டார் சைக்கிள் இருத்தல் அவசியம். தகைமை A/L மேலதிக விவரங்கள் நேரில்.

தொடர்பு: 077 239 5823

(38399)(3.6.7.11)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## கட்டட நிர்மாண/வீதி வேலைகளுக்கான ஒப்பந்தகாரர்களை பதிவுசெய்தல் 2013

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் 2013 ஆம் ஆண்டுக்கான கட்டட நிர்மாண/வீதி வேலைகளை மேற்கொள்வதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் எமது அலுவலகத்தில் ரூபா 2500.00(VAT,NBT நீங்கலாக) ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 28.06.2013 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(C/2703)(3.6.7.11)

## சுப்பர் மார்க்கட்டிற்கான இடம் குத்தகைக்கு

**இயங்கிக் கொண்டிருந்த 990 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட சுப்பர் மார்க்கட் ஒன்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தருவதற்கு விரும்புகிறோம். 3 மாடி கொண்ட ஒரு Shopping Complex கட்டடத்தின் நில மட்டத்தில் (Ground Floor) பலாலி வீதியில் கந்தர்மடத்தில் அமைந்துள்ளது.**

விரும்புவோர் பின்வரும் தொலை எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்: 077 948 4721
வியாபார ஊக்குவிப்பாளர்
ருலின்ஸ், 114/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 5534/ 077 711 1469

(38451)(3.6.7.11)

## "துளிர்கள்"
## தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அறிவித்தல்

### உள ஆற்றுப்படுத்தல் (Counseling)
### சான்றிதழ் கற்கை நெறி

- ★ பிரிவு : II
- ★ கற்கை காலம் : 06 மாதங்கள்
- ★ விரிவுரைகள்: சனி, ஞயிறு, போயாதினம்
- ★ தகைமை: G.C.E O/L மற்றும் சேவை மனப்பான்மை
- ★ கட்டணம்: இலவசம்
- ★ ஆர்வமுள்ள இருபாலாரும் 30.06.2013 இற்கு முன்பாக உங்கள் தொடர் பாடல் இலக்கத்துடன் சுயவிவரங்களை அனுப்பி வைக்கலாம்.
- ★ தன்னைத்தான் அறிந்து கொண்டு பிறரைப் புரிந்து கொள்ளவும், ஆளுமை மிக்கவர்களாய் சவால்களை சந்திக்கவும், இது நல்லதோர் வாய்ப்பு. வயது உங்களுக்கோர் தடையல்ல

இல.30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

பணிப்பாளர்
துளிர்கள் நிறுவனம்

(38400)(3.6.7.11)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

கொடிகாமம், பருத்தித்துறை பிரதான வீதியில் (குடமியன், வரணிப் பகுதியில்)வீட்டுடன் கூடிய 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 670 3221

(35073)(3.6.7.11)

## மணமகள் தேவை

வங்கியில் சிரேஷ்ட உதவியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு டாக்டர், கணக்காளர், பட்டதாரி ஆசிரியை மணமகள் தேவை. மணமகன் திருவோண நட்சத்திரம், 1984 ஆம் ஆண்டு பாவகிரகம் 25, தரிப்புடன் கூடிய மூலம் பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

07, குமாரசாமி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(38425)(15.3.6)

## அனைத்து கொம்ப்யூட்டர் டிப்ளோமா பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 23-06-2013

**CSC-ASIAN**
**COMPUTER EDUCATION**
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677

## தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ்.தம்பதியினரோடு வீட்டில் தங்கியிருந்து 4,6, வயது பெண்குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும், வீட்டுவேலைகளில் உதவி செய்யவும் 20-50 வயதில் பெண் ஒருவர் தேவை. விரும்பின் எம்மோடு வயோதிப காலம் வரை குடும்பத்தில் ஒருவராகப் பார்த்துக் கொள்ளமுடியும்.
(சம்பளம் 12,000இற்குமேல்)
தொ.பே. 077 381 9855, 077 345 6779.

## மொறட்டுவ பல்கலைக்கழக பட்டப்படிப்பு(BIT)

9th Intake

### உலகத்தரம் வாய்ந்த மொறட்டுவ பல்கலைக்கழக பட்டப்படிப்பு

மொறட்டுவ பல்கலைக்கழக பட்டதாரியாகும் அரியவாய்ப்பு...!

**ESOFT** Shaping Lives, Creating Futures.

## இடமிருந்து மட்டுமே...!
## NOW IN JAFFNA



**விசேட அம்சங்கள்**

- நுழைவுத் தேர்வு இல்லை
- 6 செமிஸ்ரர்களைக் கொண்ட பட்டப்படிப்பு
- ஒவ்வொரு வருட இறுதியில் பல்கலைக்கழக சான்றிதழ்
- கற்கைநெறி முடிவில் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து உடனடி வேலை வாய்ப்பு
- பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர்கள்
- உயர்தரமிக்க கல்விச் சூழலில் அமைந்துள்ள ஆய்வக, நூலக வசதிகள்

**தகுதியானவர்கள்**

உயர்தரத்தில் எந்த துறையிலாவது ஒரே தடவையில் சித்திபெற்றோர் மற்றும் சாதாரண தரத்தில் கணித பாடத்தில் "C" தரச் சித்தி பெற்றோர்.

அல்லது

HNDIT - SLIATE

பூர்த்தி செய்த மாணவர்களும் நேரடியாக இறுதியாண்டிற்குள் நுழைய முடியும்.
(16 பாடநெறிகள் விலக்களிக்கப்படும்)

**விண்ணப்ப இறுதி நாள்**
1ம் சுற்று 30. 06. 2013

**விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள ESOFT கிளையை நாடுங்கள்...!**

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினூடாக ஒருங்கிணைந்து (BIT)ற்கான வெளிவாரிப் பட்டத்தினை வழங்குவதில் ESOFT பெருமையடைகிறது.
யாழ்நகரில் ESOFT மட்டுமே இப்பாடத்திட்டத்தினை வழங்குகிறது...!

**ESOFT METRO CAMPUS -JAFFNA**
No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 750 1120
CALL : 077 309 9 308

## வீடுகள், அலுவலகம், காட்சியறை மற்றும் தொழிற்சாலைகள்

**CCTV**
Security Camera Solutions

Catch Them!



All Locations Could be Monitored from one location
Recording & Internet Remote Monitoring

உங்கள் பாதுகாப்பே ....
எங்கள் சேவை..

(பி/9876)

நாம் 16வருட சேவையில். Call :- 0775487146 For Inspection & Estimate

**MICRO PC SYSTEMS**

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | :- 021 2225893 | சாவகச்சேரி | :- 021 2270929 |
| வவுனியா | :- 024 2221969 | கிளிநொச்சி | :- 021 2285593 |
| திருகோணமலை | :- 026 2226977 | கொழும்பு | :- 077 3963285 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பாடசாலைகளையும் உள்ளடக்கி டெங்கு ஒழிப்பு

## தேவையான நிதியை வழங்க தயார் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு,ஜூன் 19

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் உள்ளடக்கும் வகையில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுகாதார அமைச்சின் செயலர் நிஹால் ஜயதிலக்கவுக்கு திங்கட்கிழமை ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு உட்பட பல மாவட்டங்களில் டெங்கு நோய் வேகமாகப் பரவியுள்ளதால் அந்த நோயிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில் சகல பாடசாலைகளையும் உள்ளடக்கி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை விரிவான அடிப்படையில் முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நாட்டில் தற்போது 9773 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் சுமார் 40 லட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பணியில் சுமார் 2 லட்சம் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். இதற்கமைய இலங்கை சனத்தொகையில் 70 வீதமானோர் கல்வித் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஆகவே இந்தத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்கள் ஊடாக வீடுகளில் டெங்கு ஒழிப்புப் பணிகளில் பெற்றோர் ஈடுபட ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளில் அதிபர்களின் முழுப் பொறுப்புடன்தான் டெங்கு ஒழிப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. அந்தப் பொறுப்பை எந்தவொரு ஆசிரியரும் உதாசீனப்படுத்த முடியாது.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு அட்டையொன்றை வழங்கி வாரத்துக்கு ஒரு தடவை தமது வீட்டிலும் வீட்டைச் சூழவுள்ள இடங்களிலும் நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள் தொடர்பாக சோதித்து அவற்றை அப்புறப்படுத்தியதை அவர்களது பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும். இந்த அட்டைகளை வகுப்பாசிரியர் பரிசோதிப்பது அவசியம். டெங்கு நுளம்புகள் சுமார் 500 மீற்றர் தூரம் வரை பறக்கக் கூடியவை.

அதனால் பாடசாலை வளாகத்தில் மாத்திரமல்லாமல் பாடசாலையின் 500 மீற்றர் சுற்று வட்டத்துக்கு டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அப்புறப்படுத்துவது கட்டாயமானது-என்றார். (ச)



பொது நலவாய உச்சி மாநாட்டை முன்னிட்டு www.chogm2013.lk என்ற இணையத்தளத்தை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஊடகத்துறை அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் ஆகியோர் திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சில் ஆரம்பித்து வைத்தனர். அருகில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா, வெளிவிவகார செயலர் கருணாதிலக அமுனுகம ஆகியோர் காணப்படுகின்றனர்.

# புத்தகக் கண்காட்சி 22ஆம் திகதி வரை



கொழும்பு,ஜூன் 19

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் ஏற்பாடு செய்த புத்தகக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை தொடங்கி எதிர்வரும் 22 ஆம் திகதி வரை கல்வி அமைச்சு வளவில் நடைபெற்று வருகிறது.

இந்த புத்தகக் கண்காட்சி கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடு முழுவதிலும் உள்ள 60 இற்கும் மேற்பட்ட புத்தக வெளியீட்டாளர்களின் பாடநூல்கள் அங்கு காட்சிக்காகவும் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியை காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை பார்வையிடலாம் என்று கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் ஹேவா விதாரன தெரிவித்தார். (ச)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயம்

கொழும்பு,ஜூன் 19

அநுராதபுரம் - தலாவ பகுதியில் செவ்வாய்க்கிழமை அதிகாலை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபரொருவர் காயமடைந்துள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கு முயற்சித்தபோது அவர் துப்பாக்கி முனையில் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இதன்போது பொலிஸார் சந்தேகநபரின் காலில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்தார். துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த சந்தேகநபர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று அவர் கூறினார்.

சந்தேகநபரிடமிருந்த துப்பாக்கி போலியானது என்று விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. (ச)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு
17.04.1944

இறப்பு
19.05.2013

திருமதி
**சுகிர்தலோஜினி சர்வேஸ்வரலிங்கம்**

கொடும் நோய் வதைத்த போதும் கடமைகளை கருத்திற் கொண்டு
மறு ஜென்மம் பல கொண்டு சோதனைகளை சாதனையாக்கி
மனவுறுதிக்கு உதாரணமாய் திகழ்ந்த பேரொளியே!
ஆறாத் துயருடன் இந்நாளிலே உங்களை நினைவு கூருகின்றோம்.

**அன்னார் இறந்த செய்தி கேட்டு தொலைபேசியிலும், நேரிலும், துயர் பகிர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.**

துவாரகை, வதிரி,
கரவெட்டி.
(C-9893)(3.5.6)
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
28 * 12 * 1957

இறைவன் அடியில்
01 * 06 * 2012

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும்,
சுன்னாகம், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி
**செல்வராணி பரமசிவம்பிள்ளை**

மாதர்குல மாணிக்கமே அக்கா எம்மைவிட்டு எங்கு சென்றாய்
கனவிலும் எண்ணவில்லை சடுதியாய் மறைந்துவிட்டாய்
புன்முறுவலுடன் பொறுமை தந்து பண்புதனை எமக்களித்தாய்
எப்போ காண்போம் !

*உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

மணற்பிட்டி, காரைநகர்.
தொ.பே.:077 923 3028

சகோதரர்கள்,
மச்சான்மார், மருமக்கள்,
ந. புஸ்பராஜா

(38449)(3.5.6)


# முல்லை மாவட்ட இளைஞர் தின நிகழ்வு

முல்லைத்தீவு,ஜூன்19

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் தின நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரைத்துறைப்பற்று செயலகப் பிரிவில் பாரதி சிறுவர் இல்ல மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி திருமதி கே. சரோஜா தலைமையில் நடைபெறும் இளைஞர் தின நிகழ்வுக்கு மன்றத்தின் வட மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
31 – 07 – 1974

உதிர்வு
20 – 05 – 2013

அமரர்
**மதியாபரணம் மதிவதனன்**
(சாரதி கரைதுறைப்பற்று பிரதேச சபை)

கடந்த 20.05.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் மறைவின் போது நேரடியாகவும், தொலைபேசி மூலம் ஆறுதல் வழங்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19.06.2013) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், நாளை (20.06.2013) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

37/37, இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(38445)(3:5:6)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் தபாலதிபரிடம் கொள்ளையர்கள் கைவரிசை

### வீதியில் வீசப்பட்ட கைப்பைக்குள் இருந்த தபாலகப் பூட்டுக்கள்



யாழ்ப்பாணம்,ஜூன் 19
மானிப்பாய் தபால் அதிபரிடம் கைப்பையைக் கொள்ளையடித்த மோட்டார் சைக்கிள் நபர்கள் அதனுள் இருந்த 5 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கைத்தொலைபேசியை எடுத்துக்கொண்டு தபாலகப் பூட்டுத் திறப்புகள் மற்றும் ஆவணங்களை வீதியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

வேறு வழியின்றி தபாலகத்தின் வெளிக் கதவுகளின் பூட்டுக்களை நேற்றுக் காலை உடைத்து பணியாளர்கள் உள்ளே சென்ற நிலையில் வீதியில் வீசப்பட்ட நிலையில் திறப்புக் கோர்வையும் ஆவணங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று மானிப்பாய் தபாலதிபர் செல்வி மு.நாகமணி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பணி முடிந்து தனது சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோது சைக்கிள் கூடைக்குள் இருந்த கைப்பையை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் எடுத் துச் சென்று விட்டனர். இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதையடுத்து பொலிஸார் தபால் நிலையத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டதோடு விசாரணையை ஆரம்பித்தனர்.

நேற்றுக் காலை தபாலக வெளிக் கதவுகள் உடைக்கப்பட்டு அலுவலகத்துக்கு பணியாளர்கள் சென்று கடமைகளை ஆரம்பித்தனர். எனினும் பிரதான பெட்டகங்களின் கதவுகள் உடைக்கப்படாது சீல் வைத்த பிராந்திய தபால் அதிபர் புஸ்பநாதன் மேல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

திறப்புக்கள், ஆவணங்கள் கொண்ட கைப்பையை இணுவில் பகுதியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர் கொள்ளையர்கள். அவ்வழியே சென்ற சிறுவர்கள் அதனைக் கண்டெடுத்து தமது பெற்றோரிடம் கொண்டு சென்று கொடுத்தனர்.

கைப்பையினுள் இருந்த ஆவணங்களின் அடிப்படையில் அவர்கள் அதனை மானிப்பாய் தபாலகத்துக்கு நேற்றுக் கொடுத்துள்ளனர் என்று தபாலதிபர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4-86)

# மலையகத்தில் மண்சரிவு

### மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



நுவரெலியா,ஜூன் 19
சீரற்ற காலநிலை காரணமாக மத்திய மாகாணத்தின் பல பிரதேசங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் மக்க ளின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டன்சின் நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள பிரதான பாதையின் ஓரத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பூண்டுலோயா, டன்சினன் வழியாக நுவரெலியா செல்லும் பிரதான பாதையின் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.

அதனால், பூண்டுலோயாவிலிருந்து நுவரெலியாவுக்குச் செல்லுகின்ற வாகனங்களைத் தவலந்தென்ன வழியாக நுவரெலியாவுக்குச் செல்லுமாறு போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத் தியுள்ளனர்.

இதேவேளை, ஹற்றன் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள பொலிஸ் விடுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

அதிகளவு நீர் சிறிய வடிகால்கள் வழியாக வடிந்து செல்ல முடியாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

> காலநிலை சீரின்மையால் மலையகத்தில் மண்சரிவு, வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அதனால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவ காரக்குழு வெளியிடும் நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு யாழ். மாநகர சைவ சமய விவ காரக் குழு அறிவித்துள்ளது.

ஆக்கங்கள் நல்லைக் கந்தனின் மகத்துவத்தை விளக்குவதாகவும் சைவசமயம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாகவும் ஆய்வுக் கட்டுரைகளாகவும் இருத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிப்பாசிரியர், இல.21/3ஏ இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப் பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (ந-7)

## ஓரம்போ... பார்த்துப்போ...!



யாழ்.பிரதேச செயலகத்துக்குச் செல்லும் பிரதான நுழைவாயில் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் யாழ். பிரதேச செயலகத்துக்கு வரும் மக்கள் பெரும் கஷ்டங் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த வீதியைத் திருத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கையை எடுப்பார்களா எனக் கேட்கின்றனர் அவர்கள். (ஒ-23)

# கடத்தப்பட்ட இளைஞர் எங்கே?

### பொலிஸார் தொடர்ந்து விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 19
கடத்தப்பட்ட ஆனைக்கோட்டை இளைஞரையோ, கடத்தியவர்களையோ இதுவரை தாம் கண்டறியவில்லை அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த கந்தையா ஜெயசுதன் (வயது-28) என்பவரே நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5.10 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார்.

சங்குவேலிப் பிள்ளையார் கோயிலை அண்மித்து அவர் சென்று கொண்டிருந்த போதே வெள்ளைநிற ஹைஎஸ் வாகனத்தில் சென்றவர்கள் அவரைக் கடத்தியதாக கடத்தப்பட்டவரின் உறவினர்கள் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அவர் கடத்தப்பட்டதற்கான காரணம் என்னவென்று தெரியாது என்று உறவினர்கள் பொலிஸில் தெரிவித்துள்ளனர். (ஒ-4-86)

# சட்டவிரோதமாக மரங்கள் யாழ். மாவட்டத்துக்கு கடத்தல்

### தடுக்கக் கோருகிறார் யோகரட்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்குச் சட்டவிரோதமாக அதிகளவிலான மரங்கள் கடத்தி வரப்படுவதாகவும் அவற்றைத் தடுப்பதற்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் வனபரிபாலனத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலர் கே.யோகரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்கும் சட்டவிரோதமாக மரங்கள் கடத்தப்படுகின்றன.

இதனை விட அதிகமாக வன்னி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அனுமதி பெறாது தறிக்கப்படும் பெருமளவான சட்டவிரோத மரங்கள் யாழ். மாவட்டத்துக்கு கடத்தப்படுகின்றன.

தொடர்ச்சியாக இந்தச் சட்ட விரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் தடுப்பதற்கு போதிய ஆளணி வசதிகள் இல்லை.

> தொடர்ச்சியாக இந்தச் சட்ட விரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் தடுப்பதற்கு போதிய ஆளணி வசதிகள் இல்லை.

எமது அலுவலகத்துக்கான ஆளணி 10 பேர் தற்போது இருக்க வேண்டிய நிலையில் இருவர் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

எனவே இந்த சட்டவிரோத மரக் கடத்தலை முற்றாகத் தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அதன் மூலமே இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும்- என்றார். (வ-5)

# சிறந்த நடத்தையின் வெளிப்பாட்டால்தான் தெரிவாகின்றனர் மாணவத் தலைவர்கள்

### சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் கருத்து

தென்மராட்சி, ஜூன் 19
பாடசாலைகளில் மாணவத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்படுவதென்பது மாணவர்களின் சிறந்த நடத்தை களின் வெளிப்பாடாகக் கரு தலாம்.

மாணவத் தலைவர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்ட மாணவர்களாகிய நீங்கள் நீண்டகாலமாக ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றில் வரலாறு பதித்த இந்தக் கல்லூரியின் பெருமையை மேன்மேலும் உயர்த்தப் பாடுபடவேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்ற மாணவத் தலைவர்கள் பதவியேற்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வ.முகுந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலையின் அதிபர், உப அதிபர் ஆகியோருக்கு அடுத்தபடியாக மாணவர்களிடம் நன்மதிப்பினைப் பெறுபவர்கள் மாணவத் தலைவர்களே. இவர்களது பணி அங்குள்ள ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் அமைய வேண்டும்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றில் நீண்டகால பெருமை மிக்க நிலையில் இருந்து வருகிறது. இந்தப் பெருமையை கல்லூரியின் அதிபர்கள் , மாணவத் தலைவர்கள், மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து காப்பாற்றி வருகின்றனர்.

புதிதாக பதவியேற்றுள்ள மாணவத் தலைவர்கள் அனை வரும் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் அதிபர், பிரதி அதிபர் , ஆசிரியர்கள் ஆகி யோருக்கு இடையே இணைப்புப் பால [illegible] கல்லூரியின் [illegible] மேன்மேலும் உயர்வடையச் செய்ய வேண்டும்.

கல்லூரியில் பயிலும் சுமார் ஆயிரம் மாணவர்களிலிருந்து உங்களை கல்லூரி ஒழுங்காற்றுச் சபையினர் தெரிவுசெய்தமை உங்கள் மீதான நம்பிக்கையினாலேயே ஆகும்.

நீங்கள் மாணவத் தலைவர்களாகப் பதவியேற்க முன்னர் அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள் முன்னிலையில் செய்து கொண்ட சத்தியப் பிரமாணத்தை என்றும் உங்கள் மனதில் இருத்திக் கல்லூரியின் பெருமைக்கும் புக[illegible] மேன்மேலும் பாடுபடு[illegible] நம்புகிறேன்- என்றார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசி சிக்கியதால் மாயமாகினர் மாணவிகள்



யாழ்ப்பாணம், ஜூன் 19
கைத்தொலைபேசியை வகுப்பறையில் வைத்திருந்த மாண விகள் மூவர் பாடசாலை அதிபரிடம் மாட்டிக் கொண்டனர். கைத் தொலைபேசியை பறிமுதல் செய்த அதிபர் குறித்த மாணவிகளது பெற்றோரை அழைத்து வந்து விளக்கம் தருமாறு பணித்தார்.

இதனையடுத்து மூன்று மாணவிகளும் தலைமறைவாகி விட்டனர். இதனால் சந்தேகம் கொண்ட அதிபர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

யாழ்.நகரை அண்டிய மகளிர் பாடசாலை ஒன்றின் மாணவிகளே இவ்வாறு மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாடசாலைக்குச் சென்ற மூன்று மாணவிகளும் கைத்தொலைபேசியுடன் மாட்டிக் கொண்டனர். பாடசாலை ஒழுக்க விதிகளின்படி அதனைப் பறிமுதல் செய்த அதிபர் மூவரும் அவர்களது பெற்றோரை அழைத்து வருமாறு திருப்பி அனுப்பப்பட்டனர். நேரம் தாமதமாகியும் குறித்த மாணவிகள் பெற்றோரை அழைத்து வரவில்லை. இதனால் சந்தேகம் கொண்ட அதிபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது மூன்று மாணவிகளும் வடமராட்சியில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருப்பது தெரிய வந்தது. பொலிஸாரால் அழைத்துவரப்பட்ட மூவரும் நேற்று யாழ்.நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# அரசின் '13' ஒழிப்பை முறியடிக்க கொழும்பில் நாளை முக்கிய முடிவு

## கூடி ஆராய்கிறது '13' ஐ பாதுகாக்கும் இயக்கம்

கொழும்பு, ஜூன் 19
அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்வதற்கு அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில், இவ்விவகாரம் சம்பந்தமாக ஆராய்ந்து தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்காக '13'ஐப் பாதுகாக்கும் இயக்கம் நாளை அவசரமாக கொழும்பில் கூடவுள்ளது.

இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு 13ஐ ஆதரிக்கும் நிலைப்பாட்டைக் கொண்ட அரசின் பங்காளிக்கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், இடதுசாரிக் கட்சிகள், ராஜித தரப்பு ஆகியவற்றுக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என 13ஐப் பாதுகாக்கும் இயக்கம் நேற்றுத் தெரிவித்தது.

அதேவேளை, சிவில் அமைப்புகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் குறித்த கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

13ஐப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள், 19ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அதனைத் தோற்கடிப்பதற்கான வழிமுறை, இவ்விவகாரத்தை சர்வதேசமயப்படுத்தல் உட்படப் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளதுடன் பரஸ்பர கருத்துப்பரிமாற்றங்களும் இடம் பெறவுள்ளன எனத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக்கட்சி, ஐக்கிய சோஷலிஸக் கட்சி, ஐக்கிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் '13'ஐப் பாதுகாக்கும் அமைப்பில் அங்கம்வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடமாகாணத் தேர்தல்அறிவிப்பு திங்களன்று

யினால் அறிவித்தல்வழங்கப்பட்டபின்னரே அதனை நடத்த முடியும்.
அந்த வகையில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 24 ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை தேர்தல்கள் திணைக்களம் முன்னெடுத்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

அன்றைய தினமே மத்திய, வடமேல் மாகாண சபைகளையும் கலைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

செப்ரெம்பர் 7 ஆம் திகதி அல்லது 14 ஆம் திகதி மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடத்தப்படும் என்றும் இதற்குரிய வேட்புமனு விண்ணப்பங்களை அரச அச்சகத்தில் அச்சிடுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (த-5)

## லண்டனில் சிங்கக் கொடி ஏந்திய குண்டர்கள் ஈழத் தமிழர்கள் மீது மோசமான தாக்குதல்

இடம்பெற்றது.
இலங்கையில்இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை உலக நாடுகள் புறக்கணிக்க வேண்டும் என்று கோரி ஆட்டம் இடம் பெற்ற ஓவல் மைதானத்துக்கு வெளியே ஈழ ஆதரவாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியுடன் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த நேரத்தில் இலங்கையின் சிங்கக் கொடியுடன் அந்த இடத்துக்கு வந்தவர்கள் ஈழத் தமிழ் ஆதரவாளர்களைத் திடீரென தாக்கத் தொடங்கினர். இதனால் பல ஈழ ஆதரவாளர்கள் காயமடைந்ததுடன் அவர்களும் திருப்பித் தாக்கினர்.

நிலைமை மோசமானதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பொலிஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். -என்று தெரிவிக்கப்பட்டது. (த-5)

## காணியை மீட்டுத் தாருங்கள்

குழுவுக்குச் சொந்தமான 60 பரப்புக் கொண்ட இந்தக் கெற்பேலிக் காணியில் இராணுவத்தினர் தற்போது நிரந்தர இராணுவ முகாம் அமைத்து வருகின்றனர்.

குறித்த காணியைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தலும், யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு முன்னாள் உத்தியோகத்தர் இ.சிவசுவாமியின் கையொப்பத்துடன் ஒட்டப்பட்டிருந்தது. குறித்த காணியை இராணுவத்தினருக்கு வழங்குவதற்குக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையிலேயே குறித்த காணியில் தாம் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், போர் நடவடிக்கைகள் காரணமாகக் குறித்த காணியைவிட்டு வெளியேறியிருந்ததாகவும் மீண்டும் விவசாய நடவடிக்கைகளை தொடரப் போவதாகவும் மக்கள் பிரதேச செயலரிடம் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணி, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானது என்பதனால் மாவட்டச் செயலகத்தில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுடன் சென்று கலந்துரையாடுமாறு பிரதேச செயலாளர் கூறியுள்ளார். (த-5)

## 13 ஒழிப்புக்கான பிரேரணையை வழிமொழிந்தார் ஐ.தே.க. எம்.பி

பாலித்த ரங்கே பண்டார வழிமொழிந்தார்.
நாடாளுமன்றில் நேற்று ஆரம்பகட்டப் பணிகள் முடிவடைந்ததும் பிரேரணை கொண்டுவருவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரரால் குறித்த பிரேரணை சபையில் முன்மொழியப்பட்டது.

இவ்வேளை, சபையில் ஆளுங்கட்சி அமைச்சர்களும், உறுப்பினர்களும் இருந்தாலும்,
அரசமைப்பைத் திருத்தக்
கோரும் ஹெல உறுமயவின் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டாரவே வழிமொழிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், குறித்த பிரேரணை மீதான விவாதம் பிறிதொரு நாளில் நடைபெறும். அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு கோரும் பிரேரணையை அண்மையில் ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரத்தன தேரர் நாடாளுமன்ற செயலாளரிடம் கையளித்தார் என்பது தெரிந்ததே.

அரசமைப்பின் 21ஆவது திருத்தமாக முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணை வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (த-சி)

Ranjanas
CERAMIC
QUALITY TILES AND SANITARYWARE
யாழ். நகரில் முதன் முறையாக
USA LATICRETE மற்றும் MYK
LATICRETE இணைந்து வழங்கும்
பயிற்சிப் பட்டறை
உயர் தரத்தில் டைல் பதிக்கும் முறைகள் மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் சிமெந்து வகைகள் ஆகியவற்றிற்கான தொழில்முறைரீதியான விளக்கங்கள்.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
எஞ்சினியர்ஸ், சிவில் எஞ்சினியர்ஸ், கட்டட ஒப்பந்த தாரர்கள், டைல் பதிப்போர் கீழ்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
காலம்:-30.06.2013 (ஞாயிறு) இடம்:- கிறீன் கிறாஸ்
நேரம்:-10.00am - 01.30pm Green Grass Hotel
212, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

நளினின் முல்லை. கிளிநொச்சி
மாவட்டங்களுக்கான கணனிச் சேவை
வருகின்ற 19, 20, 21 ம் திகதிகளில் எமது ஒப்பந்தத்தில் உள்ள நிறுவனங்கள், காரியாலயங்களிற்கு விஜயம் செய்யவிருப்பதால் எம்முடன் புதிதாக ஒப்பந்தம் செய்யவிரும்பும் நிறுவனங்கள் காரியாலயங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
கணனி சார்ந்த அனைத்து சேவையும் வழங்கப்படும்
NALIN Infomation Technologies (Pvt).LTD
195/2 Parameswara Junction, TP:0212221121/1166
Palaly Road Thirunelvely. HOTLINE:-0777667974

காணி விற்பனைக்கு
திருநெல்வேலி, பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயில் வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பகுதியாகவும் பிரித்து விற்பனை செய்யலாம்)
(சி/9198)
தொடர்பு: 071 497 7019

கணினி திருத்தம் (Computer Repair)
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித்தருகின்றோம்.
அழையுங்கள்- 0779086737
GUNAA BEST PC
52, HOSPITAL ROAD, JAFFNA.

உடன் விற்பனைக்கு
251-XXXX Dolpin HIACE
மிகவும் நல்ல நிலையிலுள்ளது.
தொடர்பு- 0750467682

உடன் விற்பனைக்கு
Safari (சவாரி) Motor ceycle
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0779122918




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களுக்கான மாகாண மட்ட கரப்பந்துத் தொடர்

# அனைத்துப் பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 19
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட மாகாணமட்ட கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் 15, 17,19 வயது ஆண்கள் பிரிவுகளில் யாழ்.மாவட்ட அணிகள் சம் பியனாகத் தெரிவாகின.
இந்த இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.
முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி களமிறங்கியது.
அதில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில் மூன்றாம் இடத்தை கிளிநொச்சி இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை அணி பெற்றுக்கொண்டது.
அடுத்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய அணி மோதியது.
அதில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வென்று வடமாகாணச் சம்பியனாகத் தெரிவாகி யது.
அதேபிரிவில் மூன்றாம் இடத்தை கிளிநொச்சி இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை அணி பெற்றுக்கொண்டது.
தொடர்ந்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணியும், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணியும் மோதின.
அதில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று வடமாகாணச் சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில், நானாட்டான் மகா வித்தியாலய அணி மூன்றாம் இடத்தைச் தட்டிச் சென்றது.(ற-23-422-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஜூன் 19
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:
பி.ப. 3.30 மணி
செஞ்சுடர் அணி எதிர் சென். நீக்கலஸ் வி.க.
பி.ப. 4.30 மணி
கருணாகரன் வி.க.'பி' எதிர் ஆதிசக்தி வி.க. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 19
மற்றிஸ் கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் இன்று புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 19
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான பிரிவு III க்கான முதலாவது சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதுகின்றது. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்.உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டத் தொடரில் இன்று புதன் கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
மயிலங்காடு ஞானமுருகன் வி.க. எதிர் கொக்குவில் பொற்பதி வி.க.
பி.ப. 5 மணி
பாசையூர் சென்.அன்ரனிஸ் வி.க. எதிர் ஊரெழு றோயல் வி.க. (ற-23)

### உதைபந்தாட்ட சுற்றுதொடர் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன், புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.
குறித்த சுற்றுத் தொடரில் 34 கழகங்கள் மோதவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ற-23)

### போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்தின் 60 ஆண்டு நிறைவை முன்னிட்டு பாரதி சனசமூக நிலையம், ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் ஆகியவை இணைந்து கிரிக்கெட், உதைபந்து, கரப்பந்து, தாச்சி மற்றும் கபடி ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளன.
மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாரதி சனசமூக நிலையத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-23)

# வென்றது யாழ். மத்திய கல்லூரி



யாழ்ப்பாணம், ஜூன் 19
மற்றிஸ் கோம்ஸ் நிறுவன அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 19 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்டத் தொடர் நேற்று யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகியது.
நேற்று இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது.
அதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 78:56 என்ற புள்ளிகள் அடைப்படையில் வெற்றி பெற்றது.



தொடரின் ஆரம்ப நிகழ்வுகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் கணேசராஜா, விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் ஜெயரட்ணராஜா, பிரதி அதிபர் நிமலன் மற்றும் கூடைப் பந்தாட்ட அணிப் பொறுப்பாசிரியர் பிரசாந் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-23)

கரப்பந்தாட்ட சங்க கரப்பந்துத் தொடர்

# யாழ்.பல்கலை, கலைமதி சம்பியன்களாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் 'ஏ' பிரிவு ஆண்கள் பிரிவில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும், 'பி' பிரிவு ஆண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக்கழக அணியும் சம்பியனாகத் தெரிவாகின.
கடந்த சனிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இறுதியாட்டங்கள் நடை பெற்றன.
முதலில் இடம்பெற்ற 'பி' பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
தொடர்ந்து இடம்பெற்ற 'ஏ' பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

மானிப்பாய் பரிஷ் பாலகிருஸ்ணன் வெற்றிக் கிண்ணம்

# யாழ்.சென்றல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 19
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஸ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.
மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கிறாஸ்கோப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியும், யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கோப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.
அதில் காந்தசீலன் 40 ஓட்டங்களையும், டிலோசன் 22 ஓட்டங்களையும் கபில் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பில், சலிஸ்ரன் 3 இலக்குகளையும், றோகன் அன்ரூ 2 இலக்குகளையும், றஜீவ் குமார், சுபதர்சன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
130 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி 18.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
பாலாந்திரா 41 ஓட்டங்களையும், றஜீவ்குமார் 29 ஓட்டங்ளையும், அன்ரூ ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும், யசிந்தன் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்று அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.
பந்துவீச்சில் கிறாஸ்கோப்பர்ஸ் அணி சார்பாக கஜநாதன், அஜித் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், காந்தசீலன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தரப்பு தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரையடுத்து, மேற்கிந்திய தீவுகளில் முத்தரப்பு கிரிக்கெட் தொடர் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 11ஆம் திகதி வரை நடைபெற உள்ள இந்தத்தொடரில் இந்தியா, இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் விளையாடுகின்றன.

இத்தொடருக்கான இந்திய அணி நேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தற்போது சம்பியன்ஸ் வெற்றி கிண்ண தொடரில் இந்தியா சிறப்பாக விளையாடி வருவதால் அதே 15 வீரர்கள் முத்தரப்பு தொடருக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதனால் சேவாக், கம்பீர், யுவராஜ் சிங் மற்றும் சகீர் கான் ஆகிய முன்னணி வீரர்களும் இடம்பெறவில்லை.

சேவாக், கடைசியாக பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆடியிருந்தார். அந்த ஆட்டத்தில் அவர் மிகவும் மோசமாக விளையாடியதை அடுத்து அவருக்கு வாய்ப்பளிக்கவில்லை.

இங்கிலாந்துக்கு எதிரான தொடர் மற்றும் பாகிஸ்தானுடன் ஒரு போட்டியில் யுவராஜ்க்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதனை அவர் சரியாக பயன்படுத்தாததால் தற்போது ஓரங்கட்டப்பட்டிருக்கிறார். இதேபோல் காயம் அடைந்துள்ள சகீர்கான், கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் இருந்து ஒருநாள் போட்டியில் விளையாடவில்லை.

21 வீரர்கள் கொண்ட பட்டியலில் இடம்பெற்றிருந்த மூத்த வீரர் கம்பீருக்கு முத்தரப்பு தொடரில் வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், சம்பியன்ஸ் கிண்ண தொடரில் ஷிகார் தவான்–ரோகித் சர்மா இணை சிறந்த ஆரம்ப வீரர்களாக பிரகாசிப்பதால், கம்பீரின் பெயர் பரிசீலிக்கப்படவில்லை.

அணி விவரம்: டோனி, ஷிகார் தவான், முரளி விஜய், ரோகித் சர்மா, விராட் கோஹ்லி, தினேஷ் கார்த்திக், சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், புவனேஸ்வர் குமார், இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், இர்பான் பதான், அமித் மிஸ்ரா, வினய் குமார். (ற)



# களத்தடுப்பில் அணி சிறப்பு

## இங்கிலாந்து அணித் தலைவர் கருத்து

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து அணிக்கெதிரான நேற்றைய ஆட்டத்தில் தமது அணி வீரர்கள் களத் தடுப்பில் சிறப்பாக செயற்பட்டனர் என்று இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ் ரெயர் குக் தெரிவித்துள்ளார்.

இந்த போட்டியில் டக்வோர்த் லூயிஸ் முறைப்படி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியிருந்தது.

கிரஹம் சுவான் உபாதைக்கு உள்ளாகியுள்ள போதிலும், ஜேம்ஸ் ட்ரெட்வெல் விளையாடக் கூடிய நிலையில் உள்ளார் என்று அலஸ்ரெயர் குக் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் ஆரம்பத்திலேயே இலக்குகளை வீழ்த்தியதால் தமது அணி பின்னடைவைச் சந்தித்ததாக நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மெக்கலம் கூறியுள்ளார். (ற)



# வெற்றி பெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்


## ஜோர்ஜ் பெய்லி கூறுகின்றார்

இலங்கைக்கெதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார்.

தோல்வியைத் தொடர்ந்து தொடரிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி பெற்ற 253 ஓட்டங்களை 29.1 பந்துப்பரிமாற்றங்களில் அடைந்தால் மாத்திரம் ஆஸ்திரேலியாவிற்கு அரையிறுதி வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும் என்ற நிலையில் ஆரம்பத்தில் அதிரடியாக ஆடிய அவ்வணி, இலக்குகளை இழந்திருந்தது. இறுதி நேரத்தில் கிளின்ட் மக்காய், ஷேவியர் டொகேர்ட்டி இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தைப் பகிர்ந்திருந்த போதிலும், ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்திருந்தது.

இறுதி இலக்குக்காக ஷேவியர் டொகேர்ட்டி, கிளின்ட் மக்காய் இருவரும் போராடியது சிறப்பாக இருந்தது என்று குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, இந்தப் போட்டியில் வெற்றிபெற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் எனக் குறிப்பிட்ட அவர் துரதிர்ஷ்டவசமாக தங்களால் வெற்றி பெற்றிருக்க முடிந்திருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.



29 பந்துப்பரிமாற்றங்களில் தங்களால் வெற்றி பெற முடியாது போனதும், தாங்கள் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டோம் என்ற உணர்வால், போராடுவதற்குரிய சக்தியை இழந்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, ஆனால் இறுதி நேரத்தில் ஷேவியர் டொகேர்ட்டி, கிளின்ட் மக்காய் இருவரும் போராடிய போது வெற்றிபெற்றால் பெருமிதம் கொள்ளலாம் என்ற உணர்வு காணப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தொடரை ஆஸ்திரேலிய அணி சிறப்பாக ஆரம்பித்திருக்கவில்லை எனக் குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, அதன் பின்னர் நியூசிலாந்திற்கெதிரான போட்டியில் மழை குறுக்கிட்டிருந்ததையும் குறிப்பிட்டார். (ற)

# 11,000 ஓட்டங்களைக் கடந்தமை மகிழ்ச்சி

## மஹேல ஜெயவர்த்தன

ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் 11,000 ஓட்டங்களைக் கடந்தமை குறித்து மகிழ்ச்சியடைவதாக இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்தன குறிப்பிட்டுள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்ற நிலையில், அதுகுறித்துத் தன்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் 81 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களைப் பெற்ற மஹேல ஜெயவர்தன, அதன் போது 11,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்திருந்தார். இலங்கை அணி அழுத்தத்திற்குள்ளாகியிருந்த போது அந்த மைல்கல்லை அடைந்ததால், துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது அது பற்றி அதிகமாகச் சிந்திந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்ட மஹேல ஜெயவர்தன, ஆனால் திரையில் அது ஒளிபரப்பப்பட்ட போது அது குறித்து மகிழ்ச்சியடைந்திருந்தாகத் தெரிவித்தார்.

தற்போது அப்போட்டியில் வெற்றி கிட்டியுள்ள நிலையில், அந்த மைல் கல் குறித்துத் தன்னால் அதிகமாக மகிழ்ச்சியாக இருக்க முடியும் எனக் குறிப்பிட்ட மஹேல ஜெயவர்தன, அணிக்காக தான் வழங்கிய பங்களிப்புகள் தனக்கு முக்கியமானது எனக் குறிப்பிட்டார். ஒருநாள் சர்வதேச ஆட்டத்தில்11,000 ஓட்டங்களைக் கடந்த 8ஆவது வீரரான மஹேல ஜெயவர்தன, இந்த மைல கல்லை அடைந்த 3ஆவது இலங்கையராகவும் மாறினார்.

இதற்கு முன்னர் சனத் ஜெயசூரிய, குமார் சங்கக்கார ஆகியோர் இந்த மைல் கல்லை அடைந்துள்ளனர். (ற)



## இடத்தைதக்க வைக்க வோர்ணர் போராட வேண்டும்

டேவிட் வோர்ணர் டெஸ்ட் போட்டிக்கான இடத்தை தக்கவைத்துக் கொள்வது கடினமானது என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து அணிவீரர் ஜோ ரூட்டுடன் கைகலப்பில் ஈடுபட்டதை தொடர்ந்து டேவிட் வோர்ணருக்கு ஆஷஷ் தொடர் ஆரம்பமாகும் வரை போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கான கிரிக்கெட் தொடர் ஆரம்பித்தது முதல் டேவிட் வோர்ணரின் நடவடிக்கைகள் வரவேற்பிற்கு உரியதாக அமையவில்லை என்றும் மைக்கல் கிளார்க் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் சகவீரர்கள் மற்றும் ரசிகர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப வோர்ணர் கடுமையாக உழைக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் போது ஜோ ரூட்டுடன் இடம்பெற்ற கைகலப்பில் ஈடுபட்டமைக்காக 11 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் டேவிட் வோர்ணருக்கு விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சண்டிலாவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்



ஆட்டநிர்ணய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சாளர் அஜித் சண்டிலாவிற்கு 3 நாள்கள் பொலிஸ் விசாரணைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. டெல்லி நீதிமன்றமொன்றினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அஜித் சண்டிலாவை பொலிஸ் காவலில் விசாரணை செய்ய அனுமதிக்குமாறு டில்லி பொலிஸார் கோரியிருந்த நிலையில் அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த விசாரணை மும்பையின் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்களின் தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் விசாரிக்கப்படுவதால், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விவரங்களை அறியும் முகமாக பொலிஸ் விசாரணைகளுக்கு அனுமதி வழங்குவதாக நீதிபதி தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் அடிப்படையைக் கண்டுபிடிப்பதற்குரிய அனைத்து வாய்ப்புக்களும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த டெல்லி நீதிபதி, 3 நாள்கள் விசாரணைகளுக்கு அனுமதிக்கப்படுவதாகத் தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையினருக்கு மனித உரிமை செயமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 19
இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் மனித உரிமைகள் தொடர்பிலான செயலமர்வு ஒன்று கடந்த இரு தினங்களாக நடைபெற்றுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கை வரவுள்ள நிலையில் அதற்கு முன்பதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைபடுத்த அரசு முனைப்புக்காட்டி வருகின்து. அதனடிப்படையிலேயே இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் மனித உரிமைகள் தொடர்பிலான இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது.

படையினருக்கான செயலமர்வு பலாலி படைத் தலைமையகத்தில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் 450 படையினர் வரையில் பங்குபற்றியுள்ளனர். பொலிஸாருக்கான செயலமர்வு யாழ். பொது நூலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்றது. 200 பேர் வரையில் பங்குபற்றினர். இதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற ஆர்.பி.பிரியந்த பெரேரா, சட்டச் செயலாளர் புஞ்சிநேவா, பணிப்பாளர் அரம்பர்த், விசாரணை அதிகாரி பௌமி மற்றும் யாழ். வவுனியா பிராந்திய இணைப்பாளர்கள் ந.கனகராஜ் பிரியதர்சன ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

அனைத்து கணனிக் கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவு ஆரம்பம்
22.06.2013
24.06.2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

SLEAS விசேட கருத்தரங்கு தொடர்
கல்வியியலாளர்களுடன் துறைசார் வளவாளர்கள், மதிப்பீட்டாளர்களின் வழிகாட்ட லில் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த பரீட்சைகளுக்கு விடுமுறை நாள்களில் நடை பெற உள்ளன.
ஆரம்பம்: 22.06.2013 சனிக்கிழமை காலை 9.00-3.30 மணி வரை
இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தம்பர் மண்டபம்
முற்பதிவுகளுக்கு:077 054 0061
ஆசிரிய வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.




இரட்டை தகைமைகள்
ஒரே முயற்சியில்.... ஒரே செலவில்....
HND in
Computing (System Development)
&
BCS - The Chartered Institute for IT
உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்கள், வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தர வல்ல சர்வதேச தரம் வாய்ந்த இரு பட்டத் தகைமைகளை ஒரே முயற்சியில், ஒரே செலவில் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பினை IIS வழங்குகின்றது. இப்பிரிவில் HND in COMPUTING (System Development) கற்கை நெறியில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் முற்றிலும் இலவசமாக கணனிப் பட்டய நிறுவனமான BCS இன் கணனிப் பட்டதாரி ஆகும் வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியும்.
மேலதிக விபரங்களுக்கு
021 4900 900
IIS CITY CAMPUS

# மஹிந்தவின் பொம்மை குன்னூரில் தீக்கிரை

## சிங்கக் கொடியும் எரிப்பு; 500 பேர் கைது

சென்னை,ஜூன் 19
நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகேயுள்ள வெலிங்டனில் இலங்கைப் படை அதிகாரிகள் பயிற்சி பெறும் இராணுவ முகாமுக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட 500 பேருக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



வெலிங்டனில் இராணுவ முகாமில் கடந்த 27 ஆம் திகதி முதல் இலங்கையைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் விங் கொமாண்டர் தஸநாயக்க, மேஜர் ஹரிச்சந்திரா ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கு முதலமைச்சர் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்தார். இது தொடர்பாகப் பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதமும் எழுதினார். வெலிங்டன் இராணுவ முகாமில் இருந்து இலங்கை இராணுவ அதிகாரிகளை உடனே வெளியேற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆகியவையும் இலங்கைப் படையினருக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிப்பதற்கு கண்டனம் தெரிவித்தன.

இந்த நிலையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழர் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், ஆதிதமிழர் விடுதலை முன்னணி, தலித் விடுதலை கட்சி, தமிழ் தேசிய இயக்கம், தமிழ் புரட்சிக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், வணிகர்கள் என 500க்கும் மேற்பட்டவர்கள் வெலிங்டன் இராணுவ முகாமை முற்றுகையிட்டனர்.

சட்டத்தரணிகள், கல்லூரி மாணவர்கள் ஆகியோரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் இலங்கை இராணுவ அதிகாரிகளை உடனே வெளியேற்று என்று கோஷமிட்டனர். கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டத்தில் இருந்து வந்த ஏராளமானோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

போராட்டக்காரர்கள் சிலர் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவப் பொம்மையை எரித்தனர். இலங்கைக் கொடியும் எரிக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் இராணுவ முகாமுக்குள் நுழைய முயன்றனர்.

அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. திடீரென வெலிங்டன் இராணுவ முகாம் முன்பு வீதியில் அமர்ந்து போராட்டக்காரர்கள் மறியலில் ஈடுபட்டனர். இதனால் ஊட்டி-குன்னூர்சாலையில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் கட்சியினர், தமிழ் அமைப்பினர் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோரைப் பொலிஸார் கைது செய்தனர். (த)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா கமலாதேவி



துணுக்காயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கமலாதேவி 16.06.2013 ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நடேசபிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கந்தர் செல்லப்பா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லப்பா பொன்னையாவின் அன்பு மனைவியும் சாரதா (லண்டன்), லலிதா (ஜேர்மனி), சுதன் (லண்டன்), கேசவன் (லண்டன்), ராகவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காசிநாதன், செல்வராஜசிங்கம், தங்கமலர், மகேஸ்வரி, ராஜேஸ்வரி, சரோஜினிதேவி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஐங்கரலிங்கம், நவரட்ணம், கிருபாகரி, யாழினி, சங்கீதா ஆகியோரின் அன்பு மாமியும் சாதனா, ஜகீசன், நரேஷ், சோபிகா, கீர்த்திகா, திவ்யன், ஷரண்யன், மிதுர்ஷா, கபிலன், ரோகித், அஷ்த் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.06.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணி முதல் பி.ப. 4 மணிவரை பொறளை (கனத்தை) ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சாரதா- 442088610200 (பிரித்தானியா)*
*லலிதா- 491785510984 (ஜேர்மனி)*
*சுதன்- 447749355410 (பிரித்தானியா)*
*கேசவன்- 447415528822 (பிரித்தானியா)*
*ராகவன்- 94774121330 (இலங்கை- தற்சமயம்)*

(38429)

தகவல்:
குடும்பத்தினர்.



உங்களுக்கு பிடித்த திரைப்படப் பாடல்
வெல்கம் டியுனாக...
அழையுங்கள்
தமிழ் பாடல்களுக்கு 9999
ஹிந்தி பாடல்களுக்கு 9998
airtel
manthiram

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கைக்கு எட்டக் கூடிய மலர்களைக் கொண்டு தொடுக்கும் மாலையின் பெயர் தான் மகிழ்ச்சி
-பாப்கோடார்டு

# புதன் பொய்கை

A

உதயன் | ஜூன் 19 2013 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு

# பொலிஸார் எப்பொழுதுதான் சிந்தித்து செயலாற்றப் போகிறார்கள்



பொலிஸார் தமது சேவையை சரிவரச் செய்வார்களாயின் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடாது.
தொடர்ந்தும் பொலிஸாரின் சேவை மக்களுக்கு திருப்திகரமாக இல்லாது போயின் உலக நாடுகளிலேயே இலங்கைப் பொலிஸார் கடைசி இடத்துக்குத் தள்ளப்படக் கூடிய வாய்ப்புகள்தான் ஏற்படும்.

■ ரில்லர்

போர் முடிந்த கையோடு தமிழர்பிரதேசங்களில் படையினரை வெளியேற்றி பொலிஸாரை சிவில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட வைக்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் ஒரு சுமுகமான சூழல் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. தமிழர் பிரதேசங்களில் படையினர் இருந்தாலும் பொலிஸாரும் கடமைகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் பொலிஸாரின் சேவை முழுமையாக மக்களுக்கு கிடைக்கிறதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். களவுகள், கொலைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இரவு நேரங்களில் ஏதாவது அசம்பாவிதம் இடம்பெறும் போது பொலிஸாருக்கு அழைப்பு விடுத்தால் அவர்கள் அந்த இடங்களுக்கு வருவதற்கு பின்னிற்கின்றனர். இதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. இரவில் இடம்பெறும் சம்பவத்தை விசாரிக்க மறுநாள் அதிகாலை வேளை தான் சம்பவ இடத்துக்கு வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் சாதாரண பிரச்சினை என்றாலும் அந்தப் பிரச்சினை பெரிய அளவில் உருவெடுக்க வாய்ப்பிருக்கிறது. எனவே இரவு நேரங்களில் பொது மக்களால் அழைப்பு விடுக்கப்படும் இடங்களுக்குச் செல்வதற்கு பொலிஸார் பின்னிற்கக்கூடாது. 24 மணிநேர சேவை என்பது இந்த நாட்டில் காவல் கடமையில் ஈடுபடும் பொலிஸாருக்கு மட்டுமே உள்ளது. எனவே அவர்களின் சேவை இந்த நாட்டுக்குமுக்கியமானதேவையாகும். இரவு வேளையிலும் சேவையை முழுமையாகச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தமிழர் பிரதேசங்களில் இரவு வேளையில் இடம்பெறும் களவுகள், கொலைகளை ஓரளவிற்கேனும் தடுக்க முடியும். பொலிஸாரின் நடமாட்டம் இரவு வேளையில் காணப்பட்டால் கள்வர்கள் தமது முயற்சியைக் கைவிடுவர். பொலிஸ் நிலையத்துக்குச் செல்வது என்றாலே இப்பொழுதும் மக்கள் பயப்படுகின்றனர். இந்த நிலைமாற வேண்டும். தமது பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பொலிஸ் நிலையம் செல்லும் மக்கள் எந்த விதமான அச்சமும் இல்லாமல் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்வதற்கான சூழலை பொலிஸார் தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இயற்கை மரணம் எய்திய ஒருவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றால் பொலிஸ் விசாரணையை மேற்கொள்ளும்பொலிஸார் கொலைகள், களவுகளை மேற்கொள்வோரை கைது செய்வதற்கும் முன்னின்று செயற்பட வேண்டும். போக்குவரத்துப் பொலிஸார்தமதுகடமையை சரிவர மேற்கொள்ளும்போது வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும். போக்குவரத்து பொலிஸாரின் சேவையில் தான் ஒழுங்கான வீதிப் போக்குவரத்தை ஏற்படுத்த முடியும். சனநெரிசல் உடைய நகர்ப் பகுதிகளில் அளவுக்கு அதிகமான வேகத்துடன் வாகனங்களைச் செலுத்துபவர்களால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனால் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. அளவுக்கு அதிகமான வேகத்தில் வாகனங்களை செலுத்துபவர்களை போக்குவரத்துப் பொலிஸார் கண்டு கொள்வதும் இல்லை என்று பொலிஸார் மீது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். போக்குவரத்து பொலிஸார் வாகனங்களின் ஆவணங்களை பரிசோதிப்பதில் மட்டும் நின்றுவிடாமல் அளவுக்கு அதிகமான வேகத்துடன் வாகனங்களைச் செலுத்துபவர்களைக் கைது செய்ய வேண்டும். அப்பொழுதுதான் வேகத்துடன் வாகனத்தை செலுத்துபவர்களைக் கட்டுப்படுத்த முடியும். காப்பெற் வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. இதற்கு வேகக்கட்டுப்பாடு இல்லாமல் வாகனத்தை செலுத்துவதே காரணமாக அமைகின்றது. எனவே வாகன நெருக்கடி மிகுந்த சந்திகளில் போக்குவரத்து பொலிஸாரை நிறுத்தி கடமையில் ஈடுபட வைக்க வேண்டும். அப்பொழுதுதான் அதிகரித்திருக்கும் வீதி விபத்துக்களைக் குறைக்க முடியும். இல்லாதுபோயின் வீதி விபத்துக்கள் அதிகரித்த வண்ணமே இருக்கும். பிரதான வீதிகள் தோறும் போக்குவரத்து பொலிஸாரை சேவையில் ஈடுபடுத்தி, இரவு வேளையில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையை அதிகரிக்க வேண்டும். இதன் மூலமே பொலிஸாரின் முழுமையான சேவையை பெற முடியும். இல்லாது போயின் பொலிஸாரின் சேவையில் மக்கள் குறை கண்டு பிடிப்பார்கள். மேலும் பொலிஸார் விசாரணைகளின் போது மோசமான சித்திரவதைகளை மேற்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இலங்கைப் பொலிஸார் விசாரணைகளின் போது மிளகாய் பொடியை கண்கள் மற்றும் அந்தரங்க உறுப்புகளில் கொட்டுதல் போன்ற மோசமான சித்திரவதை முறைகளைக் கையாள்வதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. அண்மையில் நடந்துள்ள 7 சித்திரவதை சம்பவங்களை சுட்டிக் காட்டி அந்த அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி சட்டத்தரணி பஷில் பெர்னாண்டோ பி.பி.சிக்கு அளித்த செவ்வியில் ''அண்மையில் திருட்டுக் குற்றச்சாட்டு ஒன்றில் கைதான ஒருவர் கண்ணில் மிளகாய்த்தூள் கொட்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இலங்கை பொலிஸ் விசாரணைகளில் இவ்வாறான சித்திரவதைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கு எம்மிடம் ஆதாரம் உள்ளது. இந்த சித்திரவதைகள் குறித்து பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் முறைப்பாட்டு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம். ஆனால் எதுவித பயனும் கிடைக்கவில்லை. அதனால்தான் 78 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி சகல அதிகாரங்களும் படைத்த ஜனாதிபதிக்கு இது குறித்து கடிதம் எழுதியுள்ளோம். அவர் உத்தரவிட்டால்தான் எல்லாம் நடக்கும். சித்திரவதைகள் குறித்து 400 சம்பவங்கள் எம்மிடம் பதிவாகியுள்ளன. அவற்றைப் புத்தகமாக வெளியிடவுள்ளோம். சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா.ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. ஆனால் இலங்கைப் பொலிஸ் அதனை மீறிச் செயற்படுகிறது. சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. மாநாடு 2011 இல் நடந்தபோது இலங்கையில் பொலிஸ் சித்திரவதைகள் குறித்து முறைப்பாடு செய்தோம். சம்பந்தப்பட்டவர்களிடம் ஐ.நா.அதிகாரிகள் விசாரணையும் மேற்கொண்டனர்'' என்றார். இப்படியாக பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வருகின்றன.

பொலிஸார் தமது சேவையை சரிவரச் செய்வார்களாயின் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படாது.

தொடர்ந்தும் பொலிஸாரின் சேவை மக்களுக்கு திருப்திகரமாக இல்லாது போயின் உலக நாடுகளிலேயே இலங்கைப் பொலிஸார் கடைசி இடத்துக்குத் தள்ளப்படக் கூடிய வாய்ப்புக்கள்தான் ஏற்படும். இதனை உணர்ந்து பொலிஸார் முற்று முழுதான சிறந்த சேவையை ஆற்றுவார்களாயின் இந்த நாட்டில் பொலிஸார் குறித்து மக்களிடம் அச்சமில்லாத ஒரு சூழலை ஏற்படுத்த முடியும். இதனை பொலிஸார் எப்பொழுதுதான் சிந்தித்து செயலாற்றப் போகிறார்களோ? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த ஒரு வார்த்தை

ராஜராஜன்

மனதுக்கு இதமளிக்கும் ஒரு வார்த்தை ஒருவரின் வாயிலிருந்து எம்மை நோக்கி வெளிவருமாயின் எம்மைச் சூழ்ந்து நிற்கும் கவலைகள், துன்பங்களைப் போக்கி விடுவதற்கு அது ஒன்றே போதும். மருந்து வகைகள், விலையுயர்ந்த பொருள்கள், பணம் என்பனவற்றால் கிடைக்காத மன அமைதியை எமக்கு இத்தகைய ஆறுதல் வார்த்தைகள் வழங்கக் கூடிய வல்லமை கொண்டவை.

ஒருவன் தீராத நோயினால் துவண்டு போயிருக்கும் வேளையில் அவனை அணுகும் ஒருவன்; 'இந்த நோய் மாறவே மாறாது. உனது தலைவிதி அவ்வளவுதான் - ஏதோ மீதி நாள்களை ஆண்டவனை நினைத்தவாறு கடத்திவிடு' என்று கூறுவானாகில் பத்து நாள்களாவது உயிர்வாழக் கூடிய நிலையில் இருந்த அந்த நோயாளி அடுத்த சில தினங்களிலேயே இந்த உலகைத் துறந்து விடுவான். இதற்குப் பதிலாக அந்த நோயாளியை அணுகும் வேறொருவர்; 'நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். இதெல்லாம் எல்லோருக்கும் வரக்கூடிய நோய்தான். நீ விரைவிலேயே குணமடைந்து வீட்டுக்குச் சென்று விடுவாய்' என்று கூறுவானாகில் அந்தக் கணமே அந்த நோயாளி தன்னைப் பீடித்துள்ள நோய் அரைவாசி குணமடைந்து விட்டதாக உணரத் தொடங்கி விடுவான். அவனுக்குக் கிடைத்த இந்த ஆறுதல் வார்த்தைகள் இந்த மாற்றத்தை ஏற்படுத்தி வைத்தன.

எனவே மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் நாம் நடந்து கொள்வது மிகவும் அவசியமான உயர்ந்த பண்பாகும். ஆனால் தற்போது எம்மில் பலர் ஏனோ இதனைக் கைக்கொள்வதில்லை. ஆனால் ஏற்கனவே வேதனையில் மூழ்கியிருக்கும் மற்றவரை மேன்மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இவர்கள் ஒரு போதுமே தயங்குவதில்லை.

இன்று முதியவர்கள் பலர் தனிமையில் வாழ்ந்து வருவதைக் காணமுடிகின்றது. இவர்களில் அநேகமானவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவ்வப்போது தமது பெற்றோர்களுக்கு ஏதோ பணத்தை அனுப்பி வைப்பதுடன் தமது கடமைகள் முடிந்து விட்டதாக இவர்கள் எண்ணுகின்றனர். வேறு பலர் தமது பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் தனிமையில் வாழ ஷேவண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். முதுமையினால் ஏற்பட்ட இயலாமை, நோய்கள் என்பன இவர்களை வாட்டி வதைக்கின்றன. இவற்றுடன் தனிமையும் சேர்ந்து இவர்களை நரக வேதனைக்குள் தள்ளிவிட்டுவிடுகிறது. தமது மனதுக்கு இதமளிக்கும் ஒரேயொரு வார்த்தைக்காக இந்த அன்பு உள்ளங்கள் ஏங்கித் தவிக்கின்றன. ஆனால் அது இவர்களுக்கு ஒரு போதுமே கிடைப்பதில்லை. மேலும் தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை தமது அகக் கண்ணினால் கண்டவாறு பெரும் மன வேதனையுடன் இவர்கள் தமது பொழுதைக் கழித்து வருகின்றனர். ஆனால் இவர்கள் இறந்தவுடன் இவர்களை விட்டுத் தூர விலகி நின்ற உறவுகள் ஓடோடி வந்து ஊர் போற்றும் வகையில் ஆடம்பரமாக இறுதிக் கிரியைகளை நிறைவேற்றுவதும் இதற்கெனப் பெரும் பணத்தைச் செலவிடுவதும் வழக்கமான நிகழ்வுகளாகி விட்டன. ஆனால் இவற்றையெல்லாம் அந்த முதியவர்களின் ஆன்மாக்கள் ஏற்றுக் கொள்ளுமென எவருமே எதிர்பார்க்க முடியாது. அவை எதிர்பார்த்தது வெறும் ஆறுதல் வார்த்தைகளைத் தான். ஆனால் அவைதான் இறுதிவரை அவர்களுக்குக் கிடைக்கவில்லையே!

சாதாரணமாக ஒரு மனைவியானவள் தனது கணவரின் அன்பான வார்த்தைகளுக்காகவே எப்போதும் காத்திருப்பாள். ஏனைய எல்லாமே அடுத்தபடியாகத்தான். அன்றாட வேலைப்பளு, வேதனைகள், கவலைகள் என்பனவற்றால் சோர்ந்து வாடிப்போயிருக்கும் அவள் தனது கணவனின் வாயிலிருந்து வெளிவரும் அந்த ஒரு ஆறுதல் வார்த்தைக்காகவே ஏங்கி நிற்பாள். கணவனின் வாயிலிருந்து அது வெளி வந்ததும் அவளது களைப்பு, சோர்வு, கவலைகள் எல்லாமே அவளைவிட்டு மாயமாக மறைந்துவிடும்.

அலுவலகங்களில் கூட இத்தகைய நிலை காணப்படுகின்றது. மேலதிகாரியொருவர் தமக்குக் கீழ் பணிபுரிகின்ற ஊழியர் ஒருவரின் பணி தொடர்பாக பாராட்டும்போது அந்த ஊழியர் தமது பணிகளை மேன்மேலும் சிறப்பாக ஆற்ற வேண்டுமென்ற உந்துதலுக்கு ஆளாகுகின்றார். இதனால் அந்த அலுவலகத்தின் பணிகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதை அவதானிக்க முடியும்.

எமது வீடுகளில் உள்ள குழந்தைகளை மட்டம் தட்டாது நாம் தட்டிக் கொடுத்துப் பாராட்டுவோமானால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த மனிதர்களாக உருவாகக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகும். அதை விடுத்து, நாம் அவர்களின் செயற்பாடுகளில் எப்போதுமே குறை காண்பவர்களாக இருப்பதுடன் அவர்களின் மனங்களை நோகடிக்கும் வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொள்வதால் அந்தக் குழந்தைகளின் எதிர்காலமே இருண்டுவிடும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

சிலர் எப்போதுமே மற்றவர்களைக் குறை கூறிக்கொண்டு இருப்பார்கள். அவர்களின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் தீப்பிளம்புகளாக மாறி ஏனையோரைச் சுட்டுப் பொசுக்கிவிடும். இத்தகையோரின் நாக்கிலே சனி குடிகொண்டுள்ளதாகவும் விமர்சிக்கப்படுவதுண்டு. இவர்களின் இத்தகைய வார்த்தைப் பிரயோகங்கள் நிரந்தரமான எதிரிகளை இவர்களுக்கு உருவாக்கிவிடும். இத்தகையவர்களை அணுகுவதற்கு ஏனையோர் தயங்குவர். மேலும் இவர்கள் ஒட்டுமொத்தச் சமுதாயத்திலிருந்தும் புறமொதுக்கப்படும் ஏது நிலையும் உருவாகிவிடும். எடுத்ததற்கெல்லாம் துள்ளிக் குதிப்பதும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதும் எப்போதுமே மற்றவர்களால் வெறுக்கப்படும் செயற்பாடுகளாகும்.

> 'இந்த நோய் மாறவே மாறாது.
> உனது தலைவிதி
> அவ்வளவுதான் - ஏதோ சில
> நாள்களையாவது
> ஆண்டவனை நினைத்தவாறு
> கடத்திவிடு' என்று ஒருவன்
> கூறுவானாகில் பத்து
> நாள்களாவது உயிர்வாழக்
> கூடிய நிலையில் இருந்த அந்த
> நோயாளி அடுத்த சில
> தினங்களிலேயே இந்த
> உலகைவிட்டு நீங்கி விடுவான்.

இன்றைய சமுதாயத்தின் போக்கினை நாம் அவதானிப்போமானால், மனதிலே வேதனைதான் உருவாகும். பெரியவர்களை இளையவர்கள் மதித்துப் போற்றும் உயர் பண்பு காணப்படுவதில்லை. மரியாதைக் குறைவான வார்த்தைகளே வாயிலிருந்து வெளிக்கிளம்புகின்றன. அடிமனதிலே புதைந்து கிடக்கும் விரக்தியின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இதனையொரு பொருத்தமான காரணமாக நாம் கொள்ள முடியாது.

எனவே முன்னர் கூறியவாறு வாயால் வார்த்தைகளை வெளியிடும்போது நாம் மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். பெரியவர்களிடத்தில் மட்டுமல்ல சிறியவர்களிடத்திலும் இதமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ள வேண்டும். ஒருவன் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் வேளையில் எமது வார்த்தைகளால் மென்மேலும் அவனைத் துன்பத்தில் ஆழ்த்துதல் கூடாது. மாறாக இதமான வார்த்தைகளால் அவர்களின் இதயங்களை வருட வேண்டும்.

நாம் அன்பான வார்த்தைகளைப் பிரயோகிப்பதால் எந்தவிதமான பாதிப்பும் எமக்கு ஏற்படப்போவதில்லை, மாறாக அதனால் எமக்கும் மகிழ்ச்சி கிடைக்கும். ஏனையவர்களும் தமது வேதனைகளை மறப்பர். ஆகவே தான் நாம் ஒவ்வொருவரும் வன்சொற்களைத் தவிர்ப்போம். நயமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வோம் என உறுதி மேற்கொள்வோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்தாத் அருகில், இரண்டாயிரம் ஆண்டு பழைமை யான கிராமத்தில் எதற்காகவோ நிலத்தை தோண்டிய பொழுது வேலையாள்களுக்கு நிலத்துக் கடியில் ஒரு பொருள் கிடைத்தது. அது பார்ப்பதற்கு ஒரு பூச்சாடி அல்லது குடுவை போல இருந்தது. வெளிர் மஞ்சள் நிறத்தில் களிமண்ணால் செய்யப்பட்டிருந்தது(6 இன்ச் உயரம்). 5க்கு 1.5 இன்ச் அளவுள்ள தாமிர தகட்டால் உருளை வடிவ அடிப்பாகம் கருங்கா றை யால் (asphalt) பற்றுவைக்கும் தொழில் நுட்பம் கொண்டிருந்தது.


# தொன்மையான பக்தாத் மின்குடுவை

# பக்தாத் அருங்காட்சியகத்தில் உள்ள பற்றரி



(மது

தெற்கு ஈராக்கிலும் (2500 BCE) தாமிரத்தாலான குடுவையும் வெள்ளீயிலான உருளை பொருத்தப்பட்ட இதே போன்ற பொருள்களும் கண்டு பிடிக்கப்பட்டன (சுமேரியன் காலத்திய இடங்கள் ) இதேபோல் இவற்றின் சில பகுதிகள் எகிப்திலும் தொல்லியல் துறையினருக்குக் கிடைத்திருக்கின்றன. ஜெர்மானிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வில்ஹெம் கோனிக் ( Wilhcilm Konig ) (1940) இதைஆய்வு செய்து, இது அந்தக்காலத்தை பற்றரி என்று உறுதிப்படுத்தினார். அவரால் இந்த கண்டுபிடிப்பை பற்றி அப்போதே பிரபல்யப்படுத்தப் படாமல் போன தற்குக் காரணம் உலகப்போர். அது அப்படியேமறைந்து போனது. 1970 ஆம் ஆண்டில் அதனுள் திராட்சை பழரசத்தை ஊற்றி பரிசோதித்ததில் அதிலிருந்து 0.87 வோல்ற் மின்சாரம் உருவானது. (அந்தக்காலத்தில் இப்படி பயன்படுத்தி இருப்பார்கள் என்ற ஒரு அனுமானம்) அலெஸான்ரோ வோல்டா கி.பி 1799 இல் எலக்ரோ வேதியியல் மின்கலனை (electro chemical cell) கண்டுபிடித்தார். மிகச்சிறிய அளவு கிடைத்த இந்த மின்சாரத்தை வைத்து என்ன செய்திருப்பார்கள் (ஏறக்குறைய 2 வோல்ட்) ஏன் எதற்காக இத்தகைய ஆய்வு ? இந்த கலன் நமக்கு முதலில் உணர்த்துவது பெர்சியன் விஞ்ஞானிகள் மின்சாரத்தைகண்டுபிடிக்க முயன்றுள்ளனர் என்பதையே ஆனால் வயர் போன்ற எந்த பொருட்களும் கிடைக்கவில்லை. மருத்துவத்தில், அக்குபஞ்சர் போல ஊசியை வைத்து வலி உள்ள இடங்களில் இதைப் பயன்படுத்தி மின்சாரத்தை செலுத்திப் பார்த்திருக்கலாம். ஆனாலும் இது பயனளித்திருக்காது. பாடசாலைகளில் இதுகுறித்து சொல்லித் தர உபயோகித்திருக்கலாம். தாமிர சிலைகளின் உள்ளே பல மின்கலன்களை உபயோகித்து அதை வைத்து கடவுள்நம்பிக்கையைவளர்க்க அதைப் பயன் படுத்தியிருக்கலாம் என்பது ஒரு சாராரின் கணிப்பு.



# நன்றி சொல்லுங்கள் மனசு இலேசாகும்

நாம் தேடிப் போய்க் கற்றுக் கொள்கிறோம். சில நேரங்களில் எமக்கு வாழ்க்கையே பல விடயங்களை கற்றுத் தரும் - அனுபவங்கள் மூலமாக. உன்னுடைய நண்பர்களைச் சொல்; உன்னைப் பற்றிச் சொல்கிறேன் என்று ஒரு பழமொழி உள்ளது.

அது மிக உண்மையான வார்த்தை. காரணம், நமது நட்பு வட்டாரம் எப்படி இருக்கிறதோ, சுற்றுச்சூழல் எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் நாமும் கிட்டத்தட்ட இருப்போம். சில நேரங்களில் இது விதிவிலக்காக இருக்கலாம்.

நாம் ஒரு விடயத்தைக் கற்றுக் கொள்ளும்போது அதை எமக்குக் கற்றுக் கொடுத்தவர்கள் அல்லது அதற்குக் காரணமானவர்களுக்கு நன்றி சொல்ல பல நேரங்களில் மறந்து விடுகிறோம். ''உனக்கு எதுக்கு மச்சான் நன்றி சொல்லிக்கிட்டு, நீ என் நண்பேண்டா'' என்று ஹாயாக சொல்லி விட்டுப் போய் விடுகிறோம். ஆனால் அது தவறு. உங்களுக்கு ஒருவர் மூலம் ஏதாவது நல்ல விஷயம் கற்றுக் கொள்ள நேரிடும் போது நன்றி சொல் லுங்கள். அது உங்களது இதயத்துக்கும், மனதுக்கும் நல்லது என்கிறார்கள் மனநல நிபுணர்கள்.

எமக்கு நெருக்கமானவர்களிடமிருந்து நாம் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. அதற்கு அவருடன் நாம் நெருங்கிப் பழகியதே முக்கியக் காரணம்.

சரி, எப்படியெல்லாம் நன்றி சொல்லலாம், எதற்கெல்லாம் நன்றி சொல்லலாம்... பார்ப்போமா...?

- சிலருக்கு சில கெட்ட பழக்க வழக்கங்கள் இருக்கலாம். அவற்றைக் கைவிட முடியாமல் தவித்துப் போயிருப்போம். என்னவெல்லாமோ செய்து பார்த்திருப்போம். முடியாமல் போயிருக்கும். ஆனால் நாம் ஒருவருடன் பழக ஆரம்பித்து அவர் மீது நமக்கு மரியாதையும், அன்பும் ஏற்பட்டு அந்த நல்ல நட்பின் காரணமாக அந்தப் பழகத்தை விட்டிருப்போம் - அதற்காக நன்றி சொல்லலாம்.

- தினமும் வாழ்க்கையை அலுப்பும், சலிப்புமாக உப்புச் சப்பில்லாமல் ஓட்டிக் கொண்டிருந்திருப்போம். சுறுசுறுப்பாக இல்லாமல் எப்போதும் ஒரு வித சோம்பேறித்தனம் எமக்குள் ஒட்டிப் போயிருக்கும். அதை உங்களுக்கு உணர்த்த ஏதாவது ஒரு விடயம் உதவியிருக்கும் - அப்படி அதை உணர்த்தியவர்களுக்கு நீங்கள் நன்றி சொல்லலாம்.

வாழ்க்கையில் பிடிப்பில் [illegible]



-மிது

ஓடிக்கொண்டிருந்திருப்பீர்கள். இல்லை, இதுவல்ல உன் வாழ்க்கை, உனக்கென்று ஒரு இதயம் இருக்கிறது. உன் மீது பரிவும், அன்பும் காட்ட அது துடித்துக் கொண்டி ருக்கிறது என்று ஏதாவது ஓர் அன்புக் கரம் உங்களை நோக்கி நீண்டு வந்திருக்கும் - அதற்காக நீங்கள் நன்றி சொல்லலாம்.

-இதை நாளைக்கு செய்வோம், அதை நாளை மறு நாள் செய்வோம் என்று எதையுமே தள்ளிப் போட்டுக் கொண்டிருந்திருப்பீர்கள். அப்படி இருக்காதேடா, அது தவறு என்று உங்களது நட்பு உங்களுக்கு உணர்த்தியிருக்கலாம் அதற்காகவும் நன்றி சொல்லலாம்.

[illegible]

திரிந்திருப்பீர்கள், ஆதரவுக்காக கதறித் துடித்திருப்பீர்கள். கொடும் வெயிலில் கடும் கஷ்டத்தில் நீங்கள் துடித்துக் கொண்டிருந்தபோது உங்களுக்காக வந்து சேர்ந்திருக்கும் ஒரு நிழல் - அதற்காகவும் நன்றி சொல்லலாம்.

இப்படி உங்களுக்காக, உங்கள் நலனுக்காக துடிக்கும் இதயங்களுக்காகவும், உங்கள் பால் அன்பு செலுத்து வோருக்காகவும், இன்னும் பல காரணங்களுக்காகவும் நன்றி சொல்லத் தவறாதீர்கள். நன்றி என்பது மிகச் சிறிய வார்த்தைதான். ஆனால் உங்களுக்கு உங்களது வாழ்க்கையின் அர்த்தத்தை உணர வைத்தவர்களுக்கு, உங்களையே புதுப்பிக்க உதவியவர்களுக்கு நீங்கள் சொல்லும் நன்றி என்ற இந்த சிறிய வார்த்தை மிகப் பெரிய மகிழ்ச்சியையும் நிம்மதியையும், ஆறுத லையும் நிச்சயம் தரும்.

எனவே, யாராவது உங்களுக்கு எந்த வகையிலாவது உதவியிருந்தால், உங்களை உங்களுக்கே அடையாளம் காட்டியிருந்தால், தயங்காமல் ஒரு நன்றி வைத்து விடுங்கள்.. மனசு லேசாகிப் போகும்.

**உங்களுக்கு ஒருவர் மூலம் ஏதாவது நல்ல விஷயம் கற்றுக் கொள்ள நேரிடும் போது நன்றி சொல் லுங்கள். அது உங் களது இதயத்துக்கும், மனதுக்கும் நல்லது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைமுடியை

## கருப்பாக மாற்ற மருந்து



வெள்ளைமுடியை கருப்பு முடியாக்க புதிய மருந்தைக் கண்டுபிடித்துள்ளது பிரிட்டன் பிராட்போர்ட் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்கள் குழு.

இந்த மருத்துவ ஆய்வாளர்கள் குழு, மனிதர்களின் தலைமுடியின் நரையை மருந்து மூலம் தடுக்க முடியும் என்று கண்டறிந்துள்ளனர்.

மனிதர்களின் முடி தனது இயற்கை வண்ணத்தை இழப்பதற்கான காரணம் என்ன என்று தாங்கள் கண்டறிந்திருப்பதாக இந்தக் குழு தெரிவித்துள்ளது.

அதாவது, சிறிது சிறிதாக ஹைட்ரொஜென் பெராக்ஸைடு வேதிப்பொருள் மனிதர்களின் முடியில் படிவதனால், மனிதர்களின் முடி தமது இயற்கை வண்ணத்தை இழந்து வெண்மையாக மாறுகின்றன.

இந்த வேதிப் பொருளை முடிகளில் இருந்து நீக்குவதன் மூலம் முடியின் இயற்கை வண்ணத்தை அதற்கு மீண்டும் அளிக்கமுடியும் என்று இந்த ஆய்வாளர்கள் கருதி, அந்த வேதிப்பொருளை நீக்கும் மருந்தை உருவாக்கினார்கள்.

அதைப் பரிசோதனை முயற்சியாக சிலரிடம் கொடுத்தபோது அவர்களின் தலைமுடி தமது பழைய நிறத்துக்கு மாறியதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்த மருந்தால் நிரந்தரமாக ஒருவரின் தலைமுடிகள் நரையாவதை தடுக்க முடியுமா என்பது குறித்து இந்த ஆய்வாளர்களால் உறுதியாக தெரிவிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வேதிப் பொருளை முடிகளில் இருந்து நீக்குவதன் மூலம் முடியின் இயற்கை வண்ணத்தை அதற்கு மீண்டும் அளிக்கமுடியும்.



# தூக்கம் இல்லா விட்டால் ஊக்கம் குறைந்து விடும்

இன்றைய பரபரப்பான உலகில் மன உளைச்சல், தலைவலி உள்ளிட்ட உடல் பாதிப்புக்கள் காரணமாக ஒருவருக்கு தூக்கம் கெடுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. இவ்வாறு தினமும் சரியான தூக்கம் இல்லாத நிலையில், மறுநாள் அவரது செயல் திறனும் வெகுவாகப் பாதிக்கப்படும்.

தூக்கம் கெடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. பெரியவர்களைப் பொறுத்தவரை உடல் பருமன் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உரிய தூக்கம் இல்லாமல் போய்விடும். குறட்டை விட்டுத் தூங்குவது தூக்கத்துக்கு ஏற்படும் தடையாகும். அது ஒரு உடல் நலக் குறைபாடு என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

# தண்ணீர் குடியுங்கள் உடல் ஆரோக்கியம் தானே தேடிவரும்….!



உடல் ஆரோக்கியமாக உள்ளவர்கள் தினமும் 2 லீற்றர் முதல் 3 லீற்றர் வரை தண்ணீர் குடித்தால் போதுமானது. மேலும் ரசம், மோர் போன்ற திரவ உணவுகள் மூலமும் உடலுக்கு நீர்ச்சத்து கிடைத்து விடுகிறது.

எனக்குத் தாகமே எடுப்பதில்லை. அதனால் தான் தண்ணீரே குடிப்பதில்லை என சிலர் ஆறு மணி நேரத்துக்கு தண்ணீர் குடிக்காமல் இருப்பார்கள். அது தவறான விடயமாகும்.


ஏனெனில் ஆரோக்கியமாக உள்ளவர்கள் போதியளவு தண்ணீர் குடிக்காவிட்டால் உடலிலிருந்து கழிவுகள் முழுமையாக வெளியேறாது. அதனால் சிறுநீர் வெளியேறும்போது எரிச்சல் ஏற்படும்.

ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கு தினமும் 1.5 லீற்றர் முதல் 2 லீற்றர் வரை சிறுநீர் வெளியேறினால்தான் இயல்பு நிலை என்று அர்த்தம். இதய நோய், சிறுநீரக நோய் பாதிப்பு உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி குடிதண்ணீரின் அளவை நிர்ணயித்துக் கொள்வது அவசியம்.

காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிப்பதில் தவறில்லை, அது உடலுக்கு நல்லது. நன்றாக பசி எடுக்கும். உடல் ஆரோக்கியமாக உள்ளவர்கள் ஒரு நாளைக்கு அதிக பட்சம் 3 லீற்றர் தண்ணீர் குடித்தால் போதுமானது. அதற்கு மேல் உடலுக்கு குடிதண்ணீர் தேவை இல்லை.

# கொட்டாவி வருவது ஏன்?





கொட்டாவி ஏன் ஏற்படுகிறது என்பதற்கான காரணம் மட்டும் இதுவரையில் ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது. எனினும் ஒருவர் எத்தனை முறை கொட்டாவி விடுகிறார் என்பது காலத்தை பொறுத்து மாறுகிறது. சுற்றுச்சூழலிலுள்ள வெப்ப அளவு உடலின் வெப்பத்தைவிட அதிகமாக இருந்தால் கொட்டாவி வரும் வாய்ப்பு மிகவும் குறைவு என்றும் கண்டறிந்துள்ளார் பிரிட்டன் பல்கலைக்கழக ஆய்வாளர் ஆண்ட்ரூ கேளப்.

வெப்ப அளவுக்கும், கொட்டாவி ஏற்படுவதற்கும் இடையிலான தொடர்பு, மூளையின் வெப்ப அ[illegible] நெறிமுறைப்படுத்தும் ஒரு முறையாக இருக்கக்[illegible] என்பதையே காட்டுகிறது.

கோடைகாலத்தைவிட குளிர்காலத்திலேயே மக்கள் அதிகமாக கொட்டாவி விடுகிறார்கள் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தமுடிவின் அடிப்படையில், வெப்பமான நிலையானது அளவுக்கதிகமாக வெப்பமடைந்து விட்ட மூளைக்கு ஒரு நிவாரணத்தை அளிப்பதில்லை. மாறாக, கொட்டாவியின் வெப்ப நெறிமுறைக் கோட்பாட்டின்படி, கொட்டாவியின் போது நிகழும் குளிர்-வெப்ப காற்று பரிமாற்றத்தினால் மூளையானது குளிர்ந்து விடுகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

கொட்டாவி ஏன் ஏற்படுகிறது ? கொட்டாவியின் உயிரியல் பொருள் என்ன என்பது குறித்து ஆய்வாளர்கள் தற்போது ஆய்வு செய்து [illegible] ஏற்றுக் கொள்ளும் [illegible] கருத்து இதுவரை எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒரு வகுப்பறை கற்றுக் கொடுக்க முடியாத விடயங்களை விளையாட்டு மைதானங்களும் திறந்த வெளிகளும் நண்பர்கள் வட்டமும் சிறந்த சமூகத்தொடர்பும் எமக்கு கற்றுக் கொடுக்கின்றன.



இ.சர்வேஸ்வரா,
உதவிப் பதிவாளர்,
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# திறன்களே உலகின் திறவுகோல்கள்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

### திறன்களை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?

திறன்கள் என்பன ஒரு மனிதனிடத்தில் இயல்பாகவே ஏற்படுகின்ற விடயங்கள் எனினும் நாம் எமது முயற்சியினால் அவற்றினை வளர்த்துக் கொள்ள முடியம். தனியே புத்தகப் படிப்பும் பரீட்சைப் பெறுபேறுகளின் விளைவுகளுமே எமது வாழ்வைத் தீர்மானிக்கும் என்ற நம்பிக்கை முதலிலே மாற வேண்டும். இதனை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோர்கள் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என இயம்பியிருந்தார்கள்.

எனவே நாம் பாடத்திட்டங்களை மனனம் செய்து கொள்வதால் பரீட்சைகளிலே நல்ல மதிப்பெண்களை பெறுவது மட்டுமே எமது வெற்றியை தீர்மானித்து விடப் போவதில்லை. நாம் கற்றல் செயற்பாடுகளுடன் சமாந்தரமாக கல்விசாரா இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் முன்னிறுத்திச் செல்லும்போதே திறன்களையும் பொருத்தமான அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு வகுப்பறை கற்றுக் கொடுக்க முடியாத விடயங்களை விளையாட்டு மைதானங்களும் திறந்த வெளிகளும் நண்பர்கள் வட்டமும் சிறந்த சமூகத்தொடர்பும் எமக்கு கற்றுக் கொடுக்கின்றன.

நாம் வகுப்பறைகளை விட்டு வெளியே வரும்போது வானம் எமக்காக திறந்திருக்கும். இந்த இடத்தில் வகுப்பறைகளை விட்டு வெளியே வருதல் என்பதை சிலர் வகுப்பறைகளை புறக்கணித்தல் அல்லது கைவிடல் என தவறுக அர்த்தம் கொள்ளக் கூடாது.

வகுப்பறைகளை தாண்டி வெளியே உங்களுக்காக காத்திருக்கும் விளையாட்டு வாய்ப்புக்கள், கழகங்கள், சங்கங்களின் செயற்பாடுகளில் பங்கேற்று தலைமை தாங்க கிடைக்கும் சந்தர்ப்பங்கள் நாடகம், இசை, கவிதை, பேச்சு, கட்டுரை, சிறுகதை, பொது அறிவுப் போட்டி எனப் பங்கேற்கக் கிடைக்கும் வாய்ப்புக்கள் என்பனவற்றை தவருது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாது நாம் இன்னொரு மிக முக்கியமான விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மனிதன் ஒரு சமூக விலங்கு. அவன் சமூகத்தோடு இணைந்தே வாழ வேண்டியுள்ளது. சமூகத்தைச் சாராது எந்த மனிதனும் வாழ்தல் என்பது கடினமானதே. இதனை உணர்ந்து நாம் எமது சமூக மயமாகும் திறனை நிச்சயமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.


உலக மயமாக்கலின் பல விளைவுகள் இன்று பலரது சமூக மயமாகும் திறன்களை மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் அவர்களை தனிமைப்படுத்தி விட்டன. இந்த நெருக்கடியை எமது சமூகம், குறிப்பாக வளரும் மாணவர்கள் எதிர் கொள்ளவே கூடாது. இந்த மிகப் பெரிய சவாலைத் தாண்டி எமது பள்ளைகள் சமூக மயமாகும் தன்மையை அதிகரித்துக் கொள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் என அனைத்துமே வாசல்களைதிறந்து வழிகளைக்காட்ட வேண்டும்.

### முடிவு

ஆழமாக ஆராயப்படவேண்டிய இவ்விடயம் தொடர்பாக சிறியளவில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தத்தக்கவிதத்திலேயே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் திறன்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அறிவோடு சமாந்தரமாக திறன்களையும் வளர்க்க வேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும். உலகளாவிய ரீதியில் சிந்திப்போமானால் உள்ளூர் அளவிலே செயலாற்றுவோம் என அனைவரும் இது விடயம் தொடர்பில் திடசங்கற்பம் பூண்டு, சவால் மிக்க உலகை வெற்றி கொண்டு சாதனைகளைப் படைக்க எமது மாணவர்களைத் தயார்ப்படுத்துவோம்.



# 28 மொழிகள் பேசும் சிறுவன்



அமெரிக்காவைச் சேர்ந்த ரிமொதி டொனர் என்ற 16 வயது சிறுவன் ஹிந்தி மொழி உட்பட்ட 28 மொழிகள் பேசும் திறமை பெற்றுள்ளதனால் அறிஞர்கள் அவனை hyperpolyglot எனப் பாராட்டியுள்ளனர்.

மிகக்குறுகிய காலத்தில் 23 மொழிகள் பேசும் திறமை பெற்றதால் இச்சிறுவன் முழு உலகத்தாலும் ஈர்க்கப்பட்டுள்ளான். தனது திறமையை காணொளி களில் பதிவு செய்து அதனை யூடியூப் வெளியிட்டதன் மூலம் உலகம் முழுவதும் புகழ் பெற்றுள்ளான்.

யூத மொழியை முதன்முதலாகக் கற்க ஆரம்பித்தபோதே இவனுக்கு மொழிகளில் ஆர்வம் ஏற்பட்டதாகவும் யூத மொழியில் ஒரு வாரத்திலேயே தேர்ச்சி பெற்றதாயும் அறியப்படுகின்றது.

நியூயோர்க் வாகனச் சாரதிகளுடன் உரையாடுதல், வெளியிடங்களில் மக்களுடன் பேசிப்பழகுதல், ஈ.மெயில் மற்றும் ஸ்கைப் மூலம் உலகம் முழுவதும் மக்களுடன் தொடர்பு கொள்ளுதல் போன்றவற்றின் மூலமே இவன் பன்மொழிப்பயிற்சியைப் பெற்றுள்ளான்.


ஹிந்தி, அரபு, குரொஷயன், டச்சு, ஆங்கிலம், பார்சி, பிரெஞ்சு, ஜேர்மன், ஹவுசா, ஹீப்ரு, இந்தோனேசியன், இஷிஹோசா தென் ஆபிரிக்க ஆட்சி மொழி, இத்தாலி, மாண்டரியன், ஒஜிப்வே அமெரிக்க பழங்குடி மக்களது மொழி, பெர்சியன், பாஷடோ, ரஷ்யன், ஸ்பானிஷ, ஸவாஹிலி, துருக்கிஷ், வோலாப், யித்திஷ் என 28 மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

டொனரின் திறமையைப் பாராட்டிய பல்லாயிரக் கணக்கான உலக மக்கள் மேலும் அவனது திறமையையும் சிறப்பையும் வெளிப்படுத்துமாறு ஊக்கம் அளித்து வருகின்றனர்.

> டொனர் என்ற 16 வயதுச் சிறுவன் ஹிந்தி, அரபு, குரொஷயன், டச்சு, ஆங்கிலம், பார்சி, பிரெஞ்சு, ஜேர்மன், ஹவுசா, ஹீப்ரு, இந்தோனேசியன், இஷிஹோசா தென் ஆபிரிக்க ஆட்சி மொழி, இத்தாலி, மாண்டரியன், ஒஜிப்வே அமெரிக்க பழங்குடி மக்களது மொழி, பெர்சியன், பாஷடோ, ரஷ்யன், ஸ்பானிஷ, ஸவாஹிலி, துருக்கிஷ், வோலாப், யித்திஷ் என 23மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பறவை மிருகம்



இதுதான் உலகின் முதல் முதல் பறக்கமுற்பட்ட பறவை மிருகம் இந்த மிருகப் பறவையின் எச்சங்கள் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த மிருகப் பறவையின் என்புக் கூடுகளை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் இது 160 மில்லியன் ஆண்டு களுக்கு முற்பட்டவை என கூறுகின் றனர். இந்தப் பூமிப் பந்தில் முதன் முதல் வானில் பறக்க முற்பட்ட பறவை இனம் எது என்பதற்கு தற்போதைக்கு இந்த டைனசோர் பறவைதான் விடை யாக உள்ளது. ஆனாலும் மேலும் ஆய்வுகள் தொடர் கின்றன.

# அழகிய மாலைதீவு


மாலைதீவு இலங்கைக்குத் தென்மேற்குப் பக்கமாக 700கி.மீ.க்கு அப்பால் உள்ளது. இத்தீவுக் கூட்டத்தின் பரப்பளவு 90 ஆயிரம் சதுரக் கிலோ மீற்றராகும்.

மாலைதீவு 1965 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1968 ஆம் ஆண்டுவரை "சுல்தான்" என அழைக்கப்படும் மன்னராட்சி இருந்தது. மாலைதீவின் முதலாவது தலைவராக இப்ராகின் நசீர் திகழ்ந்தார். 1974 ஆம் ஆண்டு தொடக்கம் பாரம்பரிய மக்கள் தோணிகளில் மீன் பிடித்தனர். வளர்ச்சியடைந்த பின் இயந்திரப் படகுகளில் தமது தொழில்களை மேற்கொண்டனர். உலகிலேயே மிகவும் சமதரைத் தோற்றம் கொண்ட நாடாக இது உள்ளது. கடலிலிருந்து நிலத்தின் ஆகக் கூடிய உயரம் 2.3 மீற்றர் ஆகும். மாலைதீவு 313920 சனத்தொகையைக் கொண்டது. 1192 தீவுகளைக் கொண்டது மாலைதீவு. இதில் 200 தீவுகளிலேயே மக்கள் வாழ்கின்றனர். மீன்பிடி, சுற்றுலா கைத்தொழில்கள் இத்தீவில் 20% நடைபெறுகிறது. இங்கு பாடசாலை மாணவர்களுக்கு மீன்பிடித்தொழில் ஒரு பாடமாக்கப்பட்டது. வேறு நாடுகளைப் போன்று நுழைவனுமதி பெற்றுச்செல்ல வேண்டிய தேவையில்லை. ஆனால் மாலைதீவு செல்லும் வெளிநாட்டவர் அனைவரும் திரும்புவதற்கான விமான பயணச்சீட்டை வைத்திருப்பது கட்டாயமானதாகும்.



நேச.வித்யாசாகர், தரம் 9டி, கிளிநொச்சி ம.வி.

# முட்டைகள்...



அமெரிக்காவில் வால் இல்லாத சில கோழி இனங்கள் நீல நிற முட்டைகளை இடும். நியூகினியாவில் உள்ள காசோவரி எனப்படும் வான்கோழி இனப் பறவைகள் பசுமை நிற முட்டைகளை இடும். அன்னப் பறவை பசுமை கலந்த வெண்ணிறத்தில் முட்டையிடும். ஜப்பானிலுள்ள குயில்களின் முட்டைகள் சிவப்பு நிறத்தில் இருக்கும்.

ஆபிரிக்காவிலுள்ள ஜிங் இனக் கோழிகளின் முட்டைகள் சிவந்த மஞ்சள் நிறத்தில் கரும்புள்ளிகளுடன் இருக்கும்.

பிணந்தின்னிக் கழுகுகளின் முட்டை சிவப்பு கலந்த பழுப்பு நிறம். புள்ளிகள் மற்றும் கோடுகள் கொண்ட முட்டைகளை பவளக்கால் நாரைகள் இடும். வரகு கோழிகளின் முட்டைகள் மஞ்சள் நிறத்தில் இருக்கும். கருடனின் முட்டை சாம்பல் நிறம். கடல் அர்ச்சின் என்ற பறவை ஆரஞ்சு நிற முட்டைகளை இடும். செந்தலைக் கிளிகளின் முட்டைகள் வெண்ணிறத்தில் கோள வடிவில் இருக்கும்.

# விவசாயப் பழமொழிகள்

- ★ இளைத்தவன் எள்ளு, வலுத்தவன் வாழை
- ★ இறைப்புக் கெல்லாம் ஒரே விளைவு
- ★ ஈயுந்தனையும் எரு விடு காயுந்தனையும் களை எடு
- ★ ஈரூரில் உழுதவன் இரண்டும் கெட்டான்
- ★ ஈரூர் வேளாண்மை இரு தாரத்துக்கு நேர்
- ★ உரம் உதவுவது போல் ஊரார் உதவார்
- ★ உரம் ஏற்றி உழவு செய்
- ★ உழவற உழுதவன் ஊரிற் பெரியவன்
- ★ உழவாற் பயிராவது எருவாலாகாது
- ★ உழவுக்கு மிஞ்சிய ஊதியமில்லை
- ★ உழுகிற காலத்தில் ஊரை விட்டுப் போகாதே
- ★ உழுத காலாலே உலப்பி விடு
- ★ உழுதவன் ஒரு போதும் கெட்டதில்லை
- ★ உழுது அலர்ந்தது பழுதாகாது
- ★ உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை

சு. ஆர்த்திகா, [illegible]
யாழ்.வேம்படி மகளிர் உ.க.பா.

# எறும்பு சாப்பிடுகிறது!

(கடந்த வாரத் தொடர்ச்சி)

''கவலை வேண்டாம். உங்களுக்கு கிடைக்க வேண்டிய இனிப்புக்கு அதிகமாகவே கொண்டு வருகிறேன். நீங்கள் யாரும் அந்தக் கடைக்குள் வரக்கூடாது. வெளியே நில்லுங்கள்'' என்ற கோபால் கடைக்குள் நுழைந்தார்.

அப்போது கடைக்காரனின் மகன்தான் கடையைக் கவனித்துக்கொண்டிருந்தான். உள்ளே இருந்த அறைக்குள் கடைக்காரன் தூங்கிக் கொண்டிருந்தான்.

இவனை எளிதாக ஏமாற்றலாம் என்று நினைத்த கோபால், இனிப்புப் பாத்திரத்துக்குள் கையை விட்டான். இனிப்புக்களை எடுத்துச் சாப்பிட்டான். இதைப் பார்த்த சிறுவன், ''என்ன இனிப்பை எடுத்து சாப்பிடுகிறாய்? பணம் தராமல் எதையும் தொடக்கூடாது'' என்று கத்தினான்.

தம்பி! ''உன் தந்தைக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் இப்படி இனிப்பை சாப்பிடுவதை அவர் பொருட்படுத்தமாட்டார். என் பெயர் எறும்பு. நீ வேண்டுமானால் அவரிடம் இனிப்பை நான் சாப்பிடுவதாகச் சொல். அவர் ஒன்றும் சொல்லமாட்டார்'' என்றான் கோபால்.



அப்பா! ''கடைக்குள் எறும்பு வந்துள்ளது. நான் சொல்லியும் கேளாமல் இனிப்பை எடுத்துச் சாப்பிடுகிறது'' என்று கத்தினான் சிறுவன். தூக்கம் கலைந்ததால், எரிச்சல் அடைந்த கடைக்காரன், மகனே! ''எறும்பு வந்தால் விரட்டு... இல்லையேல் அதை அப்படியே விட்டு விடு. எறும்பைச் சமாளிக்க உன்னால் முடியாதா?'' என்று கத்தினான்.

இதைக் கேட்ட கோபால் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டான். ''இனிப்பு நிறைந்திருந்த ஒரு பாத்திரத்தை தூக்கினான். சிறுவர்களுக்கு வழங்க இதுபோதும்'' என்று நினைத்து அங்கிருந்து புறப்பட்டான். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அவன், அப்பா! ''நிறைய இனிப்புகளை எறும்பு எடுத்துச் செல்கிறது. பணம் ஏதும் தரவில்லை'' என்று கத்தினான்.

இதைக் கேட்ட கடைக்காரன் கோபம் கொண்டான். என் தூக்கத்தைக் கெடுக்காதே என்று எத்தனை முறை சொல்வது? நான் எழுந்து வந்தால் உன் தோலை உரித்து விடுவேன். ''எறும்பு இனிப்பை எடுத்துச் செல்வதற்காக, யாராவது கவலைப்படுவார்களா? போனால் போகட்டும் எவ்வளவு இனிப்பை எடுத்துச் சென்றுவிடப் போகிறது. பேசாமல் இரு'' என்று கத்தினான்.

இனிப்புப் பாத்திரத்துடன் வெளியே வந்தான் கோபால். அங்கிருந்த சிறுவர்களுக்கு ஒன்றுக்கு இரண்டாக இனிப்புக்களைத் தந்தான். அவர்களும் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டனர். ''உங்களை ஏமாற்ற முயன்ற கடைக்காரனை நன்றாக ஏமாற்றி விட்டேன்'' என்ற கோபால் அங்கிருந்து புறப்பட்டான்.

தூக்கம் கலைந்து எழுந்த கிழவன், விஷயம் அறிந்ததும் குய்யோ, முய்யோ என கத்தினான். யார் அந்த எறும்பு தெரியாமல் நொந்து போனான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல் மூலம் மனிதனை இனங்காண முடியுமா?

கலை



இயற்கையின் படைப்பில் ஒரு மனிதனின் குரல், இன்னொரு மனிதனின் குரலைப்போல இருப்பதில்லை என்பது ஓர் ஆச்சரியமான விடயம் தானே. உதாரணத்துக்கு எம்மைச் சுற்றியுள்ள மனிதர்களை எடுத்துக்கொள்வோம். யாருடைய குரலாவது இன் னொருவரின் குரலோடு நூறுவீதம் பொருந்துகிறதா என்று பார்த்தோமானால் நிச்சயமாக இல்லை என்றுதான் கூற வேண்டும். இன்னும் சொல்லப்போனால் குரலின் வழியே குறிப்பிட்ட மனிதனை எம்மால் அடையாளம் காணமுடியும் என்பதுதான் உண்மை.

சரி, இது ஒரு பக்கம் இருக்கட்டும். பொதுவாக ஒரு குரலைக் கேட்டவுடன் அந்த குரலுக்குச் சொந்தக்காரர் ஆணா அல்லது பெண்ணா என்று எம்மால் இலகுவாகக் கூறிவிட முடிகிறதுதானே? எப்படி எம்மால் கண்டறிந்து கொள்ள முடிகிறது என்றால், ஆண்களின் குரல் பெண்களின் குரலைக் காட்டிலும் ஏற்று கடிமனாகவும் கொஞ்சம் கரகரப்பாகவும் இருப்பதால் தான். அதேவேளையில் பெண்களின் குரலை எடுத்துக் கொண்டோமானால், அவர்களின் குரல் மென்மை யாகவும் (Soft) இனிமையாகவும் இருக்கும். அந்த மென்மைதான் ஆண்களின் குரலிலிருந்து பெண் களின் குரலை முற்றிலும் வேறுபடுத்திக் காட்டு வதற்குரிய முக்கிய காரணி ஆகும்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் குழந்தைகள் வளர வளரத்தான் குரலில் ஆண், பெண் என்ற வித்தியாசம் தெரிய ஆரம்பிக்கும், பிறந்து மூன்று நான்கு வயது வரையிலான குழந்தைகளிடம் இந்த குரல் வித்தியாசத்தை எம்மால் அதிகம் உணர்ந்து கொள்ள முடியாது. இதற்குரிய காரணத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு முதலில் நாம் எப்படி பேசுகி றோம் என்பதைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

நாம் எப்படிப் பேசுகிறோம் என்பது பற்றி விளக்கமாக கூறினால், இந்தப் பதிவு நாம் பயின்ற விலங்கியல் பாட பிரிவை நினைவு கூர்ந்துவிடும் அபாயம் இருப்பதால் என் னால் இயன்றவரை நாம் எப்படிப் பேசு கிறோம் என்பதை சுருக்கமாக இங்கே குறிப்பிடலாம்.

மனிதர்களின் தொண்டைப்பகுதியில், குறிப்பாக குரல்வளையில் கிடைமட்டமாக அமைந்திருக்கும் ஒரு சோடி தசைமடிப்புகள் தான் மனிதன் பேசுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று சொன்னால் மிகை யில்லை. குரல்நாண்கள் (Vocal Cords) என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த தசைமடிப்புகள் நாம் மூச்சை உள்ளிழுக்கும்போது தளர்ந்த நிலையிலும், நாம் பேச முயற்சிக்கும் போது வீணையில் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும் நரம்பைப் போல விறைப்பான (Temper) நிலையிலும் இருக்கும். நாம் மூச்சை உள்ளிழுக்கும் போது நுரையீரலை சென்றடையும் காற்று நாம் பேச முயற்சிக்கும் போது திரும்பி வந்து விறைப்பாக நிற்கும் குரல் நாண்களின் மீது குறிப்பிட்ட அழுத்தத்தில் மோதி குரல்நாண்களை அதிரச்செய்து சத்தத்தை உண்டாக்குகிறது.

வீணையில் இழுத்துக்கட்டப்பட்ட நரம்புகளை விரல்களால் மீட்டும்போது எப்படி சப்தம் உண்டாகிறதோ அதுபோலவே விறைப்பாக நிற்கும் குரல் நாண்களின் மீது அழுத்தப்பட்ட காற்று வந்து மோதும் போதும் சப்தம் உண்டாகிறது. சாதாரணமாக குரல்நாண் வளர்ந்த ஆணில் 17.5 mm - 25 mm வரையிலும், வளர்ந்த பெண்ணில் 12.5 mm - 17.5 mm வரை நீளமும் இருக்கும். இவை சப்தத்தை உண்டாக்க வளர்ந்த ஆண்களில் வினாடிக்கு 120 - 130 முறையும் வளர்ந்த பெண் ணில் 200 முதல் 220 முறையும் குழந்தை களில் 300 - 310 முறையும் அதிர்கின்றன.

நாம் ஒவ்வொருவரும் பிறக்கும்போது எம்முடைய குரல்நாண் மிகச்சிறியதாகவும் விறைப்பாகவும் இருக்கும். நாம் வளரவளர எம்முடைய குரல்நாணும் வளர்ச்சியடையும். மூன்று அல்லது நான்கு வயது வரை ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் குரல் நாணின் வளர்ச்சி ஒரே அளவில் தான் இருக்கும். ஆகையால் நான்கு வயதுவரையுள்ள குழந்தைகளின் குரலில் ஆண் மற்றும் பெண் என்ற வித்தியாசத்தை காண முடியாது. நான்கு ஆண்டுகளுக்கு பி ன்னர் ஆண்களின் குரல் நாண்கள் பெண்களின் குரல் நாண்களைக் காட்டிலும் வேகமாக வளர ஆரம்பித்து விடுகிறன்றன. ஆண்களில் குரல்நாண் வளர வளர அதன் விறைப்புத்தன்மை குறைந்து விடுகிறது. இதனால் குரலில் மென்மை குறைந்து ஒருவித கரகரப்பு தொற்றிக் கொள்கிறது.

ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களின் குரல் நாண்கள் அளவிலும் சரி வளர்ச்சியிலும் சரி சிறியதாக, குறைவாக இருப்பதால் பெண்ணில் குரல்நாண்கள் விறைப்படைந்து குரலில் மென்மை கூடுகிறது. இதனால் தான் ஆண்களின் குரலிலிருந்து பெண்களின் குரல் முற்றிலும் வித்தியாசப்படுகிறது. ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி ஒருவர் பன்னிரெண்டு வயதை எட்டும் போது அவருடைய குரல்நாண் அதன் முழுவளர்ச்சியை எட்டிவிடும். இதன் காரணமாகத்தான் பன்னிரெண்டு வயதிற்குப்பிறகு ஆண், பெண் குரல்கள் முற்றிலும் வேறுபடத் தொடங்குகின்றன.

பெண்களுக்கு மென்மையான குரல் அவர்களுடைய 50-வயது வரை நீடிக்கும். அதன் பின்னர் அவர்களுக்கும் குரல்நாண் நெகிழ்ச்சியடைய துவங்குவதால் ஐம்பது வயதுக்குப் பின்னர் பெண்களில் சிலருக்கு ஆண்களை போலவே குரல் கடினமாக மாறிவிடுகிறது. அறுபது வயதுக்குப் பின்னர் ஆண், பெண் இருபாலாரின் குரல் நாண்களும் ஒன்றுடன் ஒன்று உரசிக்கொள்ள ஆரம்பித்து விடுவதால், அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி குரலில் தளர்ச்சியும் நடுக்கமும் உண்டாகிறது. இதன் காரணமாகத்தான் அறுபது வயதிற்கு மேற்பட்ட சிலருக்கு வார்த்தைகளை தெளிவாக உச்சரிக்க முடியாமல் போகிறது.

நாம் எமது தொண்டையிலுள்ள குரல்நாண்களை தளர்வடையாமல் பார்த்துக்கொண்டோமானால், எம்முடைய குரல் எந்த வயதிலும் மாறாமல் இனிமையாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளலாம், இதற்காக நாம் சிலநடைமுறைப் பழக்க வழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். முக்கியமாக மது அருந்துதல் கூடாது, மது அருந்தும் போது தொண்டையிலுள்ள அனைத்து தசைகளும் பாதிப்படைவதால், மதுவை முற்றிலும் தவிர்ப்பது நல் லது. மேலும் புகை பிடித்தலையும், மாசு நிறைந்த காற்றுகளை சுவாசிப்பதையும் கூடுமானவரை தவிர்க்க வேண்டும், முக்கியமாக தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும் தொண்டையை வற்றச் செய்யாமல் எப்போதும் ஈரமாக வைத்திருந்தால் எந்த வயதிலும் எம்முடைய குரலில் இளமையை கட்டிவைத்திருக்க முடியும்.

குரல்நாண்கள் சப்தத்தை உண்டாக்குவதோடு மட்டுமல்லாமல் அவற்றைப் பண்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகையால் தான் எம்மால் வார்த்தைகளை தெளிவாக உச்சரிக்க முடிகிறது. மனிதனைத் தவிர ஏனைய விலங்குகளில் இந்த குரல்நாண்கள் (Vocal Cords) அமைப்பு இல்லாததால் மற்ற விலங்கு களால் ஒலியை உருவாக்க முடிந்தாலும் கூட அவற்றை பண்படுத்த முடியாமல் போவதால் அவற்றால் மனிதர்களைப் போல ஒலியை தெளிவாக வெளிப்படுத்த இயலுவதில்லை.

## வாசகர் திருமுகம்

### நுண் கலைப் பட்டதாரியின் பணிவான வேண்டுகை...

பட்டதாரிப் பயிலுநனராகப் பயிற்சிக்காகச் சேர்க்கப்பட்ட நாம் பிரதேச செயலகங்களிலே பயிற்சிக்காக இணைக்கபட்டு கடந்த 11 மாதங்களாக சேவையாற்றி வருகின்றோம். இவற்றில் அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் ஆள்சேர்ப்புக்காக படிப்படியாக நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று பட்டதாரிகள் உள்வாங்கப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இருந்த போதிலும் பட்டம் பெற்ற துறைக்கு பொருத்தமில்லாத நியமனங்கள் பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. இதில் அதிகம் பாதிக்கப்படுவது நுண்கலைப் பட்டதாரிகளே!

சிறப்புப் பாடமாக இவற்றைக் கற்று முடித்துவிட்டு அந்தத்துறைக்கு ஒரு துளியும் சம்மந்தம் இல்லாத துறைகளிலேயே உள்ளீர்ப்பு செய்யப்படுகின்றனர். நான்கு வருடங்கள் கற்கவேண்டிய சிறப்புக் கலைப் பாடத்தை பலவித இன்னல்களுக்கு மத்தியில் கற்றதனால் பயனெதுவும் கிட்டவில்லை. இதனால் எதிர்கால எமது கலைப்பயணத்தை தொடர முடியாமலும் வளர்த்துக் கொள்ள முடியாமலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இது எமக்கு மிக மன வேதனையை உண்டு பண்ணுகின்றது.

இதேவேளை, வடமாகாணத்தில் பெரும்பாலும் கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசக் கல்வி வலயங்களில் ஆசிரியர் பற்றாக் குறை காணப்படுவதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிகிறது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்கு விஷேடமாக வடமாகாணக் கல்வித்திணைக்களம் தனக்கு கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட விஷேட அதிகாரத்தைப் பயன்படுத்தி ஓரளவு ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து வருகிறது.

எமது நுண்கலைப்பாடம் மட்டுமல்லாது ஏனைய கலைப்பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. கடந்த 6 வருடங்களாக ஆசிரிய நியமனங்களுக்குள் வடமாகாணத்தில் பட்டதாரிகள் உள்வாங்கப்படாமை துரதிர்ஷ்டவசமே. இவற்றை பட்டதாரிப் பயிலுநர் மூலம் தீர்த்து வைத்துக் கொள்ள முடியும். இதன் மூலம் 3 தசாப்தகால போரால் பாதிக்கப்பட்ட எம் சமுதாயத்தை கல்வியெனும் உயரிய அழிக்க முடியாத சொத்தால் வளர்த்துக் கொள்ளமுடியும். அது மட்டுமல்லாமல் வேதனைப்பட்ட துன்பப்பட்ட, சமுதாயத்தின் மனநிலையை கலைகள் மூலம் ஆற்றுப்படுத்தி புதிய தற்துணிவை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஆகவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவற்றில் கவனம் செலுத்தி இவற்றைப் போக்கி சமுதாய மேம்பாட்டுக்கு ஆவன செய்து தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**நுண்கலைப் பட்டதாரிப் பயிலுநர்,**
**செ.செந்தூரன்.**

### மக்களின் அசௌகரியத்தை புரிந்து கோள்வார்களா பிரதேச செயலர்கள்

பிரதேச செயலகங்களில் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் பெறுவதற்கு பதிவு இலக்கம்தெரியுமாயின் நூறு ரூபாவும் பதிவு இலக்கம் தெரியாது விடின் இருநூறு ரூபாவும் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்ற சுற்றறிக்கை நடைமுறைக்கு வந்து பல மாதங்கள் கடந்த நிலையிலும், தற்போது பிரதிகள் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் விண்ணப்பப் படிவங்களாக பழைய படிவங்களே பிரதேச செயலகங்களில் வழங்கப்படுகின்றன.

இதனால் பொது மக்களாகிய நாம் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டபடி முத்திரைகளை (25/=, 50 /=, 100/=) ஒட்டிச் சென்று அவை போதுமானதல்ல எனத் தெரிவிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக கட்டணம் செலுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. எனவே இவ் வாறான அசௌகரிய நிலையை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள்வழிஏற்படுத்துவர்களா?

**ச.சுப்பிரமணியம்.**
**சுன்னாகம்**

### வாழ்வு முறையினை அமைத்திட ஆலயங்கள் முன்வர வேண்டும்

மனிதன் சிந்தனை செயல் திறன் மிக்கவன். அதுவே அவனை ஏனைய ஜீவராசிகளிலிருந்து பிரித்துக் காட்டுகின்றது. ஆனால் எமது நாட்டிலோ சுயநலமும், அநியாயமும், அக்கிரமமும் அதிகம். தான், தனது என்ற சிந்தனை என்று மாறுகின்றதோ அன்று தான் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படும். எத்தனையோ தடவைகள் பத்திரிகைகள் மூலம் செய்தி பிரசுரிக்கப் பட்டும் ஒலி பெருக்கி பயன்படுத்துவதால் மக்கள் படும் வேதனை பற்றியும் எந்தவொரு கோயில் பரிபாலன சபையும் அதை உணர்ந்ததாகவோ, திருந்தியதாகவோ இல்லை.

இன்னும் அதிகப்படியாக ஒலி பெருக்கியை அலறவிட்டபடியே உள்ளனர். இவர்கள் உண்மையாகவே மனித வர்க்கம் தானா? இவர்களுக்குச் சிந்தனை இல்லையா? இந்த ஒலிபெருக்கி அலறலால் எமது மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது. நோயாளர்கள், வயோதிபர்கள் துன்பமடைகிறார்கள். இதனை இவர்கள் ஏன் உணர்கிறார் களில்லை. வேதத்துக்கு திருமறை எனப் பொருளுண்டு. அதனை அசுத்தமான இடங்களுக்கு பரவ விடக்கூடாது. மந்திரங்கள் புனிதமானவை. அதனை ஒலிபெருக்கியில் ஓதக் கூடாது. இந்த விடயங்களை பரிபாலனசபைக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது குருமாரின் கடமை. மந்திரத்தை ஒலிபெருக்கியில் ஒலிபரப்ப மாட்டோம் என குருமார் தீர்மானம் எடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆலயங்களில் கோபுரம், தேர் முதலிய கட்டுமானப் பணிகளுடன் பரிபாலன சபைகள் நின்றுவிடாது சமூகப் பணிகளிலும் ஈடுபட வேண்டும். அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டும். சமய தத்துவங்கள், கருத்துக்கள் போன்றவற்றை மக்களுக்கு (முக்கியமாக இளம் சமுதாயத்துக்கு) கூறி அவர்களை நெறிப்படுத்தி கட்டுக்கோப்பான வாழ்வு முறையினை அமைத்திட ஆலயங்கள் முன்வரவேண்டும். யோகாசனம், தியானத்தில் ஈடுபடல் மூலம் மன வலிமையையும், உடல் வளத்தையும் பெற ஆவன செய்யலாம். சமூகச் சீரழி வைத் தடுத்திட தங்களால் இயன்றளவு பாடு படலாம். நன்மை செய்யாது விடினும் தீமை யாவது செய்யாதிருங்கள் சிந்தியுங்கள், தெளிவுபெறுங்கள், செயற்படுங்கள்.

**சி.தில்லையம்பலம்**
**தொல்புரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்: மாயை பற்றிய கருத்தும் சங்கர வேதாந்தக் காட்சியும்




சர்வதேச ரீதியில் செல்வாக்கு மிக்க இந்து மெய்யியலாக வேதாந்தம் விளங்குகின்றது. ஈழத்திலும் சார்ஜன்ட் சுவாமிகள் தொட்டு விவேகானந்தரின் வருகை, சுவாமி விபுலானந் தரின் எழுச்சி, கந்தர்மட வேதாந்தமட உருவாக்கம் என்பவற் றினூடாக வேதாந்தம் குறித்த வேகத்தில் பயணித்து வந்துள் ளது. ஆயினும் சைவ சித்தாந்த மரபினை மீறி அது எழுச்சி கொள்ள வில்லை. ஆனால் ஈழத்தில் வேதாந்தம் கற்கைப்புலமாக இன்றுவரை திகழ்ந்து வருகிறது. பாடசாலைகளில் இந்து நாகரிக, இந்து சமய பாடங்களிலும் பல்கலைக்கழகங்களில் இந்து மெய்யியல், இந்து நாகரிகம், மெய்யியல் ஆகிய துறைகளிலும் வேதாந்தம் கற்பிக்கப்படுகின்றது. பல்கலைக் கழகப் புலத்தில் வேதாந்தம் சார்ந்த ஆய்வுகளை பேராசிரியர் கலைவாணி இராமநாதனும், பேராசிரியர் நா.ஞானகுமாரனும் நிகழ்த்தி வருகின்றனர். முதலாமவர் முதுகலைமாணியின் நிமித்தம் சைவசித்தாந்த வேதாந்தக் கடவுள் கோட்பாட்டை ஒப்பீடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை பேராசிரியர் நா.ஞானகுமாரன் முதுகலைமாணி , கலாநிதிப் பட்ட ஆய்வுக்ளாகவும், ஆய்வுப்புலம் சார்ந்த கட்டுரைகளாகவும் வேதாந்த மெய்யியலை ஆராய்ந்து வருகின்றார். இதுவரை எட்டு நூல்களை எழுதியுள்ள இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீடாதிபதியாகவும் (2009-2012) மெய்யியல்துறைப் பேராசிரியராகவும் திகழ்பவர். சுவீடன் ஒப்சலா பல்கலைக்கழகம், அமெரிக்க அரிசோனா பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வருகை தரு பேராசிரியராகக் கடமையாற்றியவர். சைவ சித்தாந்த, வேதாந்த மெய்யியல்கள் சார்ந்த பல ஆழமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர்; எழுதிக்கொண்டிருப்பவர். வேதாந்தம் சார்ந்து அவர் வெளியிட்ட நூல்களில் ஒன்றாக ''மாயை பற்றிய கருத்தும் சங்கர வேதாந்தக் காட்சியும்'' எனும் நூல் திகழ்கின்றது. இந்த நூல் '131' பக்கங்களில் சேமமடுப் பதிப்பகத்தால் அழகுற வெளியிடப்பட்டுள் ளது. யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தகைசால் ஓய்வுநிலைப் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் இந்த நூலுக்கான அணிந்துரையை வழங்கியுள்ளார். இந்த நூல் அறிமுகம், வேதாந்த மாயை, சைவசித்தாந்தமாயை, வேதாந்தத்தில் காட்சி, மாயை, காட்சி பற்றிய விமர்சனங்கள்,முடிவுரை, பின்னிணைப்பு, உசாத்துணை நூற்பட்டியல் I, II ஆகியவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

சங்கரரின் கருத்துக்களை நேரடியாகக் கையாள்வதோடு கைவல்யநவநீதம், திருக்குத்திருசியவிவேகம் உள்ளிட்ட தமிழ் வேதாந்த நூல்களையும் பேராசிரியர் எடுத்தாள்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்து மெய்யியற் பரப்பில் காட்சி, மாயை என்பன பெறும் இடத்தையும், வேதாந்தத்தில் அவற்றின் பெறுமானத்தையும் இந்த நூல் சிறப்புற மதிப்பிடுகின்றது. இந்த வகையில் அறிவாராய்ச்சியற்றளத்தில் பௌதிக வதீதமான மாயையை சங்கரர் எடுத்தாண்டமை பற்றிய மதிப்பீடும் முன்வைக்கப்படுகின்றது.

மாயை என்பதன் சொல்விளக்கம், காரண காரிய உறவு, மாயை பற்றிய சங்கரரின் கருத்தியல், உபநிடத மகாவாக்கியங்களுக்கு அவர் கொடுத்த விளக்கமும் அதனூடாக மாயையை எடுத்தாண்ட விதமும் பிற மெய்யியல்களுடனான ஒப்பீடுகளுடன் எடுத்தாண்டுள்ளார். அவ்வாறே இந்து அறிவாராய்ச்சியில் அடிப்படையில் காட்சி பற்றிய கருத்தியலும் சங்கரர் காட்சியை எடுத்தாளும் விதம் என்பன விளக்கப்பட்டு சைவசித்தாந்தக் காட்சியுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

விசிட்டாத்வைதியான இராமானுஜர் சங்கரர் முன்வைக்கும் மாயை பற்றிய அடிப்படை வினாக்களை முன்வைத்து அதன் பொருத்தமின்மைகளை எடுத்துரைப்ப தையும் அதற்கு சங்கரரின் சீடர்கள் முன்வைக்கும் விளக்கங்களையும் பேராசிரியர் எடுத்துரைப்பதோடு அவை பற்றிய தனது கருத்துக்களையும் முன்வைக்கின்றார். மேலைத்தேய மெய்யியலுக்கு சங்கரர் வேதாந்தம் சற்றும் குறைந்ததல்ல என்பது போல் தேசிகரின் (Paul Deassan) கருத்தை முன்வைத்தலினூடாக அத்வைதக் கோட்பாட்டின் சிறப்பம் சங்களை எடுத்துரைத்துள்ளார். அந்த வகையில் ஈழத்து வேதாந்த மரபில் இந்த நூல் ஒரு மைல்கல்லாக விளங்குகின்றது என்பதில் ஐயமேதுமில்லை.

தி.செல்வமனோகரன், உதவி விரிவுரையாளர்,
இந்து மெய்யியல்- இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

# அமைச்சர் என்றால் என்னவும் செய்யலாம்

சட்டத்தின் முன் யாவரும் சமன். இது எழுத்தில் மட்டுமே இருக்கின்றது. நடைமுறையில் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கின்றது. இருப்பினும் எங்களுக்குள் நாங்களே விதித்துக் கொண்ட கட்டுப்பாடுகளையும் - கட்டுப்பாடுகளையும் ஒரு சிலருக்காக விலக்குவது நல்லதல்ல.

தீவில் இருக்கின்ற அம்மன் கோயிலில் கொடியேற்றத் திருவிழா நடந்து வரு கின்றது. அந்தக் கோயிலின் கொடியேற்றத் திருவிழாவுக்கு கொஞ்சப் பேப்பர்காரர் சென்றிருந்தனர். கொடியேறுவதைப் படம் எடுக்க முயன்ற அவர்களுக்கு கோயில் நிர்வாகத்தினர் காரசாரமான பேச்சுக் கொடுத்தனர். கோயிலுக்குள் ஒளிப்படம் எடுக்கக் கூடாதென்று சொல்லினர்.

பேப்பர்காரர்களும் கோயில் நிர்வாக நடைமுறையை மீறாமல் வெளியே வந்து வாசலில் நின்று கொடியேற்றத் திருவிழாவைப் படம் பிடித்தனர்.

**ஏன்... எதற்கு... எப்படி?**

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு நாள்களின் பின்னர் குறித்த கோயிலுக்கு தொலைக்காட்சிக்காரரும், பாரம்பரிய வைத்தியத்துக்குப் பொறுப்பான அமைச்சரும் சென்றனர். அவர்களுடன் வந்த ஒளிப்படக் காரரை கோயிலுக்குள்ள மூலஸ்தானம் வரையில் படம் எடுக்க கோயில் நிர்வாகம் அனுமதிச்சது.

உடன அங்க நின்ற பேப்பர்காரர், கோயில் நிர்வாகத்திடம் கேக்க, அமைச்சரோட வந்தா நாங்கள் யாரையும் என்னவும் செய்ய விடுவம் எண்டு கதைவிட்டுச்சினம்.

சட்டம் எண்டா அது எல்லாருக்கும் பொதுவாக எல்லோ இருக்க வேண்டும். கோயில் நிர்வாகம் நடைமுறையில் தளர்வை ஏற்படுத்தக் கூடாது. நல்லூரிலயும் ஒரு கோயில் இருக்கு. அங்க அமைச்சர் வந்தாலும்சரி ஆர் வந்தாலும் சட்டம் ஒண்டுதான். ''அம்மன் என்றால் சட்டம் கொஞ்சம் இரங்குமோ!''

நக்[illegible]

# இசை வேள்வியில் சில மணித்துளிகள்...




வசந்த கால ஆரம்பத்தில் சூல் கொண்ட வான் மேகங்களின் தென்றலில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான மண்டப அரங்கு 29.03.2013 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கலா ரசிகர்களின் திரளான வருகைப் பிரவாகத்தால் அலை மோத ஆரம்பித்தது. கலியுகவரதன் -மகேஸ் வரி தம்பதியரின் புதல்வனும், மிருதங்க கலாவித்தகர் இசைக் கலைமணி சுந்தர மூர்த்தி ஐயர் வரதராஜ சர்மாவின் மாண வனுமாகிய செல்வன் பிரார்த்தனனின் மிருதங்க இசை அரங்கேற்ற நிகழ்வில் நுழைகிறோம்.

சபைநாயகனுக்குரிய தகுதிப்பாடுகள் அனைத்தும் நிறைந்து தலைமை தாங்கிச் சிறப்பித்துக் கொண்டிருந்த கலா வித்தகர் சிற்றம்பலம் சிவஞானராஜாவின் இசைப் பாரம்பரிய, கவியாற்றலும் பேச்சாற்றலும் அவைத் தலைவரின் தனித்துவ அம்சங் களாக நிறைந்து அவையடங்க, அவை யடக்கி அலங்கரித்தமை மிக மிகப் பொருத் தப்பாடுடையதாக அமைந்திருந்தது.

நல்லதோர் ரசிகர் குழாம், கலைஞனுக்கு அவன் வெற்றிக்குத் துணை செய்கின்ற ரசிகர்களின் அலைமோதலுடன் சம்பிரதாய பூர்வ அரங்க ஆராதனை, குரு வணக்கம், குரு மற்றும் தன் தாயாரை வணங்கி ஆசி பெற்ற அற்புதம், கலைஞர் கௌரவிப்பு, தலைமை வரவேற்பு, ஆசியுரைகள் அதி அற்புதம்.

மிருதங்க வாத்திய வரலாற்றில் ஈழத்தில் மட்டுமன்றி புலம் பெயர் நாடுகளிலெல்லாம் தமது சீடர்களை கலைப் பசிக்குத் தயார் செய்து அனுப்பிக் கொண்டிருக்கும் பிதா மகன் கலாபூஷணம் சின்னராசா ஆசானின் மானசீக பிரசன்னத்துடன், அவரது மூத்த வாரிசாக நீண்ட கால கலைச்சேவை ஆற்றிக் கொண்டு, நீண்ட இடை வெளியின் பின் செல் வன் பிரார்த்தனனின் அரங்கேற்றத்தை வழங் கி யுள்ள கலாவித்தகர் இசைக் கலை மணி சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜ சர்மா எளிமை யும் குருபக்தியும் தன்னடக்கமும் கொண்டவர்.

வழமை போல அரங்கிசையில் அணி செய் கலைஞர்கள் அற்புதமான இணைந்த சேவையால் அரங்கை அதிர வைத்து அவையைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த காட்சியில், இசைமணி தவமைந்தன் றொபேட்டின் கம்பீர கானாமிர்தமானது இசை ஞான திலகம் மூத்த கலைஞர் விரலிசை கலைமணி சிவசுந்தர சர்மாவின் கெஞ்சும் கெஞ்சிராவின் நளினத்தோடு முது தத்து வமானி மாதவனின் அதிரடியான கட வாத்தியத்தோடு கலாவித்தகர் செந்தூரனின் உயிரோசை இணைந்தொலிக்கும் முகர் சிங்கின் மெல்லியல் இசையோடு, மாதா வாம் சுருதியை வழங்கிய இசைமணி ரஜீவனின் கருமமே கண்ணாகத் துணை வந்த சேவையும் ஒன்றித்து இளம் கலை ஞனின் மிருதங்க அரங்கேற்றத்தை நிறைவாக வழங்கியமை போற்றத்தக்கது.

நீண்ட பாரம்பரியம் ஒன்றிலே தன்னையும் ஒருவனாக இணைத்துக் கொண்டு அரங்கப் பிரவேசம் செய்யும்பிரார்த்தனன், பணிவும் அடக்கமும் கொண்ட சிறியவன் எனினும், பல்கலைக்கழகப் புகுமுக மாணவனாக விஞ்ஞானத்துறையில் தெரிவாகிய நிலை யிலும், நல்லதோர் மகாஜன, கொக்குவில் இந்துவின் மைந்தனாகக் கலை வாழ்விலும் நடைபோட ஆயத்தமான இனிய பொன் னாள் அது. பெற்றவர்களுக்குப் பெருமை சேர்த்த உயர் கலாசாரம் பேணும் கலை ஞனாக இவன் இனம் கண்டு அரங்கில் முத்லில் மோகன இராக வர்ணத்துடன் ஶ்ரீநிவாச ஐயங்காரை வந்தித்து சௌக மத்திம திஸ்ர அலங்காரங்களுடன் களைகட்டும் அரங்கை பத்திபூர்வமாக நிறைத்திருந்தான். தொடர்ந்து ஆபோகியை அருகழைத்து நாயகன் விநாயகனை அரவணைத்து பார்வதி மைந்தனை தவமைந்தன் ஆரா தித்த அழகே தனி. அரங்கே அடங்கி நிறைந்து கரகோஷித்த உயிர்ப்புள்ள இரசனை.

நர்மவதியில் அம்புஜம் கிருஷ்ணாவின், நாயக, நாயகி பாவத்தில் ஓடோடி வந்தேன் கண்ணா- மத்திம கால சாகித்யத்தைத் தொடர்ந்த குறைப்புக்கள் தாடு பிரயோகங்கள் வக்ர ஜண்டை பிரயோக சல்லாபம். இதழோரம் சுழியோடும் முறுவலை எம் முன்னே தந்து சென்றமைக்கு ஒரு சபாஷ்! கொடுத்து வாங்கல்கள், சின்னச்சின்ன சில் மிஷங்கள், அற்புதமான கோர்த்து வாங் கல்கள், அர்த்த புஷ்டியான செய்திப் பரிமாற் றங்கள், தொடர்ந்து தியாகப் பிரம்மத்தின் நளினகாந்தியின் குழைவும் துடிப்பும் ஒருங்கே இணைந்து மனவிசால- மனம் விரும்பும் உருப்படி.

இளைஞர் யுவதிகளை ஒரு காலத்தில் ஆட்டிப்படைத்த மனம் விருப்புதே வலம் வந்தது. தொடர்ந்து மனோ தர்மத்துக்கு லய விந்நியாசத்துக்கு சபை நடுவே திறமையை நிலைநாட்டும் இராகம், தாளம், பல்லவியில் வரதராஜ சர்மாவின் பல்லவி-காசி விநாயகனை நினைந்து உருகிய காட்சி. ரேவதியின் சம்போ- சுயம்புவாய்த் தோன்றி பாரதியின் சொல்லவல்லாயோ இராக மாலிகையுடன், யமன் கல்யாணியில் முகசேவை கேட்டு கிருஷ்ணனை வேகமாய் கூவியழைத்து தவமைந்தனின் வர்ண ரூபினி தில்லானாவில் திழைத்து நிறைவாக பாகேஶ்ரீயில் ஆறுமுகமான பொருளை ஆராதித்து சுபமாக அரங்கு நிறைவுற்றது. அற்புதத்தின் அறுவடையின் இறுதியில் பெற்றவர்களுக்கு ஒரு செய்தி. இன்றைய இளையோரை வளர்க்கும்போதே ஒரு கலையையும் கூட வளர்த்தால் அவர்கள் நடுத்தெருவுக்கு வந்து தம்மைத் தொலைக்க வேண்டி வராதல்லவா?

திருமதி பகீரதி கணேசதுரை,
யா/மகாஜனக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org